கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 17

உ

சிவமயம்

# திருப்பாசுர விளக்கம்

திருஞானசம்பந்த நாயனுர் அருளிய

**திருப்பாசுரமும்**

அதற்குச் சேக்கிழார் நாயனுர் அருளிய

**விரிவுரையும்**

இவற்றின் விளக்கமும் அடங்கியுள்ளன

விளக்கவுரை ஆசிரியர்
கோவை வழக்கறிஞர் - சிவக்கவிமணி
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை

கோவைத் தமிழ்ச் சங்கம்
கோயமுத்தூர்
11—8—1949

உரிமை ஆசிரியர்க்கே] [விலை ரூ. 0—8—0

1-00

# மதிப்புரை

## தூத்துக்குடி - சித்தாந்தப் பேராசிரியர்
## உயர்திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்

சிவஞானச் செல்வராகிய சிவக்கவிமணியவர்கட்கு. வணக்கம் பல. நலன் அறியும் அவாவுடையேன். தாங்கள் அன்புடன் அனுப்பிய "திருப்பாசுர விளக்கம்" பெற்று மகிழ்ந்தேன். இத்தகைய உரையொன்று வெளிவருதல் வேண்டும் என்பது அடியேனது நீண்டகால அவா. அதனை நிறைவேற்றுதற்குத் திருவருள் இப்பொழுதுதான் திருநோக்கம் செய்தது போலும். உரையின் அருமை பாராட்டுதற்குரியது எனக் கூறுதல் மிகையென்றே அடியேன் கருதுதலின் ஒன்றும் கூறவில்லை. மன்னித்தருள்க.

திருஞான சம்பந்தர் மொழிந்ததிருப் பாசுரத்திற் சிறப்புற் றோங்கும்
பெருஞானப் பரப்பெல்லாம் விரித்துரைத்தார் சேக்கிழார் பெருமா னந்த
இருஞானப் பெருமக்கள் துணைமலர்த்தாள் தலைக்கொண்டெம் போல்வா ருய்ய
ஒருஞான விளக்கவுரை வழங்குசிவக் கவிமணியார் ஓங்க மாதோ.

---

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறை ஆசிரியர்
சித்தாந்தக் கலாநிதி - வித்வான்
திரு. ஔவை - சு. துரைசாமி பிள்ளை அவர்களின்

## குறிப்புக்களும் திருத்தங்களும்

2732. (1) அன்ன - அருளுந் திறமும் ஆதி மாண்பும். இன்ன - கோட்பாலவும் வினைகுறுகாமையும்.

(2) கோட்பாலன: கோள் - செயற்கையாற் கொள்ளப்படுவது; மூலமலம் (இயற்கை) சகசமாதலின் கோளும் கோட்பாலதும் ஆவதில்லை. பசுத்துவங் காரணமாகப் புணரும் உடல் கருவி நிலம் நுகர்வு என்பன கோளும் கோட்பாலவுமாம். உடம்பிற்குக் கோள் என்பதும் ஒரு பெயர். "ஏற்ற கோட்பால" என ஆசிரியர் பெருமான் விசேடித்திருப்பது குறிக்கற்பாலது.

2733. எடுத்தோத்து, ஏது, எடுத்துக்காட்டு என்பன, செய்யுளாதலின் மாறி நின்றன.

2735. பிறப்பின்னெறி யென்றது "வாழ்நாள் வழி" (குறள்) என்றற் போல நின்றது.

2736. வேண்டுதல் வேண்டாமைகளில் வேண்டாமை நீக்கப்பட்டமையின், "வேண்டுதல்" "விரும்பும் வேட்கைய"வாயிற்று; போற்றுதல், ஓம்புதல் மேற்று. இது சாதுக்கட்கு இலக்கணம் கூறிற்று.

2733. இன்னதன்மையை—ஐ, சாரியை. ஏதுவை வலியுறுத்துவது எடுத்துக் காட்டாதலின், சிறப்புடைய ஏனை இரண்டுமே, திருப்பாசுரம் கூறுவதாயிற்று.

2734. வாயிற் காட்சி, மானதக் காட்சி என்றாற் போலத் "தோன்றுகாட்சி" எனச் சிறப்பித்தார். இறைவன் சிவஞானத்தாற் காணப்படுதல் பற்றி இவ்வாறு கூறினர்; எவ்வாற்றானும் தோன்றாக் காட்சியுடையது சூனியமாம்.

வாயிற் காட்சியினும் மானதக் காட்சி, யோகக் காட்சி முதலியவற்றில் எழும் சோதி மிக்கு நிற்றல் விளங்க, "சுடர்விட்டுளன் எங்கள் சோதி" யென்றார். ஞாயிறு முதலிய புறவொளியின் நீங்காத அகவிருளைப் போக்கும் அருளொளியின் மாண்பு தெரிவித்தவாறு.

அன்பு கண்ணாக அகத்துள் காண்க என்பார் அன்பின் அகத்துள்ளாக்கி வாழ்மின் என்றார். அன்பு - சாதனம்.

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 17

உ

சிவமயம்

# திருப்பாசுர விளக்கம்

திருஞானசம்பந்த நாயனுர் அருளிய

## திருப்பாசுரமும்

அதற்குச் சேக்கிழார் நாயனுர் அருளிய

## விரிவுரையும்

இவற்றின் விளக்கமும் அடங்கியுள்ளன

விளக்கவுரை ஆசிரியர்

கோவை - வழக்கறிஞர் - சிவக்கவிமணி

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.

இராயப்பேட்டை, சென்னை

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

11—8—1949

உரிமை ஆசிரியர்க்கே]

[விலை ரூ. ~~0—8—0~~ 1—00

## முன்னுரை

ஆளுடைய பிள்ளையார் புராணத்தினுள் மதுரையில் சமண வாதத்தினுள் இறுதியதாகிய புனல்வாதத்தின் பொருட்டுப் பிள்ளையார் "வாழ்க அந்தணர்" என்று தொடங்கும் "திருப்பாசுரப்" பதிகத்தைக் கட்டளையிட்டருளி அதனை ஏட்டினில் எழுதுவித்து ஆற்றினில் இட, அவ்வேடு ஆற்றினீரினை எதிர்த்துச் சென்று திருஏடகத்தில் தங்கியது. அத்திருப்பதிகம் சைவ சித்தாந்த உண்மைகள் நிரம்பியதொரு நூலாகப் பரசமய நிராகரிப்பும் சைவசமய சுபக்கத்தாபனமுமானதொரு முதநூலாக அமைந்துள்ளது. அதன் பெருஞ் சிறப்புக் கருதியே ஆசிரியர் சேக்கிழார் பெருமான் 23 பாட்டுக்களாலே அதற்கு விரிவுரை வகுத்தருளினர். (821 - 2719 = 844 - 2742) அவற்றிற்குரிய விளக்கவுரைப் பகுதியை யாவரும் எளிதிற் பெற்றுப் பயன்பெறுமாறு தனியாய் எடுத்துத் "திருப்பாசுர விளக்கம்" என்ற பெயரால் வெளியிடப் பெறுகின்றது. இத்திருப்பாசுரம் வேத சிவாகமங்களின் சாரமாய்ச் சைவ சித்தாந்த முதனூல் என்னும்படி விளங்குகின்றது காணலாம்.

கோவைத் தமிழ்ச் சங்கம்,
சேக்கிழார் நிலையம்,
11—8—'49

C. K. சுப்பிரமணிய முதலியார்,
விளக்கவுரை ஆசிரியர்.

---

# கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்


| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெரியபுராணம்—உரையுடன் I பகுதி - திருமலை - தில்லை வாழந்தணர் சருக்கங்கள் (அச்சில்) | ... | 10 | 0 |
| ஷை II பகுதி - இலைமலிந்த - மும்மையாலுலகாண்ட சருக்கங்கள் | ... | 12 | 8 |
| ஷை III பகுதி 1, 2 பாகங்கள் சேர்த்துக் கட்டியது | ... | 12 | 8 |
| ஷை IV பகுதி - திருஞானசம்பந்த நாயனார் புராணம் (1—631) | ... | 12 | 8 |
| கண்ணப்ப நாயனார் புராணம்—உரையுடன் | ... | 2 | 0 |
| திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்—உரையுடன் | ... | 1 | 8 |
| சண்டேச நாயனார் புராணம்—உரையுடன் | ... | 0 | 12 |
| காரைக்காலம்மையார் புராணமும் அருணூல்களும்—உரையுடன் | ... | 1 | 8 |
| அப்பூதி நாயனார் புராணம்—உரையுடன் | ... | 0 | 8 |
| கருவூர்த் தேவர்—ஆராய்ச்சி நூல் | ... | 0 | 8 |
| கண்ணப்ப நாயனார் சரிதம்—தலத்தேவாரங்களுடன் | ... | 0 | 6 |
| திருநாவுக்கரசர் சரிதம்—ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் | ... | 0 | 6 |
| சுப்பிரமணியர் திரிசதார்ச்சனை (கிரந்தத்திலும் தமிழிலும்) | ... | 0 | 4 |

உ
சிவமயம்

# திருஞானசம்பந்த நாயனார் புராணம்

## திருப்பாசுர விளக்கம்

மதுரையிற் சமண வாதத்தில் வைகை ஆற்றில் இட்ட ஏடு நீர் எதிர் சென்று சைவவாய்மை காட்டிப் பரசமய நிராகரணமும் சைவத்தாபனமும் செய்யும்படி ஆளுடைய பிள்ளையார் அருளிய **திருப்பாசுரம்**, பதிகமும், அதற்கு ஆசிரியர் அருளிய **விரிவுரையும்**, இவற்றின் **விளக்கமும்**.

**(2715—2744 = 817—846)**

**2715.** வேறொரு செயலி லாதார் வெருவுற்று நடுங்கித் தம்பால்
ஈறுவந் தெய்திற் றென்றே மன்னவ னெதிர்வந் தெய்தி,
ஊறுடை நெஞ்சி லச்சம் வெளிப்பட வொளிப்பார் போன்று
"மாறுகொண் டவரு மிட்டால் வந்தது காணு" மென்றார். அகஎ

(இ - ள்) வேறொரு...நடுங்கி - வேறு செயல் ஒன்றும் இல்லாதவர்களாகிய அமணர்கள் வெருக்கொண்டு நடுங்கி; தம்பால்...எய்தி - தமக்கு முடிவு வந்துவிட்டதென்றே துணிந்து அரசன் முன்பு வந்து சேர்ந்து; ஊறு உடை...போன்று - புண்பட்ட தமது நெஞ்சில் பயம் வெளிப்பட்டு வர அதனை மறைப்பார்போல; மாறு... என்றார் - "மாறுகொண்ட பிள்ளையாரும் ஏட்டினை இட்டால் அதன் பின்னை வரும் முடிவினைக் காணுங்கள்" என்று சொன்னார்கள்.

(வி - ரை) வேறொரு செயல் இலாதார் - வேறு செயல் ஒன்றும் எண்க; செயல்-செயத்தக்கது; செய்யக்கூடியது. முற்றும்மை தொக்கது.

வெருவுற்று - வெருவுதல் - சடுதியில் வரும் அபாயத் தோற்றத்தால் வரும் மன நிகழ்ச்சி. "வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய்" (1952).

என்றே - ஏகாரம் தேற்றம். எனவே துணிந்து.

**தம்பால் ஈறுவந்து எய்திற்று** - தம்பால் - நான்கனுருபின் பொருளில் வந்தது; தமக்கு. ஈறு - முடிவுகாலம்; சாங்காலம்,

**ஊறு உடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட** - ஊறு - மூன்று முறையும் தோல்வியும், வாய் சோர்ந்து கழுவிலேற ஒட்டிய நிலையும், பற்றிய எண்ணம்; **உடை-உடைய** - ஈறு கெட்ட பெயரெச்சம்; ஈறு வரும் என்ற எண்ணத்தால் நெஞ்சம் கெட்டதனால் இங்குப் பெயரெச்சமும் ஈறு கெட்டது. ஊறு உடை - ஈறு வரும் என்ற எண்ணத்தால் - ஊற்றினால் - உடைந்த என்றலுமாம்.

**ஒளிப்பார் போன்று - என்றார்** - நெஞ்சினின்றும் வெளியே அச்சக்குறி காட்ட அதனை மறைப்பவர்போல் "மாறு...காணும்" என்றார். ஒளித்தலாவது தமக்கு வரும் முடிவுபற்றிய எண்ணத்தையும் அதன் விளைவாகிய மெய்ப்பாடுகளையும் புறத்தில் தோற்றாமல் இம்மொழிகளால் மறைத்தல்; இம்மொழிகளால் இன்னும் வாதம் முடியாதது போலவும் அதனால் முடிவு நிச்சயமில்லாததுபோலவும் பேசுதல்.

**மாறு...வந்தது காணும் - மாறுகொள்ளுதல்** - தங்களை எதிர்த்துநிற்றல். **இட்டால் வந்தது காணும்** - அவரும் ஏட்டினை நீரில் இட்டால் அதுவும் ஒருவேளை ஓட்டிய படி அங்கு நில்லாது நீரினோடு சென்றுவிடுமாகில் தோல்வி யிருபுறமுமாகுமாதலின் அதன் பின்பே நாங்கள் தோற்றமை நிச்சயிக்கவேண்டும் என்பது குறிப்பு. இதனால் தமது தோல்வியும் அழிவும் நிச்சயம் என்று மனத்துள் துணிந்துகொண்ட நிலையினையும்,

அதனால் நேர்ந்த மெய்ப்பாடுகளையும் மறைத்தமை காண்க. காணும் - அரசனையும் மந்திரியாரையும் நோக்கிச் சமணர் கூறியது. காணும் - செய்யுமென்னும் வாய்ப்பாட்டு முற்று முன்னிலை ஏவற் பன்மைக்கண்ணும் அருகி வருதல், "நீர் ஆக்கியவிக் கருவியினைத்தாரும்" (2348) என்றாற்போல்வனவற்றிற் காண்க. மறைப்பார் போன்று - மறைக்க முயன்றார்களேயன்றி மறைக்கக் கூடவில்லை என்பது குறிப்பு.

மாறுகொண்டிடநும்...காண்டும் என்பது பாடமாயின் பிள்ளையாரை நோக்கி அருகர்கள் உரைத்ததாக உரைத்துக்கொள்க. 817

2716. மாசுசே ரமண ரெல்லா மதியினின் மயங்கிக் கூற
ஆசிலா நெறியிற் சேர்ந்த வரசனு மவரை விட்டுத்
தேசுடைப் பிள்ளை யார்தங் திருக்குறிப் பதனை நோக்கப்
பாசுரம் பாட லுற்றார் பரசம யங்கள் பாற. அகஅ

(இ - ள்) மாசு...கூற - அழுக்கு மிகுந்த அமணர்கள் எல்லாரும் (முன் கூறியபடி) மதிமயங்கிக் கூற; ஆசிலா...விட்டு - குற்றத்தை நீக்கும் நெறியில் சேர்ந்த அரசனும் அவ்வமணர்களை விட்டு; தேசுடை...நோக்க - (சிவஞான) ஒளியுடைய ஆளுடைய பிள்ளையாருடைய திருவுள்ளக் குறிப்பு யாதோ என்று தெரியும்படி அவரை நோக்க; பாசுரம்...பாற - பரசமயங்களால் நேர்ந்த மயக்கம் அழியும்படி திருப்பாசுரத்தினைப் பாடியருளலுற்றனர்.

(வி - ரை) மாசு சேர் - மாசு - அகத்தும் புறத்தும் மிகச்சேர்ந்த அழுக்கு. உண்மாசு - உண்மைஞான மின்மையாலும், பொய் - வஞ்சனை முதலிய தீக்குணங்களுண்மையாலும் மிகுவதாயிற்று; புறமாசு - உடல் கழுவாமை - வெயிலினிற்றல் முதலியனவாய்ச் செய்தக்கவல்லாத புறச்செயல்கள் செய்தலானும் செய்தக்க புறச்செயல்களில்லாமையானும் மிகுவதாயிற்று; "துன்னுமுழு உடற்றுகளாற் சூழுமுணர் வினிற்றுகளால், அந்நெறியிற் செறிந்தடைந்த வமண்மாசு கழுவுதற்கு" (2549) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. சேர் - மிகும். அவர் வழக்குக்களால் நாளும் மிகுவதாயிற்று என்பது.

மதியினில் மயங்கிக் கூற - மதிமயக்கம் காரணமாக அவ்வாறு கூற. மதிமயக்கம் - முன் இரண்டு பாட்டுக்களாலும் விரிக்கப்பட்டது; பிள்ளையார் இடும் ஏடு நீரினிலும் வெற்றிபெறும் என்பதனை மறுகினிற் கண்ட சாதாரண மாந்தரும் முன்னிகழ்ச்சிகளின் முடிவினால் உணர்ந்து கூறினர். 2704, 2705 பார்க்க. அவ்வாறிருப்பவும் கலைஞானமுடைமையோடு முன் அனுபவத்தால் கண்கூடாகக் காண்பதும் பெற்ற அமணர் "இட்டால் வந்தது காணும்" என்று ஐயப்பாடு பெற அம்முடிவு இனிக் கண்டறியும் பொருளாகக் கூறியது அவர்கள் மதிமயங்கிய காரணத்தாலாயது என்று அரசன் உணர்ந்தான் என்பதாம்.

ஆசிலா நெறியிற் சேர்ந்த அரசனும் அவரை விட்டு - ஆசு இலா நெறி - குற்றத்தை இல்லையாகச் செய்யும் நெறி; சிவநெறி. மாசுசேர் என்று அமணரைக் கூறியதற்கேற்ப அவரினின்றும் நீங்கி அரசன் சேர்ந்த இச் சிவநெறி அக்குற்றமேயன்றிப் பிறவியாகிய தீமையினையும் இல்லையாகச் செய்வதாம் என்று இவ்வாறுரைக்கப்பட்டது; அது ஆசுசேர் நெறியாதலின் இஃது அவ்வாறு குற்றமிலாத - குற்றமற்ற நெறி என்றுரைப்பினுமமையும். சேர்ந்த - என்றதனால் அந்நெறியினை விட்டு இந்நெறியிற் சேர்ந்த கொள்கைபற்றிய புடைபெயர்ச்சி குறிக்கப்பட்டது.

**அவரை விட்டு** - "அறிவிலாப் பிணங்களை நா மிணங்கிற் பிறப்பினொடு மிறப்பி னொடும் பிணங்கிடுவர்; விடுநீ" (சித்தி - 12 - 2); இதனோடு அமணரின் சார்பும் தொடர்பும் அறவே நீக்கப்படுதலின் முடிவாக இங்கு அவரை விட்டு என்றார்.

**தேசு உடைப் பிள்ளையார்** - தேசு - சிவஞானப் பேரொளி; "பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்" (2969); தேசு - திருநீற்றினொளியுமாம்.

**மாசுசேர் அமணர் - ஆசிலா நெறி - தேசுடைப் பிள்ளையார்** - புறச்சமயத் தீமையும், அதனைப் போக்கும் சாதனமாகிய நெறியும், அதனை விளைத்துத்தரும் ஆசாரியரும், அவர்க்கு உள்ளே துணைநின்று அருளும் சிவனருளும் கூறப்பட்ட நயம் காண்க. இவ்வாறு இங்குக் கூறியது இனி அரசன் ஞானோபதேசம் பெறும் பக்குவ முடையனாதல் குறிக்க என்க. மேல்வரும் இரண்டு பாட்டுக்களாலும் இக்கருத்தினை ஆசிரியர் விளக்குதல் காண்க.

**திருக்குறிப்பு** - திருவுள்ளக் குறிப்பு. **நோக்குதல்** - அதனை இன்னதென்றறியும் கருத்து விளங்க அவரைப் பார்த்தல்.

**திருக்குறிப்பினை நோக்குதல்** - "பிள்ளையாரும் அருகர்நீரும் விதித்தஏடு இடுக" (2711) என்று முன்னரே ஆணை தந்த அரசன் ஈண்டுப் பிள்ளையாரது திருக்குறிப்பினை நோக்கியதென்னையோ? எனின், முன்னர் "ஏடு இடுக" என்று ஆணை தந்தது இரு திறமும் ஒட்டி இசைந்த வாதத்தினை அவர் இசைந்தவாறே நிகழ்த்துவிக்கும் முறையில் அரசன் என்ற நிலையில் நின்று செய்த செயல்; ஈண்டு அவ்வாதத்தினுள் அமணர் முந்திக்கொண்டு தமது தோல்வியை நிச்சயப்படுத்திவிட்டார் ஆதலான் அதன்மேல் பிள்ளையார் செயல் வேண்டப்படாமலே வாதத்தின் முடிவு கூறலாகும் என்ற நிலை யினை அரசன் உளங்கொண்டனன்; ஆனால் "மாறுகொண் டவரு மிட்டால் வந்தது காணும்" (2724) என்று அமணர் கேட்டதனால் தனக்கு வேண்டாவிடினும் நடுநிலை நின்று அச்செயலிற் பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்பினைத்தெரியவேண்டினன் அரசன். அற்றாயின் ஏடு நீரும் இடுக என்று கூறி விடாமல் நோக்கியறிய முற்பட்டது யாது கருத்து எனின்? தீய அமணர்சார்பு விட்டுப் பரிபக்குவமடைந்தமாணவகன் என்ற நிலை யினை அடைந்தமையால் ஆசாரியரது திருக்குறிப்பினை எதிர்நோக்கி விண்ணப்பித்தபடி என்க. இது "முன்னைவல் வினையு நீங்கி முதல்வனை யறியும் தன்மை, துன்னினான் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே" (2717) என அரசனது நிலையினை யிரு வினை ஒப்பும் மலபரிபாகமும் வந்த தன்மைபற்றி ஆசிரியர் அறிவிப்பது காண்க; அது பற்றியே அவனுக்குப் பிள்ளையார் ஞானோபதேசம் செய்தமையும் உணரப்படும்.

**பாசுரம்** - திருப்பதிகம்; "வாழ்க அந்தணர்" என்ற பதிகத்திற்குச் சிறப்புப் பெயர்.

**பரசமயங்கள் பாற** - பாறுதல் - அழிதல்; இங்கு அழிதல் என்றது பரசமயங் களின் தீமைகளும் மயக்கமும் ஒழிய மறுக்கப்படுதலேயன்றிச் சமயங்கள் அழிதல் என்பதன்று. இது முன்னரும் விளக்கப்பட்டது; மேலும் உரைக்கப்படும். 2718 முதல் 2741 வரை வரும் பாட்டுக்கள் காண்க.

பரசமயங்கள் என்று பொதுவாகக் கூறியதனால் புறப்புறம், புறம், அகப்புறம் என்ற மூக்கூற்று அறுவகைச் சமயங்களின் நிலைகளும் குறிக்கப்பட்டன. "அறுவகைச் சமயத்தி னருந்தவரும் புக்கதற்பின்" எனப் பின்னர்க் கூறுதலின் அகச் சமயத்தார் தழீஇக்கொள்ளற்குரியார் என்க. சமணத்தை முன்னரே சுரவாதம் - கனல்வாதம் - புனல்வாதம் என்ற மூன்றானும் வெற்றிகொண்டு சைவமேன்மை நாட்டினர்; ஆயின் அற்றைநாட் சமணத்தின் பொய்மை அற்புதச் செயல்கள்பற்றி நெருப்பினும் நீரினும் கொண்ட வெற்றியின்மூலம் காட்டப்பட்டதன்றி, அதன் கொள்கைகளின் கீழ்மைகள்

மறுக்கப்படாது நின்றனவாதலின் அவற்றையும் ஏனைச் சமயங்களின் கொள்கைகளை யும் மறுத்துச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தின் உண்மைத் தன்மையினை நிலைநாட்ட வேண்டியதாயிற்று ; இதுவே ஆளுடைய பிள்ளையாரது திருஅவதாரத்தின் தத்துவ மாம். "பரசமய நிராகரித்து நீறாக்கும் புனைமணிப்பூண் காதலன்" (1917) ; அற்பு தச் செயல் நிகழ்ச்சியால் காட்டப்படும் வெற்றி வேறு ; உயர்வு தாழ்வுகளை எடுத்துக் காட்டி நிலைநாட்டுதல் வேறு. இதனைப் பின்னர் "எஞ்சலின்மந் திரவாத மன்றி யெம்மோ டெதிர்ந்துபொருட் பேசுவதற் கிசைவ தென்று" போதிமங்கையில், அன்ப ரது அத்திரவாக்கால் தமது தலைவன் இடிவீழ்ந்து இறந்தது கண்டபின்னரும், புத்தர் கூறிச் சாத்திர வாதத்தினை மேற்கொண்டு வந்தமையா லறிந்துகொள்க.

பாகரம் பாடலுற்றூர் பரசமயங்கள் பாற - எனவே முன் அருளிய பதிகங்களா லும் அருட்செயல்களாலும் பரசமயங்களின் கொள்கைகளின் தாழ்வான தன்மைகள் சாத்திர வாதம்பற்றி எடுத்துக் காட்டப்படாமல் எஞ்சிநின்றன என்பதும், அதனையே முன்வைத்து இத்திருப்பதிகம் அருளிச் செய்யப்பட்டதென்பதும் போதருதல் காண்க. திருக்குறிப்பு என்றதுமிது. இது பரபக்க நிராகரிப்பு எனப்படும். சிவாகமங்களுள்ளும், சிவஞானசித்தியார் பரபக்கத்துள்ளும், சங்கற்பநிராகரணத்துள்ளும் இதன் விரிவெல் லாம் கண்டுகொள்க. இத்திருப்பதிகத்தால் இவ்வாறு பரபக்க மறுப்பு மட்டுமேயன்றிச் சைவவுண்மைத் திறத்தினை நாட்டுதலாகிய சைவத் தாபனமும் (நீறாக்குதல்) உடன் செய்தருளினர் பிள்ளையார் என்பதும் (2718) கண்டுகொள்க.

பரசமயங்கள் - "இச்சமயங்களெல்லாம் புறப்புறச் சமயமும், புறச்சமயமும், அகப்புறச் சமயமும் ஆம். அவற்றுள் புறப்புறச் சமயம் : உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதமென அறுவகைப்படும் ; புறச்சமயம் : தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப்படும் ; அகப் புறச் சமயம் : பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என அறுவகைப்படும் ; (அகச்சமயம் - பாடாணவாத சைவ முதற் சிவாத்துவ சைவ மீறாக அறுவகைப்படும். அவை பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்பன.) இவையெல்லாம் அகம் புறம் என்று இரண்டாய் அடங்குமாறும் ஓர்ந் துணர்க....

"ஈண்டுக் கூறிய சமயத்தாருள், உலகாயதர் முதல் ஆருகதரீறாகிய அறுவரும் வேதஞ் சிவாகம மிரண்டனையும் நிந்திக்கும் நாத்திகராயினும், ஒரு நூலென்றும் பிர மாணமென்றும் கொண்டு ஒருநெறிக்கண்ணே நிற்றலான் அவர் சமயம் புறப்புறச் சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன ;

"தார்க்கிகர் முதற் பாஞ்சராத்திரிகளீறாகிய அறுவரும், வேதம் பிரமாணமெனப் பொதுவகையாற் கொள்ளினும், அவருள் தார்க்கிகர் தன்னாற் பிராமாணியங் கொள் ளாமையானும், வேதப் பொருளோடு முரணிப் பொருட்டன்மை கோடலானும் ; மீமாஞ்சகர் கருமகாண்டமாகிய வேதமாத்திரைக்கே பிரமாணங்கொண்டு ஞானகாண்ட மாகிய உபநிடதங்களை இகழ்தலானும் ; ஏகான்ம வாதிகள் ஞானகாண்ட மாத்தி ரைக்கே பிரமாணங்கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும் ; ஏனை மூவரும் வேத வாக்கியங்களிற் றத்தம் மதத்திற்குப் பொருந்துவன மாத்திரையே எடுத்துக்கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளாமையானும், வேதப் புறமாகிய நூல்களைப் பிரமாணமெனக் கோடலானும் ; இவ்வறுவருஞ் சிவாகம நிந்தகராகலானும் இவர் சமயம் புறச்சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன ;

"பாசுபதர் முதலிய ஐவரும், வேதஞ் சிவாகம மிரண்டற்கும் பொதுவகையாற் பிரமாணங் கொள்ளினும், அவ்விரண்டற்கும் புறமாகிய பாசுபத முதலிய நூல்கட்குச் சிறப்பு வகையாற் பிரமாணங் கோடலானும்; வேதஞ் சிவாகம மிரண்டினும் ஆகா வென விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலானும்; ஐக்கியவாத சைவர் வேதஞ் சிவாகம மிரண்டற்கும் சிறப்புவகையாற் பிரமாணங்கொண்டு, அவற்றில் விலக்கியன ஒழித்து விதித்தவழி ஒழுகுவாராயினும் எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரணமாகிய ஆணவமலத்துண்மை கொள்ளாமையானும், அதனுண்மை சாதிக்கும் சிவாகம வாக்கியங்களை இகழ்தலானும் அவ்வறுவகைச் சமயமும் அகப்புறச்சமயமென வேறு வைத் தெண்ணப்பட்டன;

"ஏனைப் பாடாணவாத சைவர் முதலிய அறுவரும் பொருளுண்மை யெல்லாஞ் சித்தாந்த சைவரோ டொப்பக்கொள்ளும் அந்தரங்க உரிமையுடையராயினும், அவ்வப் பொருள்கட்குக் கூறுந் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர் அவர் சமயம் அகச்சமயமென வேறுவைத் தெண்ணப்பட்டன;

"இவ்வாறு நால்வகைச் சமயங்கட்குஞ் சித்தாந்த சைவத்தோடுளதாகிய வேற்றுமைத் தாரதம்மியங் கண்டுகொள்க.

"அகச்சமயமாறனுட் சிவாத்துவிதசைவமாவது நிமித்தகாரணத்துக்குப் பரிணாமங் கூறுவதாகலின், அது நிமித்தகாரண பரிணாமவாதம் எனப்படும்; அங்ஙனங் கொண்ட சிவாத்துவித சைவர் கருத்துணராதார் சிவாத்துவித சைவமாவது யாதோ எனவும், "நிகழ்சிவாத் துவிதாந் தத்துக் குலவின ரளவளாவா" என்றமையின், இறுதிக்கண் எடுத்தோதப்படும் சுத்தசைவம்போலு மெனவும் மயங்குவர். சுத்தசைவம் நுட்பப்பொருளுணராமை மாத்திரையேபற்றி வேறு வைக்கப்பட்டதன்றித் கருத்துவகையாற் சித்தாந்த சைவத்தின் வேறன்மையிற் சுத்தசைவஞ் சித்தாந்த சைவத்துளடங்குமென்றுணர்க. அற்றாகலினன்றே "நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக், குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என, ஏனைச் சமயங்களை எடுத்தோதி விலக்கிச் சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்காதொழிந்ததுவுமென்க.

"இனி, இவ்வாறன்றிப் பாடாண வாதத்திற்கும் பேதவாதத்திற்குந் தம்முள் வேறுபாடு சிறிதாகலின் அவ்விரண்டனையும் ஒன்றாகவைத்தெண்ணிச் சுத்தசைவத்தையும் உடன்கூட்டி அகச்சமயமாறெனக் கோடலுமொன்று. இங்ஙனமாகலான் "மெய்தரு சைவ மாதி யிருமூன்றும்" என்றதூஉம் பாடாணவாத முதலிய அறுவகைச் சைவங்களையுமெனக் காண்க. பாசுபதர் முதலியோர் கலைக்குமேலுள்ள தத்துவங்களை உணராமையின், அவர் "வித்தையாதி யெய்து தத்துவங்க ளேய்வர்" எனக் கோடல் பொருந்தாமையறிக. ஐக்கியவாத சைவர் கலைக்குமேலுள்ள தத்துவங்களுண்டெனக் கொண்டாராயினும், மூலமலம் உண்டென்ப தறியாமையின் மூலமல நீங்கிய முத்தர்க் கன்றிச் சுத்த தத்துவ புவனங்களிலெய்துதல் கூடாமையின், அவர்க்கு முத்தித்தானம் மோகினிக்குமேற் சுத்தவித்தைக்குக்கீழ் விஞ்ஞானகலர்க்குரிய தானமேயாமாகலின், ஏனைப் பாடாணவாத சைவர் முதலியோரே "வித்தையாதி...தத்துவங்க ளேய்வர்" என்றறிக. "புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்" என்புழியும் அகச்சமயமென்றது "ஏக னனேக னிருள்கரும மாயை யிரண்டு" என்னும் ஆறுபொருளுங் கொண்ட பாடாணவாத முதலிய அறுவகைச் சைவங்களையேயாமெனவும், புறச்சமயமென்றது அங்ஙனம் பொருளுண்மைகொள்ளாத ஏனை மூவகைப் புறச்சமயங்களையும் எனவும் உணர்ந்துகொள்க" — எனவரும் சிவஞானபோத அவையடக்கத்தின் மாபாடியத்துள்-மாதவச் சிவஞானமுனிவருரையும் ஈண்டுச் சிந்திக்க.

**பரசமயங்கள் பாற** - பாறுதல் - நூல்வழியால் மறுக்கப்படுதல்; ஈண்டுச் **சமண சமயம்** அளவையால் மறுக்கப்படுதல்பற்றி ஒருசிறிது காண்போம். சமணசமய உண்மைகள் எனக் கொள்வன : அருகனைச் சீவனுய்க் கூறுதலும் நித்தியமான இயற்கைஞான முடையனென்றலும்; (ii) சீவன் சங்கோசவிகாச தன்மியா யிருப்பன் என்றலும்; (iii) பொருளின் தன்மையைப் பலபடக் கூறி அஸ்தி நாஸ்தி - உண்டு இல்லை என்றலும்; (iv) உலகம் ஒருவராற் படைக்கப்பட்டதன் றென்றலும் முதலாயின. (i) **அருகக்கடவு ளியல்பு** : பாவம் வாராது அறத்தினின்றுன் என்று அமணர்கள் கூறுதலின், பந்த முதலிய குற்றங்களினின்றும் விடப்பட்டு வினை முத்தர்போலச் சேர்க்கைஞான முடையனேயன்றி இயற்கையாலே அனந்தஞான முதலியவை யுடையனன்று என்பது போதரும்; (ii) சீவன் சங்கோசவிகாச தன்மி - அதாவது எடுத்த உடலினளவு பரிணமிக்கும் தன்மையுடையனுதல்; யானையின் உடலிற் பெருத்தும் எறும்பினுடலிற் குறைந்தும் நிற்றல்வேண்டும்; ஒருடலில் ஓரவயவம் குறையில் அவ்வளவில் அச்சீவன் குறைதல் வேண்டும்; பரகாயம் புகும் யோகியின் உயிர் எண்வகைச் சித்திகளுள் பிராகாமிய சித்தியினுல் வேற்றுடம்பிற் புகும்போது தான் புகும் அவ்வச் சரீரங்களின் அளவிற்கு விரிந்தும் சுருங்கியும் பரிணமித்தல் வேண்டும்; விளக்கு ஓரிடத்திலிருந்தபடியே வீடு முழுதும் பரவினுற்போல இவ்வாறு விரியும் எனின் அது விகாரமாதலின் உயிர் சடமாய் அநித்தியமுமாம்; ஆதலால் அவர் கொள்கை தவறு; (iii) **அஸ்தி நாஸ்தி** - ஒரு பொருள் உண்டுமாம் இல்லையுமாம்; ஒளியும் இருளும்போல ஒன்றற்கொன்று மாறுபாடாகிய உண்மையும் இன்மையுமாகிய தன்மைகள் ஒருகாலத்தில் ஒரு பொருளில் இருத்தல் இயலாது; இவ்வாறு கூறுதல் காட்சி விரோதம்; சூரியனுள்ள காலத்தில் அஃது இல்லை என்ற பொருள் தோன்றுமையும், பாம்புள்ள காலத்தில் பாம்பில்லை என்று பயமின்மையும் வேண்டும்; அதனுல் இல்லை என்றலும், உண்டில்லை என்றலும் பொருந்தாது; ......இன்னும் அவர் கூறும் அனேகாந்தவாதத்தினுள்ளும் ஏழுபொருள் உளவென வகுத்துக்கூறுதலும் காண்க; (iv) உலகம் நித்தியமாதலின் ஒருவனுற் படைக்கப்பட்டதன்று; இயல்பாயுள்ளதாதலின் எனில் : யாது அவயவப் பகுப்புடையதாய், பலவாய், அசேதனமாய்க் காணப்படும் அஃது அழியும்; அஃது ஒருவராற் படைக்கப்பட்ட காரியப் பொருளாம். உலகமும் அவ்வாறு அவன் அவள் அது என்ற அவயவப் பகுப்புடையது; தோன்றிநின்றழியும் தன்மையுடையது; அசேதனமாய்ப் பலவாயுள்ளது; ஆதலின் ஒரு முதல்வனுற் காரியப்படுத்தப்பட்டது. —என்றிவ்வாறு கண்டுகொள்க. (குறிப்பு : இவை பெரும்பாலும் ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரானுர் உரையிற் கண்டவாறு தழுவி எழுதப்பட்டது). 818

2717. தென்னவன் மாறன் றானுஞ் சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றை யார்தந் திருநீறு பூசப் பெற்று
முன்னைவல் வினையி னீங்கி முதல்வனை யறியுந் தன்மை
துன்னினுன் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே. அகசூ

(இ - ள்) தென்னவன் மாறன்தானும் - அரசனுகிய பாண்டியன்தானும்; **சிரபுரத் தலைவர்...பெற்று** - சீகாழித் தலைவராகிய பிள்ளையாரால் தீண்டிப் பொன்போன்ற கொன்றையினைச் சூடிய சிவபெருமானது திருநீற்றைப் பூசப்பெற்றதனுல்; **வினைகள்...நிற்றலாலே** - இருவினைகளும் ஒத்துப் பொருளைச் சமன்செய்து காட்டுந் துலாக்கோல்போல நிற்கப்பெற்றதனுலே; **முன்னை...துன்னினுன்** - முன்னைக் கொடிய வினையினின்றும் நீங்கியவனுய் முதல்வனை அறியும் தன்மை பொருந்தினுன்.

(வி - ரை) தீண்டிப் பூசப் பெற்று - திருக்கையாற் றீண்டிப் பூசும் பேறு பெற்றதனால்; "திருக்கையாற் றடவ" (2663); இது பரிசதீக்கை என்ற குறிப்புப் பெறத் தீண்டி என்றெடுத்துக் கூறினார். பெற்றுத் - துன்னினான் - என்று முடிக்க. பெற்று - பெற்றதனால்; வினையெச்சம் காரணப்பொருளில் வந்தது.

தானும் - உம்மை உயர்வு சிறப்பு.

திருநீறு பூசப்பெற்று - "நீறு - ஈந்தார்" (2755) எனப் பின்னர்க் கூறுவதனுடன் இதனை ஒப்புநோக்குக. அஃது தீக்கை முடிவில் பாதபங்கயமுஞ் சூட்டியருளும் நிலை. முன்னர்த் திருக்கையாற் றிருநீறு பூசியது தீக்கைக்கு உரியனாக்கும் நிலை.

முன்னை வல்வினையும் நீங்கி - முன்னை - வினை - "முன்செய்த தீவினைப் பயத்தினாலே" (2498) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. இது முன்னுடம்பால் ஈட்டப்பட்டுப் புத்திதத்துவம் பற்றுக்கோடாக நின்று அனுபவத்துக்கு முகந்து கொண்ட பிராரத்த வினை. வல்வினை என்றது எதிர்விலக்கலாகாத வலிமையுடைமை பற்றி; விலக்கலாகாமையாவது சைவச் சார்பிற் பிறந்தும், அம்மையார் அமைச்சனார் முதலிய அன்பாளிறைந்த சைவச்சார்பு படைத்தும், "பாண்டி நாடே பழம்பதி யாகவும்." (திருவா) என்று போற்றப்படும் சைவப் பாண்டிநாட்டின் அரசாட்சியின் உரிமை பெற்றும் மதிமயங்கிச் சமண்சார்பு பற்றி ஒழுகியதன்றி சைவத்திற்குக் கேடு சூழவும் துணைநிற்கச் செய்த வலிமை.

வினைகள் ஒத்துத் துலை என நிற்றலாலே - முதல்வனை அறியுந் தன்மை துன்னினான் - என்று கூட்டுக. துலை என - துலை - தராசின் இரு தட்டினும் இடும் ஒத்த இரு பொருள்களுக்கு வந்தது; ஆகுபெயர். ஏனைப் பொருள் ஒன்றுமிடாத துலைத் தட்டுகள் எனினுமொக்கும்; வினைகள் - நல்வினை தீவினையாகிய இரண்டும். வினைகள் ஒத்தல் - இருவினையொப்பு எனப்படும். அஃதாவது நல்வினைப் பயனாகிய இன்பம் வருங்கால் அவ்வின்பத்து எழுந்திவிடாமலும், தீவினைப் பயனாகிய துன்பம் வருங்கால் அத்துன்பத்துளழுந்திவிடாமலும் இரண்டனையும் ஒன்றுபோலவே இறைவனதாணையால் வந்தன என்று எண்ணி நுகரும் உயிரறிவின் பக்குவநிலை; "அடுக்கி வரினு மழிவிலான்". "இடுக்கண் வருங்கா னகுக" "இன்பத்து ளின்பம் விழையாதான்" என்று பொய்யாமொழியார் உலகநிலையின் வைத்துக் கூறிய தன்மைகள் வேறு; இங்குக் கூறிய பக்குவநிலை வேறு. முன்னவை உலகில் துன்பங்கள் வந்துழி அவற்றாற் சோர்வுற்று மனமழிந்துவிடாதபடி மக்கள் மேற்கொள்ளும் முயற்சியாகிய சாதனங்கள்; இங்குக் குறித்தது வினைவயத்தானும் திருவருளாலும் உயிர் அடையும் பரிபக்குவ நிலை. "உணக்கிலாததோர் வித்து மேல்விளை யாமலென் வினையொத்தபின், கணக்கி லாத்திருக் கோல நீவந்து காட்டி னாய்கழுக் குன்றிலே"(திருவா)என்ற கருத்து.

முன்னை வல்வினையும் நீங்கி - என்றும், வினைகளொத்துத் துலை என நிற்றல் - என்றும், முதல்வனை யறியும் தன்மை - என்றும் கூறியவை மூன்று நிலைகள். இவை முறையே சத்திநிபாதம் என்றும், இருவினையொப்பு என்றும், மலபரிபாகத்தின் விளைவு என்றும் ஞானசாத்திரங்களுட் கூறப்படும். முன்னை வல்வினை என்றது சமண்புக்கிருந்தபோது செய்துகொண்ட தீவினை என்றலும் பொருந்தும். வல்வினை என்றது சரித நிகழ்ச்சிக் குறிப்பு. சத்திநிபாதம் என்பதுபற்றி மாதவச் சிவஞான முனிவர் மாபாடியத்துட் கூறுமாறு காண்க (8-1); "பக்குவமாதற் பொருட்டு மலத்திற்கு அனுகூலமாய் நின்று நடாத்திய திரோதானசத்தி, மலம் பரிபாகமெய்திய வழி, அக்கருணை மறமாகிய செய்கை மாறிக் கருணையெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமேயாய் ஆன்மாக்கள்மாட்டுப் பதிதலாகிய சத்திநிபாதமும், சோபானமுறையான் மந்தரம்,

மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்பட்டு நிகழுமெனக் கொள்க; எனவே சத்திநிபாதத்துக்குக் காரணம் மலபரிபாகம் என்பதூஉம், அதுவும் அவ்வாறு பலவேறு வகைப்பட்டு நிகழுமென்பதூஉம் பெறப்பட்டன.

"சத்திநிபாதம் என்னும் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. நி என்பது ஏற்றமாக என்னும் பொருள் குறித்துநின்றதோ ரிடைச்சொல்; ஓ ரவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத் துள்ளாரை ஆண்டுநின்றும் அகல்விக்கும்; அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்தமாத்திரையே அஃது அவ் வான்மாவை மனைவி மக்கள் முதலிய உலகத்துழனியின் அச்சநிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து உண்மைக் குரவனை நாடிச் செல்லுமாறு செய்வித்தலின் அவ்வொப்புமை தோன்றச், சத்தி நிகழ்ச்சி என்னாது சத்தி வீழ்ச்சி யென்றோதப்பட்டது.

"மலபரிபாகமாவது மலந் தனது (மறைத்தற்) சத்தி தேய்தற்குரிய துணைக் காரணங்க ளெல்லாவற்றோடும் கூடுதலேயாம்"; ஈண்டுத் துணைக்காரணங்கள் என்றவை சிவபுண்ணியங்களும் அவற்றான் வரும் தூயவுடம்பு முதலிய கருவிகளும் ஆம். இங்குச் சிவபுண்ணியப் பேறாகப் பிள்ளையாரது திருநோக்கம், பரிசம் முதலியவை நிகழ்ந்தமையால் இத் துணைக்காரணங்களாகிய தூயவுடம்பு முதலியவற்றை அரசன் அடையப்பெற்றனன் என்பார் "மாறன் றனுஞ் சிரபுரத் தலைவர் தீண்டி.....திருநீறு பூசப் பெற்று" என்றதும் காண்க.

இருவினை ஒப்பு - "இசைத்த, விருவினை யொப்பி லிறப்பி றவத்தான், மருவுவனு ஞானத்தை வந்து" (8 - 1 வெண்பா) என்றவிடத்து "ஒருவனுக்குப் பந்த முறுத்து தற்கட் பொன்விலங்கும் இருப்பு விலங்கும்போலத் தம்முட் சமமாகச் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்க ளிரண்டுந், தம்மைப்போலக் கெடுதலில்லாத அத்தவங்களின் பயனாகிய பதமுத்திகளை அநுபவித்து வைகும் ஆண்டே தானே ஞானநெறியைத் தலைப் படுவன். அவை அங்ஙன நேராகாவிடின் மீள நிலத்தின்கண் வந்து பிறந்து வினை யொப்பு நிகழ்ந்து குரவன் றிருவருள் பெற்று ஞானத்தைத் தலைப்படுவன் என்க. "......ஈண்டுக் கூறப்பட்ட இருவேறு புண்ணியங்களுள், இசைத்துவரு வினைகளெல்லாம் பசுக்களை நோக்கிச் செய்யப்படுதலின் பசுபுண்ணிய மெனவும், இறப்பில் தவங்க ளெல்லாம் சிவனையே நோக்கிச் செய்யப்படுதலின் சிவபுண்ணியம் எனவும் பெயர் பெறும்..." இனி, இறப்பிறவத்தால் நிகழும் இருவினையொப்பாவது யாதெனிற் கூறுதும்: சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த இருவினைகளும் பக்குவமுறையானே பயனாய் வரும் வழி, நல்வினையுண் மிக்கதாகிய பரிமேத வேள்விப் புண்ணியமும், தீவினையுண் மிக்கதாகிய பிரமக் கொலைப்பாவமும் ஒருங்கே பக்குவமெய்திப் பயன்படு தற்கண் ஒத்தனவாயின், அவை தம்முள் ஒன்றொடொன் றடிக்கப்பட்டுச் *சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டொழியுமாகலின் அவை அவ்வாறு தம்முள் ஒத்தலே இருவினை யொப்பெண்பர் ஒருசாரார். சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றித் தம்முள் ஒத்தல் இருவினையொப்பென்பர் ஒருசாரார். மிக்க வினையிரண்டுந் தம்முளொத்துக் கெட்டனவாயினும் அவையொழித்தொழிந்த புண்ணிய பாவங்கள் தத்தம் பயனைத் தருதற் கிடையீடின்மையானும், இருவினைகண் முழுதுந் தம்மு ளொக்குமாறில்லை; ஒக்குமெனினும் அதுபற்றி ஆணவமலம் நீங்குமாறின்மையான்

---

*சுந்தோபசுந்த நியாயமாவது: சுந்தன் உபசுந்தன் என்னும் அசுரரிருவரும் திலோத்தமை என்னும் பெண்பொருட்டாக ஒருவரையொருவர் கொன்றதுபோன்ற ஒரு நெறி.

விஞ்ஞானகலராவாரன்றி முத்தியெய்துதல் கூடாமையானும் இவ்வாறு பௌட்கரத்து ளெடுத்தோதி அவ்விரண்டனையும் மறுத்தலானும், ஈண்டோதிய இருவினையொப்புக்கு அவை பொருளல்லவென்றொழிக."

"இனி இவ்வாறாக; வேறு பொருள்படுதற் கேலாமையானும், சிவப்பிரகாசத்தில் (பொது - 2 - 30) "எதிர்வினையு முடிவினை யுதவுபயனு னேராக" என ஏனை வினைகள்போல ஆகாமிய வினையும் முடிவினையும் (பிராரத்தம்) ஒத்தல்வேண்டுமென்றோதலின் அஃதொத்தல் பிறிதோராற்றாற் பெறப்படாமையானும், மலபரிபாகக் குறி, சத்திநிபாதக் குறி, சிவபுண்ணியக் குறிகளெல்லாம் ஆன்மவறிவின்கண் விளங்குமாறுபோல இருவினையொப்புக் குறியும் தன்னறிவின்கண் விளங்குமாறில்லையாயின் அது முத்திக்கேதுவாதல் கூடாமையானும், ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணியபாவ மிரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்துவிடுவோன தறிவின்கண் அவ்விருவினையும் அவ்வாறொப்ப நிகழ்தலே ஈண்டு இருவினையொப் பென்றதற்குப் பொருளென நுண்ணுணர்வாற் கண்டு கொள்க. * * "

"இனி, இருவினைகள் (1) பசு நல்வினை-தீவினை என்றுஞ் (2) சிவ நல்வினை-தீவினை என்றும் இருவேறு வகைப்படும். எனவே இருவினையொப்பும் அவ்வாறு "பசு நல்வினை தீவினைகள் தம்மு ளொத்தலாகிய இருவினையொப்பென்றும், (2) சிவ நல்வினை தீவினைகள் தம்முளொத்தலாகிய இருவினையொப்பென்றும் இருவேறு வகைப்படுமென்பதூஉம் பெற்றாம். சிவநல்வினை தீவினைகள் தம்முளொத்தலாவது சிவ நல்வினையும் தீவினை போலத் தமது முதலுபகாரத்தை மறந்து பிறவிக்கேதுவாய்ப் பசுபோதம் முனைத்துச் செய்யப்படுவதொன்றெனத் தெளிந்து உவர்த்துவிடுவோனது அறிவின்கண் அவ்வாற்றானொப்ப நிகழ்வது. இவ்விருவகை யிருவினையொப்புள், முன்னையது பக்குவத்தா னிகழும் பசுபுண்ணியத்தினும் நிகழ்வனவாயுளவென மேற்கூறப்பட்ட அபுத்திபூர்வம் புத்திபூர்வமென்னும் பொதுச்சிவபுண்ணியத்தான் உண்டாவதாய், மலபரிபாகத்தைத் தோற்றுவிக்குமுகத்தானே மந்ததரமெனப்படும் முதற்சத்திநிபாதத்தில் நிகழும். பின்னையது, பலதிறப்படுவனவாகிய சத்திநிபாதத்தான் அவ்வாறே நால்வகைப்பட்ட முறையான் நிகழ்ந்து முடிவின்கண் ஞானத்திற் கேதுவாமென்றுணர்க.

"இனி, (1) ஞானத்திற்குக் காரணஞ் சரியை முதலியனவென்பதூஉம், (2) சரியை முதலியவற்றுக்குக் காரணம் மந்ததர முதலிய சத்திநிபாதமென்பதூஉம், யாண்டும் விளங்கிக் கிடந்தன. இவையெல்லாவற்றிற்கும் (3) மூலகாரணமெனப்பட்ட பக்குவமாவது தமக்குரிய சோபானமுறையானன்றி யறியமாட்டாததோ ரியல்புடைய ஆன்மாக்களுக்கு அம்முறையான் நிகழும் அறியவல்லுதலேயா மென்பது மேல் ஆண்டாண்டுக் கூறியவாறுபற்றி உணர்ந்துகொள்க. (4) அவ்வல்லுதற்குக் காரணங் கேவலக்கிடையினும் நீங்காது உடனாய் நின்று நோக்கிவரும் முதல்வனது கருணைநோக்கத்தின்அடிப்பாடென அறிக" (மாபாடியம் - 8-1 - பக். சஙக - சஙச). 819

வேறு

2718. உலகியல் வேதநூ லொழுக்க மென்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்
கலதிவா யமணர்காண் கிலார்க ளாயினும்
பலர்புகழ் தென்னவ னறியும் பான்மையால், அ௨0

வேறு

2719. அலரும் விரைசூழ் பொழிற்காழியு ளாதி ஞானம்
மலருந் திருவாக்குடை வள்ளலா ருள்ள வண்ணம்
பலரு முணர்ந்துய்யப் பகர்ந்து வரைந்தி யாற்றில்
நிலவுந் திருவேடு திருக்கையா னீட்டி யிட்டார். ௮௨௧

2718. (இ - ள்) உலகியல்...என்பதும் - உலகாசாரமாகிய நடை வேதநூலின் விதித்த ஒழுக்கமே என்பதனையும் ; நிலவும்...நெறியது என்பதும் - அழியாது நிலவுகின்ற வீடுபேறடையும் உண்மைநெறி சிவநெறியேயாகு மென்பதனையும் ; கலதி... ஆயினும் - கேடு பெறும் வாய்ப்பினையுடையாராகிய சமணர்கள் அறியமாட்டார்களாயினும் ; பலர்புகழ்...பான்மையால் - பலராலும் புகழப்படும் பாண்டியன் அறியும் பான்மையினாலே, ௮௨௦

2719. (இ - ள்) அலரும்...வள்ளலார் - பூக்கள் மலர்தலால் உளதாகும் மணம் சூழ்ந்த சோலைகளையுடைய சீகாழியில் அவதரித்த சிவஞானம் மலரும் திருவாக்கினையுடைய வள்ளலாராகிய பிள்ளையார் ; உள்ளவண்ணம்...உய்ய - உண்மைப் பொருள் நிலையினைப் பலரும் அறிந்து உய்யும்படி ; பகர்ந்து வரைந்து - அருளிச்செய்து எழுதுவித்து ; நிலவுந் திருவேடு - என்றும் அழியாத மெய்ப்பொருளினை உடைய அத்திருவேட்டினை ; யாற்றில் - வைகையாற்றிலே ; திருக்கையால் நீட்டி இட்டார் - தமது திருக்கரத்தினிலே நீட்டி இட்டருளினர். ௮௨௧

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2718. (வி - ரை) உலகியல் வேதநூல் ஒழுக்கம் - வேதநெறி.

மெய்ந்நெறி சிவநெறியே - சைவநெறி ; சிவாகமநெறி. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (1899) ; "சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க" (1920) என்று இப்புராணத்தொடக்கத்திலும் பிள்ளையார் திருவவதாரத்தினும் குறிப்பித்த இருபெரும்பொருள்களும் விளக்கமுற்று உலகுய்யவரும் இடம் இஃதே ஆதலின் ஈண்டு இத்திருப்பாசுரக் கருத்தாக இவற்றை எடுத்துக்காட்டியருளியது ஆசிரியரது தெய்விகக் கவிநலம். இறைவர் வேதங்களை உலகர்க்காக உணர்த்தியருளினார் எனவும், ஆகமங்களைச் சத்திநிபாதமுடைய பக்குவான்மாக்களுக்காக உணர்த்தியருளினார் எனவும் காண்பர்.

கலதிவாய் அமணர் காண்கிலார்கள் - அமணர்கள் வைதிகநெறி ஒழுக்கின் வாராதவர் ; அதனால் அதனின் மேம்பட்ட சைவநெறியினும் வாரார் ; ஆதலின் அவற்றின் உண்மைத் திறத்தை உணராத புறச்சமயிகளாவர் ; ஆதலின் இந்த இருநெறியினையும் உணர்த்த அருளப்பட்ட இத்திருப்பதிகம் அமணர்களுக்கு அறிவுறுத்துதற்கன்றி, முதல்வனையறியும் தன்மை துன்னிய பக்குவமுடைய தென்னவனை அறிவுறுத்தித் தேற்றுதற்கெழுந்த ஞானோபதேசமாம் என்பது ; "மன்ற பாண்டியன் கேட்கக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்" (இருபா - 2) என்பது ஞானசாத்திரம் ; "தென்னவ னறியும் பான்மையால்" என்பதும் காண்க.

அமணர் காண்கிலார்க ளாயினும் - தென்னவன் அறியும் பான்மையால் - வைகைக் கரையில் நின்று இத்திருப்பதிகம் அருளப்பட்டது ; நீரில் உடன் ஓடாது நிற்கவல்லது மெய்ப்பொருள் என்று வாதத்தினை முற்பட்ட அமணர்முன்பு அரசனுக்கு மெய்ப்பொருளிதுவென்று காட்டி அறிவுறுத்துதற்கெழுந்தது ; அமணர்களும் முன்னின்றனர் ; அருளிப்பாட்டினையும் கேட்டனர். ஆனால் பக்குவமின்மையின் அவர்கள்

அதன் உண்மையினைக் காணும் ஆற்றலிலர் ; ஆதலின் அரசன் அறியும் பான்மையாற் பிள்ளையாரருளினர் என்க. அமணர் தேற்றவும் தேறாத அபக்குவ நிலையுடைய ஈனர்களாதலின் (2741) பிள்ளையார் அவர்களைப் பொருட்படுத்தாது அரசனை அறிவுறுத்தியருளினர் ; பக்குவமில்லாதார்க்கு ஞான மூணர்த்தற்பாலதன்று என்றும், உணர்த்தினும் அவர்கள் காணும் ஆற்றலிலர் என்றும், வரும் உண்மைகளும் உணர்த்தப்பட்டன.

கலதி - கேடு ; வாய் ; வாய்ப்பினையுடைய. கலதி - மூதேவி என்றுரைப்பாரும், கலகஞ் செய்யும் என்றுரைப்பாருமுண்டு ; காண்கிலார் - காணும் வல்லமையில்லாதார் ; "அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்கு" (போதம் 11 - 2) என்றபடி ஞாயிறு முன்னின்று ஒளி செய்யினும் குருடர் காணமாட்டாமைபோல ; கில் - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்.

பலர் புகழ் - பலராலும் என்க முற்றும்மை தொக்கது. புகழ் - புகழப்படும். செயப்பாட்டுவினைவிகுதியும் தொக்கது. "பலர்புகழ் ஞாயிறு" (முருகு) ; பலர் - உண்மை அறியும் பான்மையால்-பகர்ந்து என வரும் பாட்டுடன் கூட்டுக. பான்மை- பண்பு ; அறியும்படி என்க. பான்மை - நியதி - பக்குவம் - ஊழ் என்றுகொண்டு அப்பான்மை பொருந்தியமையினாலே என்றலுமாம். 820

2719. (வி - ரை) இப்பாட்டுச் சில பிரதிகளில் "வெறியார் பொழில்" என்ற (844 = 2742) பாட்டின்கீழ்க் காணப்படுகின்றது ; அதுவும் ஓரமைதியுடையதென்று தோன்றுகிறது ; சரிதத்தொடர்பும் யாப்புத்தொடர்பும் பிறவும் கருதுக.

ஆதிஞானம் - ஆதியினது ஞானம் ; ஆதி - சிவன் ; ஆறும்வேற்றுமைத்தொகை. ஆதியினால் அருளப்பெற்ற ஞானம் என மூன்றனுருபும் பயனும் உடன் தொக்க தொகையாகக் கொள்ளலுமாம் ; ஆதியாகிய - எல்லா ஞானங்கட்கும் மேலாகிய - ஞானம் எனப் பண்புத்தொகையாக்கி யுரைப்பினு மமையும்.

ஆதிஞானம் மலரும் திருவாக்கு - மலர்தல் - வெளிப்பட்டு விரிதல். வாக்கு - வாக்கினின்று வரும் அருளிப்பாடு ; ஆகுபெயர்.

அலரும் விரைசூழ் பொழிற்காழி - மலர்களினின்றும் அலரும்போது மணம் விரிந்து எங்கும் பரவுதல்போலப் பிள்ளையாரது வாக்கினின்றும் வெளிப்பட்டுச் சிவஞானமணம் உலகெங்கும் விரிந்து கமழும் என்ற குறிப்புப்படக் கூறிய கவிநயம் காண்க ; இதனை இறைச்சிப்பொருள் என்க. "நாயினே னிருந்து புலம்பினு லிரங்கி நலம்புரி பரமர்தங் கோயில், வாயினே ரரும்பு மணிமுருக் கலர வளரிளஞ் சோலைமாந் தளிர்செந், தீயினே ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்" (கருவூர் - திருவிசைப்பா - 3) என்புழிப்போலக் காண்க. பொழில் - உலகம் என்ற பொருட்குறிப்பும் தருவது காண்க. "பொழிலேழுந் தாங்கி நின்ற" ; "ஏழ்பொழிலு மேழ்மலையு மாயினான் காண்" (தேவா).

வள்ளலார் - பகர்ந்து - வள்ளலாராதலின் எனக் காரணக் குறிப்புப்பட வோதினார்.

உள்ளவண்ணம் - உள்ளவண்ணத்தை - மெய்ப்பொருள் நிலையினை ; இரண்டனுருபு விரிக்க.

பலரும் உணர்ந்துய்ய - "மன்னவ னறியும் பான்மை"யால் (2718) பலரும் உணர்ந்துய்ய என்றது, "மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்றபடி மன்னவன் வழிநிற்கும் உலகுயிர்கள் அவன் அறிந்த பான்மைகண்டு உணர்ந்து உய்ய. மன்னனொருவனை உய்வித்தால் அவன்வழியே பல்லுயிரும் உய்யும் ; அவற்றை வேறு தனித்

தனி உய்விக்க வேண்டா என்பது குறிப்பு. பலரும் - "பலர்புகழ் மன்னவன்" (2718) என்று குறித்த, அவன்வழி யவர்களாகிய பலரும் என்க. அங்கு வைகைக்கரையினின்ற அமணரல்லா வேனையோரும் அவர்வழியாகிய உலகரும் "பூதபரம்பரை பொலிய" (1899).

உய்யப் பகர்ந்து - பலரும் உய்க என்று திருவுள்ளஞ் சங்கற்பித்து. பாவித்து எடுத்துச்சொல்லி ; ஆசாரியனது உபதேசத்தின் முன் அவனது சத்பாவனை இன்றியமையாது வேண்டப்படும். "திகழும் வாக்கால் பாவனையால் மிகுநூலால்" (சிவப் - 8).

வரைந்து - வரையச் செய்து ; வரைவித்து. பிறவினைவிகுதி தொக்கது. "வருமறைச்சொற் றிருப்பதிக மெழுதுமன்ப"ராகிய (2806) சம்பந்த சரணாலயரால் எழுதுவித்து என்க.

திருஏடு யாற்றில் - இட்டார் - என்று கூட்டுக. யாற்றில் நிலவும் என்று சொற்கிடக்கை முறைபற்றியே கொண்டு, யாற்றோடு சென்றொழியாது எதிர்சென்று, அன்றுமுத லின்றளவும் இனிமேலும் என்றும், உயிர்களுக்கு உண்மைகாட்டி நிலவும் என்றலுமாம்.

நீட்டி - நீளச் செல்லுமாறு பணித்து என்பதும் குறிப்பு. நீளுவித்து என்க.

இட்டார் - இடுதல் - சேர்த்துதல். 821

VII திருவாலவாய்

திருச்சிற்றம்பலம் திருப்பாசுரம் - பண் - கவுசிகம்

வாழ்க வந்தணர் ; வானவ ; ரானினம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனு மோங்குக ;
ஆழ்க தீய ; தெல் லாமர னாமமே
சூழ்க ; வையக முந்துயர் தீர்கவே. (1)

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ; ரேறுகந் தேறுவர் ; கண்டமுங்
கரியர் ; காடுறை வாழ்க்கைய ; ராயினும்
பெரிய ; ராரறி வாரவர் பெற்றியே ? (2)

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் ; தம்மையே
சிந்தி யாவெழு வார்வினை தீர்ப்பரால் ;
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ ? (3)

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதிமாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை : கிளக்க வேண்டா ;
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்க தக்கார். (4)

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா ; சுடர்விட் டுளனெங்கள் சோதி ;
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின் ;
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே. (5)

ஆடும் மெனவும் மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும்மெனக் கேட்டி ராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே? (6)

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
யடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே. (7)

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
"சூதன் னொலிமாலை" யென்றே கலிக்கோவை சொல்லே! (8)

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
போராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே. (9)

மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலால முண்டங் கமரர்க்கருள் செய்த தாமே. (10)

அற்றன்றி யந்தண் மதுரைத்தொகை யாக்கி னானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வினவும் பண்பு நோக்கிற்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே. (11)

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்த னல்ல
எல்லார்க ளும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே. (12)

திருச்சிற்றம்பலம்

(10) மறைவல்லவ-

(11) பாங்கெதிர்வினாவும் - பாங்கெதிர்வினீரவும் - என்பனவும் பாடங்கள்.

**பதிகக் குறிப்பு :**—பக்குவான்மாக்களுக்கு வேதநெறி சைவநெறிகளின் மெய்ப் பொருள் விளக்கமாகிய ஞானோபதேசம் செய்தது (2618) என ஆசிரியர் காட்டியருளு தல் காண்க.

**குறிப்பு :**—இத்திருப்பதிகம் பன்னிரண்டு திருப்பாட்டுக்களைக் கொண்டது; சிவாகமங்களின் ஞானபாத முடிபாய்ச் சிவஞானபோதத்துள் வடித்தெடுத்துக் காட்டப் படும் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துக்களையும் எடுத்துக்காட்டும் சிறப்பினை உடையது; பொது சிறப்பு என்ற இருதன்மைகளைக் காட்ட முதன் மூன்று பாட்டுக் கள் ஒரு யாப்பும் சந்தமும் ஆகவும், ஏனையவை வேறு யாப்பும் சந்தமுமாகவும் இரு

பிரிவினதாயமைந்த சிறப்புடையது. இவ்வா றிரண்டியலின் அமைந்த திருப்பதிகம் இஃதொன்றேயாம். இவ்வியல்பினை இப்பதிகத்துக்குமேல் 22 பாட்டுக்களிற் பேருரை செய்தருளிய ஆசிரியர் பெருமானும் இவ்விருவகை யாப்பினு லமைத்தருளுவதும் காண்க. தெய்வத் தன்மையுடைய ஆசிரியர் பெருமானால் விதந்து உள்ளவண்ணம் மெய்ப்பொருண் முடிவு என்று பாராட்டப் பெற்றதோடு பேருரையும் விரித்துரைக்கப் பட்ட சிறப்புடையது. "திருப்பாசுரம்" என்ற தனிச் சிறப்புப்பெயர் பெற்ற திருப் பதிகம்; "பாசுரஞ் சொன்ன பத்தும்" (தேவாரம் - 12); "பாசுரம் பாட லுற் ரூர்" (2716); "மெய்ப்பாசுரத்தை" (2742). பரசமயங்கள் பாறவும் முதல்வனை யறியும் தன்மையிற் சிவநெறி விளக்கமுமாகப் பரபக்கம் சுபக்கம் என்ற இருதன்மை யில் விளங்குவது. (1) பரசமய நிராகரித்து (2) நீறு ஆக்கும் காதலினைப் பெற (1917) வரங்கிடந்து பெற்ற சிவபாதவிருதயரின் வரம் ஒருங்கே நிறைவேறிய சிறப்பு இத் திருப்பதிகத்துக்குரியது; இப்புராணமுடிபில் "எங்களை வாழ முன்னு ளேடு வைகை யினி விட்டார்" (3128 = 1230) என்று தமது ஒப்புயர்வற்ற அருளாசி மொழியாலே அன்றுபோலவே என்றும் உயிர்களை வாழ்விக்கும் சிறப்புடையதென்று ஆசிரியர்பெரு மானால் நினைவுகொண்டு பின்னரும் விதந்தெடுத்தோதப்பட்ட சிறப்புடையது. இதனை "மெய்ஞ்ஞானம்" என்று போற்றினார் அருணந்தி சிவாசாரியார். இன்னும் இவ்வாறு எண்ணுதற்குமரிய பற்பல சிறப்புக்களையும் கண்டுகொள்க.

**பதிகப் பாட்டுக் குறிப்பு** :—இத் திருப்பாட்டுக்களைத் தனித்தனி எடுத்துப் பொழிப்புரையும் கருத்துரையுமாக ஆசிரியர் உரைத்தருளிய 22 பாட்டுக்களும் மேல் உரை விரிக்கப்படுமாதலின் ஏனைப் பதிகங்களுக்குப்போல ஈண்டுப் பதிகக் குறிப்புத் தரப்படவில்லை.

["வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்"]

2720. "அந்தணர், தேவரா னினங்கள் வாழ்க"வென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலகு மின்புறச்
சந்தவேள் விகண்முதற் சங்க ரர்க்குமுன்
வந்தவர்ச் சனைவழி பாடு மன்னவாம்; அ௨௨

(இ - ள்) அந்தணர்...பயன் - அந்தணர்களும் தேவர்களும் ஆனினங்களும் வாழ்க என்று கூறிய இந்த மெய்ம்மொழியின் பயனுவது; உலகம் இன்புற - உலகுயிர்கள் (துன்ப நீங்கி) இன்பமடையும் பொருட்டு; சந்த வேள்விகள் முதல் - சந்தத்துடன் கூடிய மந்திரங்களையுடைய சிவவேள்விகள் முதலாக; சங்கரர்க்கு - சிவபெருமா னுக்கு; முன்வந்த...மன்னவாம் - முதன்மையாகச் சொல்லப்பட்ட அருச்சனைகளும் ஏனை வழிபாடுகளும் ஆகிய இவை நிலைபெறுதலாம். அ௨௨

["வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக"]

2721. வேள்வி நற்பயன் "வீழ்புன" லாவது
நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால்;
ஆளு "மன்னனை வாழ்த்திய" தர்ச்சனை
மூளு மற்றிவை காக்கு முறைமையால்; அ௨௩

(இ - ள்) வேள்வி...புனலாவது - நல்வேள்விகளின் பயன் மழை தவிராது பெய் தலாம் என்றருளியது; நாளும்...உறுப்பாதலால் - அது நாடோறும் அருச்சனைக்கு நல்ல உறுப்பாதலால்; ஆளும் மன்னனை வாழ்த்திய - உலகாளும் வேந்தனை ஓங்குக

என்று வாழ்த்தியது ; அர்ச்சனை...முறைமையால் - அர்ச்சனை முதலாக வரும் இவற்றைக் காக்கும் முறைமையினால்; அஉ௩

["ஆழ்க தீயது ; எல்லாமரனுமமே சூழ்க"]

2722. "ஆழ்க தீய"தென் றோதிற் றயனெறி
வீழ்க வென்றது; வே"றெல்லா மரன்பெயர்
சூழ்க" வென்றது தொல்லுயிர் யாவையும்
வாழி யஞ்செழுத் தோதி வளர்கவே. அஉ௪

(இ - ள்) ஆழ்க...என்றது - ஆழ்க தீயது என்று ஓதியருளியதன் பொருளாவது வேதாகமங்களுக்குப் புறமாயுள்ள நெறிகள் வலிமையற்றொழிக என்றதாம் ; வேறு... என்றது - வேறாக எல்லாம் அரன் நாமமே சூழ்க என்று அருளியது ; தொல்லுயிர்... வளர்கவே - தொன்றுதொட்டு வரும் உயிர்கள் எல்லாம் வாழ்வு தரும் திருவைந்தெழுத்தை ஓதி வளர்க என்னும் பொருட்டாம். அஉ௪

["வையகமுந்துயர் தீர்கவே"]

2723. சொன்ன "வையக முந்துயர் தீர்கவே"
என்னு நீர்மை யிகபரத் திற்றுயர்
மன்னி வாழுல கத்தவர் மாற்றிட
முன்னர் ஞானசம் பந்தர் மொழிந்தனர். அஉ௫

(இ - ள்) சொன்ன...நீர்மை - சொல்லிய வையகமுந் துயர் தீர்கவே என்னும் அருள்ஆசியின் கருத்தாவது ; இகபரத்தில்...மாற்றிட - இம்மையிலும் மறுமையிலும் நிலைத்து வாழும் உலகத்தவர்களாகிய உயிர்கள் துன்பநீங்கியிடவாகும் ; முன்னர்... ...மொழிந்தனர் - இக்கருத்துக்கள் பட முதலில் திருஞான சம்பந்தர் மொழிந்தருளினர். அஉ௫

இந்நான்கு பாட்டுக்களானும் ஆசிரியர்பெருமான் "வாழ்க வந்தணர்" என்ற திருப்பாசுர முதற் திருப்பாட்டுக்கு உரை வகுத்தருளினார் ; திருப்பாசுரப் பாட்டின் அடிகளைத் தனித்தனிப் பிரித்து அவை இன்ன கருத்துடையன என்று விளக்கி இவ்வாறு பிள்ளையார் மொழிந்தனர் என முடித்துக்காட்டியது உரைத் திறம். இவ்வாறு பாட்டுத்தோறும் கண்டுகொள்க. பாட்டின் உரை முடிகின்றநிலை குறிப்பதற்கு ஞானசம்பந்தர் மொழிந்தனர் (2723) ; வாழ்த்தினார் சண்பை ஆண்டகை யாரவர் (2725) ; பூந்தராய் வேந்தர் அருளினார் (2729) ; என்றனர் சண்பை காவலர் (2731) ; சண்பை அரசர் அருளினார் (2735) ; என்றனர் கொள்கை மேலோர் (2736) ; என்றனர் பிள்ளையார்தாம் (2737) ; என்றுரை செய்தனர் யாவும் ஓதாதுணர்ந்தார் (2738) ; என்றனர் வேதவீரர் (2739) ; வெங்குரு வேந்தர் வைத்தார் (2740) ; என்றனர் ஞானமுண்டார் (2741) ; சண்பையர் வேந்தர் (2742) எனப் பன்னிரண்டு திருப்பாட்டுக்களுக்கும் பாட்டுக்கொன்றாகப் பன்னிரண்டு முடிபுகள் காட்டிப் பிள்ளையாரது திருப்பெயரைப் பன்னிரண்டு வகையாகக் கூறிப் போற்றிய திறமும் கண்டுகொள்க.

புறத்தேயொளிதரும் சூரியர்கள் பன்னிருவராதலின் அக்குறிப்புப்பட அகஒளி தரும் ஞானசூரியராகிய பிள்ளையாரும் சிவஞான விளக்கம் செய்யும் ஈண்டுப் பன்னிரு

வகையாற் போற்றப்பட்டனர் என்க.* "மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற, பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்கு கின்ற, செங்கதி ரவன்போ னீக்குந் திருத்தொண்டர் புராணம் (10); திருக்கோயில்களினும் திருமடங்களினும் திருவெம்பாவை திருப்பொற்சுண்ணம் என்ற திருவாசகங்களை ஓதி வழிபடுங்காலத்துப் பாட்டுத்தோறும் மணிவாசகப் பெருமானைப் புகை ஒளி அமுது காட்டிப் பூசிக்கும் சைவமரபு வழக்கு இக்குறிப்பினைத் தருவது. அம்மரபு வழாமை ஆசிரியர் இங்குக் காட்டியருளிய திறமும் காண்க. "நகுபா சுரமுத லுரைசெய் தலினு னவிலுரை யாசிரியன், மீடிய பரசமயக் குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய் கிலையாற் போத காசிரி யன்னிவை நிகழ்தொறு நிகழ்தோறும், ஆடிய ஞானத் திறனுற லான்ஞா ஞசிரியனு நீ" (சப் - பரு-9); "புவியிற் பத்திசெய் மார்க்க மறிந்தவரார்...விமலாநீ யவதாரஞ் செய்யாவிடி னெனமேய" (தால் - 10) என்று இக்கருத்துக்களைக் காட்டி மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழிற் பாராட்டியமை காண்க.

2720. (வி - ரை) என்று இந்த மெய்ம்மொழி - "வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்" என்ற பதிகத்தின் முதற்பாதம். பதிகம் மெய்ம்மொழி எனப்பட்டது.

பயன் - மன்ன ஆம் என்று கூட்டுக. மன்னுதல் மொழியின் பயனும் என்க. மன்னுதல் பயன் என்பது கருத்து.

உலகம் - உயிர்கள், இன்பத் துன்பங்களை அடைவன அவையேயாகலான்.

இன்புற - இன்பமடையும் பொருட்டு. இன்புற - வழிபாடு மன்ன என்க. உலக மின்புறும்பொருட்டுச் சிவனது வழிபாடு செய்யக்கடவது என்றபடி; மன்னுதல் - இடையறாது நிகழ்தல்.

சந்த வேள்விகள் முதல் - அர்ச்சனை - வழிபாடு - என்க. சந்த வேள்வி - சந்தசுகளுடன் கூடிய வேதங்களில் விதிக்கப்பட்டனவும், உரிய சந்தசுடன் உச்சரிக்கப்படும் மந்திரங்களைக் கொண்டனவுமாகிய வேத வேள்விகள். "வேத வேள்வியை நிந்தனை செய்துழல், ஆத மில்லி யமணொடு தேரரை, வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே" என்று தொடக்கத்தில் இறைவர் திருவுள்ளக் குறிப்பு (அனுக்ஞை) பெற்றமை காண்க. அர்ச்சனை வழிபாடு - அர்ச்சனைகளும் ஏனை வழிபாடுகளும். இவை சிவாகமங்களின் விதிக்கப்பட்டன.

அந்தணர் - பாரார்த்தமாகிய வேத வேள்விக்குரிய வைதிகர்களும் ஆகம வேள்விக்குரிய சிவ வேதியர்களும் அடங்க அந்தணர் என்றார். உலகமின்புற இவ்வேள்விகள் செய்யப்படுதலின் இவர்கள் முனிவர் - அந்தணர் - எனப்பெறுவர்கள். சிவபாதவிருத

---

*இப்பன்னிரு திருப்பெயர்களையும் ஆசிரியர் போற்றியவாறு தினமும் போற்றி அருச்சிப்பதற்கு எளிதாய் நினைவுகூர்தற் பொருட்டு யாக்கப்பட்ட பன்னிரு பெயர்த் துதி என்னும் துவாதச நாமார்ச்சனைத் தோத்திரம் :—

திருஞான சம்பந்த தேவே போற்றி ;
அருளுறு சண்பை யாண்டகை போற்றி;
விளங்கிய பூந்தராய் வேந்தே போற்றி ;
களங்கமில் சண்பைக் காவல போற்றி ;
அரணுறு சண்பை அரசே போற்றி ;
விரவிய கொள்கை மேலோய் போற்றி;
பெம்மா னிவனெனும் பிள்ளை போற்றி ;
ஓதா துண்மைக ளுணர்ந்தாய் போற்றி ;
மெய்ம்மை சேர் வேத வாயாய் போற்றி ;
வெம்மைதீர் வெங்குரு வேந்தே போற்றி ;
உமையருண் ஞான முண்டாய் போற்றி ;
விமலமார் சண்பையர் வேந்த போற்றி :
எனுமுந் நான்கா மித்திருப் பெயர்த்துதி
தனைமனமொன் றிநாடொறுஞ்சாற்றுவோர்
இம்மையி னின்பமன் கெய்தி
மெய்ம்மைவீட் டின்பமு மேவுவர் திடமே.

யர் - நமிநந்தியார் - திருநீலநக்கர் முதலியோரும், புகழ்த்துணையார் முதலியோருமாம். "மறை முனிவர் மூழ்குதலும்" (1958). "ஆதி மாமறை விதியினு லாறுசூழ் வேணி, நாத னுரைமுன் னாகவே புரியுநல் வேள்வி, தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து, வேத வேதிய ரனைவருஞ் செய்யவும்" (2327); "கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" (தேவா); "தில்லை யந்தணர்" (359) முதலியவற்றின் கருத்துக் கள் காண்க; இக்கருத்தினையே "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள்) என்றருளினார் திருவள்ளுவரும். ஈண்டும் "உலகமின்புற" என்றது காண்க. இக்கருத்துக்களை மனங்கொள்ளாது அந்தணர் என்பதனை வெறும் இடுகுறியளவான சாதிப் பெயராகக் கொண்டு பேரருள்ஞானப் பிழம்பாகிய பிள்ளையார் பாலும் பிணங்கி அபசாரப்படும் மாக்களும் உண்டு; அஃது அவர்தம் ஊழின் வலி என்க.

**சங்கரர்க்கு முன் வந்த - சங்கரர்** - சுகத்தைச் செய்பவர் என்பது பொருள். உலகம் இன்புறச் செய்யும் வேள்விக்கும் வழிபாட்டுக்கும் முதல்வராய்க் கருதிய இன்பத்தைச் செய்யவல்லவர் அவரேயாம் என்பார் இப்பெயராற் கூறினார். **முன்** - முதன்மையாக.

**வேள்விகள்** - சிவவேள்விகள்; சிறுதெய்வங்களைக் குறித்த வேள்விகளல்ல; சங்கரர்க்கு என்ற குறிப்புமிது; இங்கு இவை சமணர்க்குமுடையதென்று கூறும் சமண்சார்பு பற்றி வீழும் உரைகாரருமுண்டு; அஃது அபிமானம்பற்றிய வெற் றுரையென் றொழிக. சமணரை மறுக்கவந்த இவ்விடத்துப் பிள்ளையாரது மூலநூற் கருத்துக்கும் உரை அருளும் ஆசிரியர்பெருமான் கருத்துக்கும் ஒருசிறிதும் பொருந் தாது தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்பான்புகும் உரைகாரர்களை இகழ்ந்தொதுக்கு தலேயன்றி வேறு என்னென்று சொல்வது? சங்கரர்க்கு முன்வந்த வேள்விகளைச் சமணரும் செய்வர் என்பது இவர் கருத்தோ? என்று விடுக்க.

**ஆனினங்கள்** - சண்டீசர் சரிதம் காண்க. 822

2721. (வி - ரை) **வேள்விநற்பயன் "வீழ்புனல்" ஆவது** - "வீழ்க தண் புனல்" என்ற பதிகப்பகுதிக் கருத்து வேள்விகளின் நல்ல பயன் மழை - புனல் - வீழ் வது ஆம் என்க. வீழ்புனல் வேள்வி நற்பயனுவது என்று வாழ்த்தியது என்னை? எனில் புனல் நாளும் சிவனது அருச்சனையின் நல்ல அங்கமாதலால் என்க.

**நற்பயன்** - வேள்விப் பயன் பலவாம். அவற்றுள் நல்லபயன் மழை பெய்தல் என்பார் நற்பயன் என்றார்; **நல்** - சிறப்புக் குறித்தது; ஏனைப் பயன்கள் நல்லவல்ல என்பதன்று. சங்கரர்க்குச் செய்யும் வேள்விகளின் பயன் எவையும் நல்லவையே ஆம்; "தீது நீங்க" (2327); அவற்றுள்ளே சிறந்த பயன் என்பது.

**நல்லுறுப்பு - நற்பயன்** என்றவாறு ஈண்டும் உறுப்புப் பலவற்றுள்ளும் சிறந்த உறுப்பாம் என்க; ஏனை அங்கங்களாவன - மலர் - புகை - ஒளி - அமுது - முத லாயின.

**புனல் அருச்சனை நல் உறுப்பு** - என்றது சிவனது வழிபாட்டில் நீர் இன்றியமை யாச் சிறப்புடையது என்றபடி; "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" (திருமந்திரம்); "பூவோடு நீர்சுமக்கும் நின்னடியார்" (பிள். தேவா); "தூயகா விரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி" "இட்டுக் கொள்வன பூவுள நீருள" (அரசு. தேவா); "அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்" (நம்பி - தேவா); "போதும் பெறுவிடிற் பச்சிலையுண்டு புனலுண் டெங்கும்" (11-ம் திருமுறை - கழுமல மும். கோவை); "எங்கோமான் றனைவிடுவே னல்லேனென் றிராப்புத

லும், கொங்கார்பன் மலர்கொண்டு தூவிர்புனல்கோண் டருச்சிப்பார்" (புகழ்த் துணை-புரா - 2); "சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" (குறள்).

அநுச்சனை - வழிபாட்டின் (திருவீழிமிழலை வரலாறும் ஏயர்கோனுர் வரலாறும் காண்க.) திருமஞ்சனம் - அருக்கியம் - பாத்தியம் முதலியனவாகிய எல்லா அங்கங் களேயும் குறிக்கும் பொதுமொழி.

நாளும் - சிவவழிபாடு ஒவ்வொரு நாளும் செய்தல்வேண்டும் - ஒவ்வொரு நாளி லும் உரியகாலங்களில் எல்லாம் செய்தல்வேண்டும்.

வேள்வி நற்பயன் வீழ்புனல் ஆவது - மழை வேள்விகளின் பயனுகவே வீழ் வது என்ற உண்மை வேத சிவாகமங்களின் கருத்து. "மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும், விண்ணிற் புயல்காட்டும் வீழிம் மிழலையே" (பிள். தேவா. குறிஞ்சி - 5); "மங்குறோய் மாடச் சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும், அங்கவை பொழிந்த நீரு மாகுதிப் புகைப்பா ருறும்" (836) முதலிய திருவாக்குக்களின் கருத் தும் தமிழ்ச்சுவையும் குறிப்பும் காண்க.

வேள்வியின் பயனும் வருவது புனல் ஆகும்; அதுவே வேள்வியின் அங்கமுமாம் என்ற இரண்டும் குறித்தமை காண்க.

வீழ்க தண்புனல் - "வீழ்க" என்ற சொல் நன்மை தரும் அருள்ஆசியாய் வந்த சிறப்பு; மழையினைப்பற்றிய சிறப்புரிமையாம்.

ஆளும் மன்னனை வாழ்த்தியது - "வேந்தனு மோங்குக" என்ற பதிகத்தின் பகுதியின் கருத்தும் காரணமும் என்னை? எனில் இது என்க.

மூளும் - முதலாகத் தொடர்ந்து வரும் - பெருகி வரும்; இவை - முன் பாட் டிற் கூறிய வேள்விகள் முதலிய வழிபாடுகளைக் காத்தலால் அவை காரணமாய் நிற்கும் மழையும்.

காக்கும் முறைமையால் - காத்தற் கடமை பூண்டவன் அரசன் என்ற முறைமை குறிக்க; எறிபத்தநாயனுர் புராணத்துள்ளும், புகழ்ச்சோழர் புராணத்துள்ளும் வருமாறு புகழ்ச்சோழர் இந்த அரச கடமையை நிறைவேற்றிய வரலாற்றினையும், இடங்கழியார் சரித வரலாற்றினையும் ஈண்டுக் கருதுக; மனுநீதிச் சோழர் சரிதமும் காண்க. இறைவரது வழிபாடு காக்கும் வகையால் மழை பெய்யப்பெற்று உலகங் காத்தல் அரசர் கடன் என்பது "ஏத நன்னில மீரறு வேலி" (3) என்றும், "வையக முற்று மாமழை மறந்து வயலி னீரிலை மாநிலந் தருகோ, முய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும், பெய்யு மாமழைப் பெருவெள் ளந் தவிர்த்துப், பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும், செய்கை" (தக்கேசி- திருப்புன்கூர் - 2) என்றும்வரும் ஆளுடையநம்பிகளது திருவாக்கானும், "இயல்பு ளிக் கோலோச்சு மன்னவ னாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" என்றும், "முறை கோடி மன்னவன் செய்யி னுறைகோடி, யொல்லாது வானம் பெயல்" என்றும் (குறள்) உடன்பாட்டினும் எதிர்மறையினும் வைத்துக்கூறும் பொய்யாமொழியார் கூற்றானும், பிறவாற்றானும் உணரப்படும். "ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன் மறப்பர், காவலன் காவா னெனின்" (குறள்) என்றதும் இத்திருப்பாட்டின் முற் கூறிய கருத்துக்களை வற்புறுத்தும்; "அந்தணர் நூற்கு மறத்துக்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்", "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம், வானம் வழங்கா தெனின்" என்ற திருக்குறட் பாக்களும், பின்னதனை எடுத்து "நேய புகழ்த் துணையார் நீராட்டும் கைதளர்ந்தன், றூயமுடி மேல்வீழ்ந்தார் சோமேசா" என்று

மாதவச் சிவஞான முனிவர் தமது சோமேசர் முதுமொழி வெண்பாவிற் காட்டியருளியமையும் ஈண்டுக் கருதத் தக்கன.

**மன்னனை - வேந்தனை** - அன்றி இக்காலத்துக் கொள்ளப்படும் நவீன விளைவுகளாகிய குடியரசு - முதலிய முறைகள் நம் ஆன்றோர்க்கு உடன்பாடில்லாதவை என்க. 823

2722. (வி - ரை) **ஆழ்க தீயது என்று ஓதிற்று அயனெறி வீழ்க் என்றது** - இஃது "ஆழ்க தீயது" என்ற பதிகப் பகுதியின் கருத்தை விளக்கிற்று; **தீயது** - தீமைபயக்கும் அயல் நெறிகளின் தொகுதியை; இவை வேதங்களை உடன்படாத புறப்புறம், புறம் என்று வகுக்கப்படும்; இவை திருநீறு அக்கமணி யாகிய சாதனங்களை யுடன்படாமையால் **தீயது** என்றும் **ஆழ்க** என்றும் ஒதுக்கப்பட்டன. இவை இவ்வாறு பலவாயினும் அவற்றால் வரும் தீமை சிவநிந்தை சிவசாதன நிந்தை என்ற ஒன்றேயாதலானும்; இவை எல்லாம் ஒன்றுபோலவே முற்றும் மறுத்தொதுக்கப்படுவனவாதலானும் **தீயது** என ஒருமையாற்சுட்டிக் கூறினார்; இதனை அறிவுறுத்தவே "ஆழ்க தீயது என்றோதிற்று...வேறெல்லா மரன்பெயர் சூழ்க" என்றது எனப் பிரித்துக்காட்டி உரைவகுத்தருளினர் ஆசிரியர். இக்கருத்துக்களை அறியாது இந்நாளில் இத்திருப்பாட்டை ஓதுபவர்கள் "ஆழ்க தீயதெல்லாம்" என்று பிழையாகப் படிகின்றனர்; அது தவறு. **தீயது** - ஆணவமல விளைவு மறைப்பு.

**வேறு** - அயனெறி வீழ்க என்ற கருத்துக்கு வேறாக என்க. முன் சொன்னது தீமையைப் போக்குதல்; மேற்சொல்வது அதன்பின் நன்மையை ஆக்குதல். இவையிரண்டும் பாசநீக்கமும் சிவப்பேறுமாக போதம் 10-11 சூத்திரங்களிற் றனித்தனி கூறப்படும் இருவேறு நிலைகள்.

**எல்லாம்** - எல்லா வுயிர்களும்; சேதனப் பிரபஞ்சம் என்பர்; ஓதி வளர்தற் குரியவை அவையேயாதலின். "உயிர் யாவையும்" என்றது ஆசிரியர் காட்டும் பொருள்.

**அரன் பெயர்** - சிவனது திருநாமத்தை உட்கொண்ட ஸ்ரீபஞ்சாக்கரம் என்னும் திருவைந்தெழுத்து. "ஆலைப் படுகரும்பின் சாறு போல வண்ணிக்கு மைந்தெழுத்தின் நாமத் தான்காண்", "துஞ்சும் போதுநின் னாமத் திருவெழுத் தஞ்சுந் தோன்ற வருளுமையாறரே" (தேவா).

**சூழ்க** - சூழ்தல் - அழுந்த எண்ணுதல்; "ஓதி வளர்க" என்றது ஆசிரியர் கண்ட பொருள்.

**வாழி** - வாழிய என்றது வாழி என நின்றது.

**உயிர் - வளர்கவே** - உயிர் வளர்தலாவது சிவத்தன்மை பெற்றுப் பொலிவடைதல்; கட்டுற்றுச் செத்தும் பிறந்தும் உழலாது கட்டு நீங்கிச் சிவத்தன்மையுள் நிறைவாகி நிலைபெறுதல். **வளர்க** - சூழ்க என்றதன் கருத்து.

**வீழ்கவென்று வேறெல்லா மரன் பெயர்** - என்பதும் பாடம். 824

2723. (வி - ரை) **சொன்ன வையக் முந்துயர் தீர்கவே என்னும் நீர்மை** - "வையகமுந் துயர் தீர்கவே" என்று பதிகத்துட் சொன்ன தன்மையின் கருத்து; **சொன்ன** - பதிகத்தினுட் சொல்லிய. **நீர்மை** - கருணைத்தன்மை.

**துயர்** - இகத்திலும் பரத்திலும் பிறவித் துன்பமேயன்றி நிரதிசய இன்பமில்லாத தன்மை. "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போது" (தேவா); இகமும் பரமும் இரண்டும் பிறவியிற் படுதலின் **துயர்** என்றார்;

**துயர் மன்னி வாழ் உலகத்தவர் மாற்றிட** - பிறவித் துன்பமே பொருந்தி வாழும் உயிர்கள், அதனை மாற்றிப் பிறவாத தன்மையுடைய சிவநெறி யடைந்திடும் பொருட்டு.

**மொழிந்தனர்** - துயர் தீர்க என்று ஆசி மொழிந்தருளினர்.

**இகத்துத் துயர்** - பிணி சாக்காடு முதலியவற்றாலும், **பரத்துத் துயர்** - அலகை முதலியவற்றாலும் காணப்படும்.

**முன்னர்** - தொடக்கத்தில் ; ஞானோபதேசமாகிய இவ்வருளிப்பாட்டின் மங்கல வாழ்த்தாகிய இம் முதற்பாட்டில்.

**ஞானசம்பந்தர் மொழிந்தனர்** - முதற்பாட்டின் உரை முடிந்தமை எழுவாயும் பயனிலையுமாகப் பிள்ளையாரது திருப்பெயருடன் வினைமுற்றுத் தந்து முடித்துக்காட்டினர். இவ்வாறே ஏனைய திருப்பாட்டுக்களினும் கண்டுகொள்க. இப்பதிகம் ஞானாசிரியராந் தன்மையில் வரும் உபதேசம் என்று குறிக்க இப்பெயராற் கூறினார்.

**திருப்பாசுரம் முதற்றிருப்பாட்டின் நோக்கப்பொருள்** - ஆசிரியர் காட்டியருளிய வாறு :—இத் திருப்பாசுரமாகிய மெய்ம்மொழிப் பயன் உலகுயிர் யாவையும் துன்ப நீங்கி இன்பவாழ்வடைதலேயாம் ; அது சங்கரர்க்குச் சந்த கேள்விகள் முதல் அர்ச்சனை வழிபாடுகள் மன்னுதலாலன்றி நிகழாது; அவை மன்னுதலின் பொருட்டு, அந்தணர்களும் தேவர்களும் ஆனினங்களும் வாழ்க ; அவ்வேள்வி யர்ச்சனை வழிபாடுகளின் பயனாய் விளைந்து அவற்றிற்குரிய நல்லுறுப்பாகிய மழையும் வீழ்ந்து பெருகுக ; அவற்றைக் காக்கும் மன்னவன் ஓங்குக ; அவற்றால் வரும் நலங்களை அடையவொட்டாது கேடுவிளைக்கும் அயனெறிகளின் தீமை ஆழ்ந்து அவை தத்தமக்குரிய நிலைகளில் அமைந்தொழிக ; உயிர்கள் யாவும் சிவனுமமே ஓதி வளர்க ; இவ்வாறு உலகுயிர்கள் துயர் நீங்குக என்றதாம்.

தமக்கெனவன்றி உலகமின்புறும்படி வேள்வி யர்ச்சனை வழிபாடுகள் சங்கரர்க்கு இயற்றுவோர் அந்தணர்களாதலின் அவர்கள் முன்னும், அவ்வழிபாடுகளைச் சிவ ணியதிப்படி ஏற்றுச் செலுத்துவோர் வானவராதலின் அவர்கள் அதன் பின்னும், வேள்வி வழிபாட்டுக்குரிய சிறந்த கௌவியங்களையும் திருநீற்றினையும் அளித்தலால் ஆனினம் அதன் பின்னும், வேள்வி வழிபாட்டின் பயனாய் வந்து அவற்றிற்குரிய இன்றியமையாத உறுப்பாகிய நீரினையும் உலக சாதனங்களையும் தருதலால் (மழை) தண்புனல் அதன் பின்னும், இவ்வெல்லாவற்றையும் காத்தற்கடன் பூணுதலால் வேந்தன் அதன் பின்னும், கேட்டில் வீழாமை முதற்கண் வேண்டப்படுதலின் தீயது ஆழ்தல் அதன் பின்னும், தீமை ஒழிந்தபோது இன்பம் பெறும் சாதனமாகிய அரன்பெயர் சூழ்தல் அதன் பின்னும், துயர்தீர்தலாகிய பயன் அதன்பின்னும் ஓதப்பட்ட வைப்பு முறை கண்டுகொள்க.

இப்பாட்டுப் பின்வரும் ஞானோபதேசத்துக்கு முதற்கண் வைக்கப்பட்ட மங்கல வாழ்த்து எனக் காண்க. திருக்கயிலாயபதி நேரே குருவாய் எழுந்தருளி ஞானவமுதூட்ட உண்டு எண்ணரிய சிவஞானமுணர்ந்த கயிலாய பரம்பரையில் வந்த முதல்வராகிய பிள்ளையாரே இங்கு ஞானாசாரியர் ; வைகைக்கரையே தீட்சாமண்டபம் ; பாண்டியனே பக்குவமுற்ற நன்மாணவகர் ; உரைத்தறிவுறுத்திய பொருள் மெய்ஞ்ஞானம் ; "ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல், ஊனத் திரளை நீக்கு மதுவும் உண்மைப் பொருள்போலும்" (அண்ணாமலை - பிள் - தேவா); "மன்ற, பாண்டியன் கேட்பக் கிளக்குமெய்ஞ் ஞானத்தின்" (இருபாவிருபஃது - 2) ; "எல்லா மரனுமமே சூழ்க" என்றதனால் வணக்கமும், வாழ்க அந்தணர் என்றதனால் வாழ்த்தும், அரனுமமே என்றதனால் சாதனமும், துயர் தீர்கவே என்றதனாற் பயனும், கூறிய திறமும்;

அரன் என்றதனால் சங்கார காரணனாகிய முதல்வனே முதல்வன் என்ற பதியுண்மையும் இலக்கணமும், எல்லாம் சூழ்க் - வையகமும் துயர் தீர்க என்றதனால் பசுக்களின் உண்மையும் இலக்கணமும் ; தீயது-துயர் என்றதனால் பாசவுண்மையும் இலக்கணமும் கூறிய திறமும் என்றிவ்வாறு சிவாகம ஞானபாத முடிபுகள் எல்லாம் பொருந்தக் குறிப்பாலுணர்த்தியருளிய வகையினால் பொருளியல்புரைத்தலும் என்று இது மூவகை வாழ்த்தும் ஆதல் கண்டுகொள்க.

எல்லாம் - சூழ்க; வையகமும் துயர் தீர்க -. சூழ்க - தீர்க - "கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள், இயலு மிடம்பா லெங்கு மென்ப" ஆதலின் மூவிடத்தினும் ஐம்பாலினுஞ் செல்வதாகிய இவ்வியங்கோள் பிள்ளையார் அருளிய அன்று நிகழ்காலத்திலே குறித்த அப்பயன் தந்ததுமன்றிப், பின்னர் எக்காலத்தும் சென்று அவ்வாறே அருட்பயன் தருவனவாம் என்று காட்டும் திறத்தால் ஆசிரியர் பின்னர், "எங்களை வாழ முன்னா ளேடுவை கையினி லிட்டார்" (புரா - 1230) என்று நினைவுகொள்ளக் கூறியருளுதலும் ஈண்டுக் கருதுக ; மெய்த்திருவாக்காதலின் என்றும் எங்கும் ஒன்று போலவே பயன்றருமென்க.

இறைவர்பால் உணர்வரிய மெய்ஞ்ஞானம் பெற்ற ஞானசாரியர் அருளிய ஞான உபதேசத்துக்கு அவ்விறைவரது "மெய்ம்மொழி" பெற்ற ஆசிரியர் சேக்கிழார்பெருமானும் அவ்வாறே கயிலாய பரம்பரையில் வந்து உரைவகுத்தருளிய பெருமையும் தெய்வக் குறிப்பும் கண்டுகொள்க. 825

["(1)அரிய காட்சிய ராய்த்; (2) தம தங்கைசேர்
எரியர்; (3) ஏறுகந் தேறுவர்; (4) கண்டமுங்
கரியர். (5) காடுறை வாழ்க்கையர்... "]

2724. "அரிய காட்சிய" ரென்பதவ் வாதியைத்
"தெரிய லாநிலை யாற்" றெரி யாரென,
உரிய வன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினார்; அஉசா

(இ - ள்) அவ்வாதியை "அரிய காட்சியர்" என்பது ஆதி தெரியலா நிலையால் - முன்பாட்டில் அரன் என்று கூறிய அந்த ஆதியைப் பாசஞான பசுஞானங்களால் தெரியப்படாத நிலைமையுடைமை காரணமாக அரிய காட்சியர் என்று சொல்வது ஆம்; தெரியார் என - அவ்வாறு பாச பசு ஞானங்களால் தெரியமாட்டாதவர் என்று அறிந்து, காண்பதற்கு உரிய அன்பின்றிறத்தாலே காணும் பக்குவமுடைய அடியவர்களுக்கு; உண்மையாம்...பேசினார் - காண உள்ளனவாகும் நல்ல அடையாளங்களை அதன்மேல் எரியர்-ஏறுவர்-கரியர்-வாழ்க்கையர் என்றிவ்வாறு எடுத்துக் கூறியருளினார் ; அஉசா

[ஆயினும் பெரியர்]

2725. "ஆயி னும்பெரி யா"ரவ ரென்பது
மேய விவ்வியல் பேயன்றி, விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயி ரண்டங்கள்
ஏயும் யாவு மிவர்வடி வென்றதாம்; அஉஎ

(இ - ள்) அவர் "ஆயினும் பெரியார்" என்பது - அம்முதல்வர் முற்சொன்ன அடையாள நிலைகளையுடையவராகக் காணப்படுபவராயினும் அக்காட்சியுள்ளே யடங்

காத பெருமையுடையவர் என்று சொல்லப்படுமியல்பாவது ; மேய இவ் இயல்பே யன்றி - மேற்கொண்டருளிய முன்சொன்ன "அரிய"ரா யிருத்தல் முதலாகிய இயல்பு களை யுடைமையே யல்லாமல் ; விண்முதல்...என்றதாம் - விண்முதலாகப் பரந்த ஐம் பூதங்களும் பலவுயிர்களும் அண்டங்களும் இன்னும் உளவாகிய யாவையும் இவர் பெரு வடிவில் பொருந்துவன என்று கூறியபடியாம் ; ௨௨௭

[ஆரறிவார் அவர் பெற்றியே]

2726. பின்பு "மாரறி வாரவர் பெற்றியே"
யென்ப தியாருணர் வானுஞ்சென் றெட்டொணா
மன்பெ ருந்தன்மை யாரென வாழ்த்தினார்
அன்பு சூழ்சண்பை யாண்டகை யாரவர். ௨௨௮

(இ - ள்) பின்பும்...என்பது - மேலும் அவர் பெற்றியே ஆர் அறிவார்? என்று கூறும் தன்மையாவது ; யாருணர்வாலும்...தன்மையார் என - யாவருடைய உணர்வி னாலும் சென்று எட்டுதற்கியலாத நிலைபெற்ற பெரிய தன்மையினையுடையவர் அவர் என்று ; அன்பு...ஆண்டகையாரவர் - அன்பு சூழ்ந்த சண்பை ஆண்டகையாராகிய அப் பிள்ளையார் ; வாழ்த்தினார் - வாழ்த்தியருளினார்; ௨௨௮

இம்மூன்று திருப்பாட்டுக்களானும் "அரிய காட்சியர்" என்று தொடங்கும் திருப்பாசுரத்தின் இரண்டாவது திருப்பாட்டுக்குப் பேருரை வகுத்தருளினார் ஆசிரியர் பெருமான்.

2724. (வி - ரை) அரிய...என - "அரிய காட்சியராய்" என்ற பதிகப் பகுதி யின் உரை விரித்தவாறு : காட்சிக்குரியர் என்னில் அதுபொருளன்னவரும் ; "அறி பொரு ளசித்தாம் ; அறியாத தின்றாம்" என்றாற்போலக் (போதம் - 6 சூ) காட்சிக் குரியராயின் அழிபொருளாம். எவ்வாற்றானும் காட்சிப்படாரெனின் பயனின்றாம். ஆதலின், இவ்விருவகையுமன்றி உள்பொருளாய்ப் பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிதாய்ப் பதிஞானமொன்றானே காணப்படுவதாய் உள்ளது அந்த முதல்வனதியல்பு என்பார் காட்சியரியர் என்னாது அரியகாட்சியர் என்றார். பாசஞானத்தாற் காணப் படாமை காட்சி நான்கனுள் இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, தன்வேதனைக் காட்சி என்ற மூவகைக் காட்சியினா லறியமாட்டாமையும், "வேத சாத்திர மிருதி புராண கலைஞானம் விரும்பசபை வைகரியா தித்திறங்கண் மேலாம், நாதமுடி வானவெலாம் பாசஞானம்" என்றதனால் வேத முதலிய சாத்திரங்களானும் காணப்படாமையுமாம். இந்திரியங்களும் மன முதலியவையும் மாயாகாரியங்களாதலின் தமக்குக் கீழ்ப்பட்ட தத்துவப் பொருள்களைக் காட்டுதலின்றி மாயைக்கு அப்பாற்பட்ட இறைவனைக் காண் டற்குக் கருவியாகமாட்டா.

இனி இவ்வாற்றானன்றி, அறிவைத் தடைசெய்து நின்ற மலசத்திகளை இயம நியம முதலிய அட்டாங்க யோக சமாதியான் ஒருவாறு கெடுத்து ஓரிடத் தொருகாலத் திருந்தாங்கிருந்து மூவிடத்து முக்காலத்துப் பொருள்களையும் காண்கின்ற காட்சியாய் உயிரினோ டுணர்வு தெரிவது யோகக் காட்சி எனப்படும் நான்காவது காட்சியாம்; அதனாற் காண்பமெனின் இதனிலும் ஆன்மபோத முனைப்பு நிற்றலால் இத்தகைய காட்சிக்கும் அரியர் இறைவர் என்க.

பின் என்னையோ இறைவன் காட்சிப்படும் நிலை? எனின், "ஊனக்கண் பாசமுணா ராப் பதியை, ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" (9 - சூ) என்ற சிவஞானபோதக்

கருத்தினைப் "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே, நேசமொடும் உள்ளத்தே நாடி" (1), "கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக் கண்ணுகிக் கரணங்கள் காணுமல்நிற்பன், கொண்டரனை யுளத்திற்கண்டடிகூடிற் பாசம் கூடாது" (5); "உளத்தவன்ரு னின்றகலப் பாலே சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி" (7); "அருளின் வழிநின், றஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க மதியருக்க னணையரவம் போற்றேன்று மான்மாவி லரனே" (8) என்பனவாதி திறங்களால் (8 - சூத்) விரித்த சிவஞானசித்தியார்த் திருவிருத்தங்களும், "தொடர்வரும் அருளி னுலே தோன்றுமா காணு ராயின் உடையவ னடிசேர்ஞான முணர்தவின் றணைத வின்றே" (79) என்ற சிவப்பிரகாசமும் ஈண்டுக் கருதத்தக்கன.

ஈண்டுத் "திரியக் காண்டல், இரட்டுறக் காண்டல், தெளியக் காண்டல் எனக் காட்சி மூவகைப்படும். அவை மூன்றும் அதிபக்குவமுடையார்க்குக் கேட்டல் மாத்திரையானே ஒருங்கு நிகழும்; ஏனையோர்க்குச் சோபான முறையாற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் மூன்ருனும் முறையே நிகழ்வன ஆகலின் ஆன்மதரிசனத்தைப்பயக்கும் சிவநுபத்தின்பின் ஆன்மசுத்தியைப் பயக்கும் சிவதரிசனம் ஒருதலையான் வேண்டப்படும்" என்றும், "பசுஞானத்தானும் பாசஞானத்தானும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனது ஞானக்கண்ணுனே தன்னறிவின்கண்ணே ஆராய்ந்தறிக; அப்பதிஞானத்தைப் பெறுமாறு யாங்ஙனமெனின், நிலமுதல் நாதமீருகிய பாசக்கூட்டம் (காரியப் பிரபஞ்சம்) நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரி னியல்பிற்ருய்க் கழிவதென் றறிந்து நீங்கவே, அப் பதிஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அங்ஙனம் விளங்கிய ஞானத்தான் ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்து அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும்" என்றும்வரும் (9 - சூ) மாபாடியமும் கருதுக.

இனி, இக்காட்சி யருமையாதலன்றி எளிமையாதற்கு "ஏகனுகி யிறைபணி நிற்ற"லும் (10) (அரன்) "காண வுள்ளத்தைக் கண்டு காட்டலும்" (11 - சூ) வேண்டப்படு மென்பது ஞான சாத்திரம். மேலும் இவ்வியல்பெல்லாம் சிவாகம முதலிய ஞானசாத்திரங்களால் அனுபவமுள்ள தேசிகர்பால் அடுத்துக் கேட்டுணரத் தக்கன.

அவ் ஆதியை - அகரச் சுட்டு. முன்பாட்டில் "அரன்" என்று குறிக்கப்பட்ட அந்த என முன்னறிசுட்டு. அரன் - சங்காரகாரணன். அவனே ஆதி என்பது "அந்தமாதி" "சங்கார காரணனுயுள்ள முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம்" என்று சிவஞானபோத முதற்சூத்திரத்துள் நாட்டப்பட்டது காண்க.

தெரியலா நிலையால் தெரியார் - தெரியலா நிலை - தெரிவிக்கமாட்டாத நிலைகள். இவை பிரம விட்டுணுக்கள் தெரியப்புக்க பசுபோத முற்பட்ட நிலைகளும், புத்தர், சமணர் முதலிய புறச்சமயத்தோர் காணமுயலு நிலைகளும், அத்தகைய பிறவுமாம். தெரியார் - தெரியப்படாதவர் எனச் செயப்பாட்டு வினையாகக் கொள்க.

என - என்று அறிந்தவர்களாகி.

உரிய அன்பினிற் காண்பவர்க்கு - நால்வகையுள் தீவிரதர சத்திநிபாதமும் மலபரிபாகமும் அடைதற்குரிய அன்பு முதிர்ந்து காணும் அடியவர்களுக்கு. அன்பினில் - அன்பினுலே - அன்பு துணையாக; நான் காண்கின்றேன் என்பதின்றி அவன் காட்டுகின்ருன் என்ற அன்புநிலை காரணமாக; "ஆர்வமுன் பெருக வாரா அன்பினிற் கண்டு கொண்டே" (777) என்ற நிலை; அன்பினுள்ளே அரனை வெளிப்படக் காண்

பவர்க்கு என எழுதுருபாக வைத்து உரைப்பினுமமையும். "உள்ளத்திற் றெளிகின்ற அன்பின் மெய்ம்மை யுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளஞ்செஞ் சடைக் கற்றை நெற்றிச் செங்கண் விமலரையும்" (புரா - 1023).

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய - வல்லதனுல்
ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன்" —(களிறு - 15)

என அரிய காட்சியராகிய அரன் காட்சிப்படும் நிலையினை ஞானசாத்திரம் கூறுதல் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. "காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே" (தேவா); "அப்படியு மந்நிறமு மவ்வண்ணமும் அவனருளே கண்ணுகக் காணி னல்லால்" (தேவா); "அவனரு ளாலே யவன்றுள் வணங்கி" (திருவா) என்பனவாதி திருவாக்குக்கள் அக்காட்சி அவன் காட்டினுலன்றிக் காணற் கரிதாந்தன்மையை விளக்குவன. அவன் அவ்வாறு காட்டுதற்கு அன்பும் பக்குவமும் காரணமென்க. இவற்றினியல்புகளை முன் (2717) உரைத்தாம். அவனருளை நாடினர்க்கு அவனருட் சத்தியால் காட்சிப்படுவர் என்க.

உண்மையாம் பெரிய-நல் அடையாளங்கள் - இவை இத்திருப்பாட்டில் மேல் (1) அங்கைசேர் எரியர் என்றும், (2) ஏறுகந் தேறுவர் என்றும், (3) கண்டமுங் கரியர் என்றும், காடுறை வாழ்க்கையர் என்றும் கூறினவாம்.

உண்மை ஆம் - பெரிய நல் - உண்மை - உள்ளன - அழிவில்லாதன என்பது. பெரிய - தற்பரமாகிய - தமக்குமேற் பரமில்லாத; எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிய. நல் - நற்பயன் தரும். இம்மூன் றடைமொழிகளாலும் சத்தாந் தன்மையும், முழுநிறைவாந் தன்மையும், பேரின்பமும் பேரருளும் உடையராந் தன்மையும் குறிக்கப்பட்டன.

அடையாளங்கள் - காட்சிப்படும் குறிகள். அடையாளங்கள் அவயவப் பகுப்புடைமை காட்டுதலால் ஏனையவைபோல முத்தொழிற்பட்டுக் கண்டமாய் அழியும் தன்மை வருமோ? எனை ஐயுறுமைப் பொருட்டு உண்மையாம்-பெரிய-நல்-என்று கூறினார்.

அரிய காட்சியர் என்றது சிவனது சொரூப நிலையினையும், எரியர் - ஏறுவர் - கரியர் - வாழ்க்கையர் என்றவை அவரது தடத்த வடிவங்களையும் குறிப்பன. பாச ஞானங்களுக்கு அரிய காட்சியராயினும், சிவஞானங்களின் காட்சிக்கு இத்திருமேனிகளாகக் காணப்படுவர் என்பதாம்.

அடையாளங்கள் - "பிரமபுர மேவினார் தம்மை அடையாளங்க ளுடன்சாற்றி" (1973) என்ற இடத்திற்போலவே ஈண்டும் கூறிய அடையாளங்களின் ஒற்றுமை கண்டு கொள்க. ஏறுகந் தேறுவர் - காடுறை வாழ்க்கையர் என்பன முறையே விடையேறி, காடுடைய சுடலைப்பொடி பூசி எனக் கூறப்பட்டன.

அங்கைசேர் எரியர் - என்பது தோடுடைய செவியன் என்பதுபோலச் சிவனது ஒரு அங்கத்தினையும் அதனில் ஏற்ற பொருளினையும் குறிப்பதவும், "சாற்றியிடு மங்கியிலே சங்காரம்" (உண்மைவிளக்கம்) என்றபடி கையில் ஏந்திய எரி சங்காரத்தைக் குறித்தலால் அதன்பின் இறைவர் சத்தியுடன் கூடிநின்று புனருற்பவம் உளதாகும் அருளின் உண்முகமாக நிற்பதனை உணர்த்துதலின் தோடு உடைய என்ற கருத்தைக் குறிப்பதவும், "முத்தி மருவாருங் குழலுமைபத் தினிவளர்ப்ப விடக்கரத்து வயுங்க

வேந்தி" (பேரூர்ப் புராணம் - கடவுள் வாழ்த்து) என்றபடி எரி வந்ததல் உலகோம்பு நிலை குறிப்பதுவும் காண்க. கண்டமுங் கரியர் - மதிசூடி என்றது போல அமுதவடிவம் குறித்தலும் காண்க.

அரிய காட்சியர் - அடையாளங்கள் - இவை இவ்வாறு பதிவடிவாகிய சொருப நிட்கள சகள நிலைகளை முன்னர் ஞானம்பெற்று இறைவனைத் தந்தைக்குக் காட்டும் இடத்தும், ஈண்டுப் பதியுண்மையினையும் பதி இலக்கணத்தையும் பாண்டியனுக்கு உபதேசிக்கும் இடத்தும் தொடக்கத்தில் பிள்ளையார் அருளியவாறு கண்டு, ஆசிரியர் சேக்கிழார் பெருமானும் தாமும் ஈண்டு எடுத்துக்காட்டியதன்றி இப்புராணத் தொடக்கத்தில் "உலகெலாமுணர்ந்தோதற் கரியவன்" என்றருளியமையும் கண்டுகொள்க. என்னை? "உலகெலாம்உணர்ந்தோதற் கரியவன்" என்றது "அரிய காட்சியர்" என்ற சிவனது சொருப நிலையினையும் - நிலவுலாவிய வேணியன் - சோதியன் - ஆடுவான் என்பன - "எரியர் - ஏறுவர்-கரியர்-வாழ்க்கையர்" என்பனவற்றுற் பெற்ற சிவனது தடத்தநிலையினையும் குறித்தவாறும் கண்டுகொள்க.

இனி, "அகளமா யாரு மறிவரி தப்பொருள், சகளமாய் வந்ததென் றுந்தீபற" (திருவுந்தி - 1); "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு, நிகரிலிறை நிற்கு நிறைந்து" (திருவருட்பயன் - 2); "அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக", "அகளமய மாய்நின்ற வம்பலத்தெங் கூத்தன்" (களிறு - 1-4); "அகர முதல வெழுத்தெல்லாம்" (குறள்); "உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும்...கருணையின் வடிவு காணே" (சித்தி - 1-54) என்பனவாதியாக வரும் திருவாக்குக்களின் கருத்துக்களும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன. ஞானஉபதேசமாதலின் அவைபோலவே ஈண்டும் அகர முதலாகத்தொடங்கிய மரபுநிலையும் கண்டுகொள்க.

உரிய அன்பினிற் காண்பவர்க்கு - என்றதனால் அன்பும் உரிய பக்குவமுமுடையாரே காண்பர் என்பதும், ஏனையோர் காணார் என்பதும் பெறப்பட்டன. "அமணர் காண்கிலார்களாயினும், தென்னவனறியும் பான்மையால்" (2718) என்றதும் காண்க; முன்னைத் தவநிறைவாகிய அன்பு காரணமாகவே பிள்ளையார்தாமும் கண்டு பேசினார் என்பார் "அன்புரும் சண்பை யாண்டகையார்" (2726) என மேல் இப்பாட்டின் விரிவுரை முடித்தருளியமை காண்க. 826

2725. (வி - ரை) "ஆயினும் பெரியார்" என்பது-இது திருப்பதிகம் 2-வது திருப்பாட்டில் "ஆயினும் பெரியார்" என்ற சொற்றொடர்ப் பகுதியின் பொருள் விரித்தபடி.

ஆயினும் - அகண்டாகாரசொருபமா யிருப்பதன்றித் திருவுருக்கொண்டு வித்தையாடுபவன்போலக் கையிலே நெருப்பைத் தூக்குதலும், யானை குதிரை முதலிய நல்ல வாகனங்களிலேறாமல் மாட்டிலேறுதலும், சுடுகாட்டிலிருத்தலும், முதலிய இவை பரத்துவத்துக்கு இழுக்கன்றோ என ஐயம் நிகழுமாயினும், அடியார்க்கிரங்கிச் சகளீகரித்தலேயன்றி எங்கு நிறைவாகிய அகண்டாகார வடிவமுடையவர் என்றதாம் என்பது இராமநாத செட்டியார் உரைக்குறிப்பு.

ஆயினும் - மேற்கூறியவாறு சொருபமும் தடத்தமுமாகிய வடிவுகளுடையாராயினும்.

மேய இவ்வியல்பு - முன்பாட்டிற்கூறிய இந்த என்க.

பெரியார் - அவற்றுள்ளுமடங்காது நீண்டு எங்கும் நிறைவாகியவர். இவ்வாறு ஆன்மாக்களை உய்யக்கொண்டருளும் பொருட்டு முன்கூறிய சொருப தடத்த நிலைகளை மேற்கொண்டருளினும் அவ்வருளினைத் திளைக்கும் அன்பர்களது கருத்தினாலும் அளக்க

லாகாதபடி நிற்பவர் என்பது ஆயினும் பெரியார் என்றதன் குறிப்பாகும். "கடலலைத்தே யாடுதற்குக் கைவந்து நின்றாறு, கடலளக்க வாராதாற் போலப் - படியில், அருத்திசெய்த வன்பரைவந் தாண்ட துவு மெல்லாந், கருத்துக்குச் சேயனுய்க் காண்" (களிறு - 90) என்ற ஞானநூற் கருத்து ஈண்டு உய்த்துணர்தற்பாலது.

பாய - பரந்த; விண்முதல் - வான்முதல் நிலமீறுகிய ஐந்து; விண்முதல் என்றது தோற்றம் முறைபற்றிக் கூறியது.

விண்முதல் பாய பூதங்கள் ஐந்தும், பல்லுயிர் என்னும் உயிர்களும், அண்டங்கள் - சூரிய சந்திரர்களாகிய அண்டங்களின் தெய்வங்களிரண்டும் ஆக அட்டமூர்த்தமாய் நின்றநிலை குறித்தது. "நிலனீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனுய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்" (திருவா). இவ்வாறன்றி அண்டங்கள் என்பதற்குச் சகல புவனங்களாகிய அண்டங்கள் என்பாருமுண்டு.

ஏவும் யாவும் - இவைகளேயன்றிப் பொருந்திய மற்று எல்லாப் பொருள்களும்.

இவர் வடிவு - இவரது பெருவடிவினுள் அடங்கி அமைவன; எல்லாவற்றுள்ளும் நிறைந்திருப்பர் என்றலுமாம். பெருவடிவை விசுவரூபம் என்பர். முருகப்பெருமான் இந்திரன் முதலிய தேவர்கள் காணக்காட்டும் பொருட்டு ஒருமுறையும் (திருவிளையாட்டுப் படலம் - 88-90), சூரன் காணக்காட்டும் பொருட்டு ஒருமுறையும் (சூரன்வதை - 422-427) மேற்கொண்டு காட்டியருளிய இப்பெருவடிவத்தினியல்பு கந்தபுராணத்தினுள் பேசப்பட்டது காண்க.

"மண்ணளவு பாதலமெ லாஞ்சரண, மாதிரவ ரைப்புமிகு தோள்,
விண்ணளவெ லாமுடிகள், பேரொளியெ லாநயன, மெய்ந்நடுவெ லாம்,
பண்ணளவு வேதமணி வா, யுணர்வெ லாஞ்செவிகள், பக்கமடன் மால்
எண்ணளவு சிந்தையுமை, யைந்தொழிலு நல்கியரு ளீச னுயிரே"

—(கந்தபு - திருவிளை - பட - 89); இதனைத் "தொல்லையொரு தனதுருவம்" என்பர் (ஷை சூரன் வதை - 427); "இருநிலனுய்த் தீயாகி....." எனும் நின்ற திருத்தாண்டகமும், மறைகளுள்ளே இதயமாகிய திருவுருத்திரமும் இக்கருத்தையே விளக்குவன.

பெரியார் - முன்கூறிய இயல்பின் அடங்காது நீள்பவர். 827

2627. (வி - ரை) "ஆரறிவா ரவர் பெற்றியே" என்பது பதிகப் பாட்டுப் பகுதி.

ஆரறிவார் - வினு; வேறு......ஒருவரும் அறியகில்லார் என எதிர்மறை குறித்தது; பெற்றி - "பெற்றி பிறர்க்கரிய பெம்மான்" (திருவா) என்றபடி முன்கூறியபடி உரிய அன்பினிற் காண்பவர் காணும் சில அடையாளங்களானன்றி அவர் தன்மையை முழுதும் அறியவல்லவர் எவருமிலர் என்பதாம். முன், அரிய காட்சியர் என்றார்; பின்னர் எரியர் முதலிய சில அடையாளங்களால் அறியப்படும் நிலை கூறினர்; அவற்றுளடங்காது நிற்கும் பெருநிலையும் கூறினர்; இவற்றுள் முடிந்துவிடுமோ அவர்நிலை என்னில் அன்று, யாவர்தான் அவர் பெற்றி முழுதும் அளந்தறிய வல்லவர் என வினுவினல் உறுதிப்பட எவராலும் இயலாது என்று முடித்துக்காட்டியருளினர். "இவர் தன்மை யறிவாரார்" என்று பாட்டுதோறும் வரும் திருப்பல்லவனீச்சுரப் பதிகம் இங்கு நினைவு கூரத்தக்கது.

யார் - யாவர் என்றது யார் எனக் குறைந்து நின்றது.

**உணர்வாலும்** - சிறப்பும்மை.

**சென்று எட்டொணு மன்பெருந் தன்மையார்** - " உலகெலா முணர்ந் தோதற் கரியவன் " ; **மன்பெரும்** - ஒருபொருட் பலசொல் மிகுதி குறித்தன. மிகப் பெரிய என்க. **மன்** - நிலைத்த என்றலுமாம்.

**வாழ்த்தினர்** - இறைவரது தன்மையினை எடுத்துக் கூறும் வகையாய்ப் போற்றி யருளினர்.

**அன்பு சூழ்** - அன்பின் திறத்தால் இறைவரை இடைவிடாது துணிந்து நினைக்கும் ; **சூழ்தல்** - நினைத்தல். அன்பு சூழ்ந்தவராதலின் வாழ்த்தினர் எனக் காரணக் குறிப்புப்பட உடம்பொடு புணர்த்தி ஓதினர். உரிய அன்பினிற் காண்பவர்க்கு என்ற படி அன்பு சூழவுள்ளவராதலின் என்றதும் குறிப்பு.

**ஆண்டகையார் அவர்** - ஆண்டகைமை இறைவரது சிவஞானத்தை முழுதும் பெற்று அதனுள் நிலைபெற்று நிற்கும் வீரத் தன்மை. **அவர்** - என்ற சுட்டும் அத் தேற்றப் பொருள்பட நின்றது. "யாவ ராயினு மன்ப ரன்றி யறியொணுமுதல்" (திருவா. சென்னிப்பத்து).

**ஆரறிவா ரவர்பெற்றி**-தாயுமானர் "அறிஞருரை"யில் இதனை விதந்தெடுத் தாண்டமை காண்க.

இம்மூன்று பாட்டுக்களின் தொகைப்பொருளாவது :—அரிய காட்சியர் என்ற இரண்டாம் திருப்பாட்டுப் பதியுண்மையும், பதியிலக்கணமும் வகுத்துக் காட்டிற்று என்பதாம். சொரூப தடத்த இலக்கணங்கள் பேசப்பட்டன. " **அரிய காட்சியர்** " என்று இலக்கணம் கூறியவகையால், உள்பொருளுக்கன்றி இலக்கணம் கூறுதலின்மை யால், பதிப்பொருளுண்மையும் உடன் கூறியபடி கண்டுகொள்க. **எரியர்** என்றது சங்காரத்தைக் குறித்தலின் அதனைச் செய்யும் சங்காரகாரணனுடுள்ள முதல்வனே உலகுக்கு முதல்வன் என்று கூறியதாம். (போதம் - 1 - சூத்.) இனி, " **ஏறு உகந் தேறுவர்**", "**கண்டமும் கரியர்** " என்றமையால் அவ்விறைவனே திதி கர்த்தாவாதல் குறிக்கப்பட்டது. அளவிலாற்றலையும் பேரருளுடைமையையும் **கரியர் - வாழ்க்கையர்** என்பவை குறித்தன. " அவையே தானே யாய் " (போதம் - 2 - சூத் ) என்ற கருத்துப் " பெரியார் " என்றதனுற் பெறப்பட்டது. " **ஈறாய்**...எட்டுத்திசை தானுய், **வேறு யுடனுனன்** " (தேவா. வீழி. பிள்ளையார்) ; " ஒன்று நீயல்லை யன்றி யொன் றில்லை ; யாருனை யறியகிற் பாரே " (திருவா) ; " **ஆரறிவா** ரந்த வகளமு நிகளமும் **ஆரறிவா** ரெங்க ளண்ணல் பெருமையை " (திருமந்திரம்) ; **அரிய காட்சியர்** - என்ற தனை " மறையினு லயனுன்...குறைவிலா வளவினுலுங் கூறொணு தாகி நின்ற இறை வனுர் " என்றும், **எரியர் - ஏறுவர் - கரியர் - வாழ்க்கையர்** என்றதனை " அருளினு வாக மத்தே யறியலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே, மருளெலா நீங் கக் கண்டு வாழலாம் " என்றும் சித்தியாரும் பின்வரும் ஞானசாரியர் விளக்குதல் காண்க.

[" வெந்த சாம்பல் விரையெனப் பூசியே "]

2727\. "வெந்த சாம்பல் விரை"யென் பதுதம
தந்த மில்லொளி யல்லா வொளியெலாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்த மாக்கொண்ட வண்ணமுஞ் சாற்றினர். அஉகூ

(இ - ள்) வெந்த...என்பது - "வெந்த சாம்பல் விரையெனப் பூசியே" என்று பதிகத்து மூன்றாந் திருப்பாட்டிற் கூறும் முதற்பாதப் பகுதியினில்; தமது...வெந்து அற - தமது அழிவில்லாத நித்தியமாகிய சிவவொளியல்லாத மற்ற ஒளிப்பொருள்களெல்லாம் சிருட்டிக் கிரமத்தில் தோன்றிச் சங்காரக் கிரமத்தில் வெந்து நீறாகி ஒழிய; மற்று - வேறாகிய; அப்பொடி - அந்தச் சாம்பலை; அணிசாந்தமா...சாற்றினார் - இறைவர் அழகாகிய சந்தனமாக மேற்கொண்ட வண்ணத்தினையும் எடுத்துக் கூறினார்; ௮௨௯

[" தந்தை யாரொடு தாயிலர் "]

2728. தமக்குத் "தந்தையர் தாயிலர்" என்பதும்
அமைத்திங் கியாவையு மாங்கவை வீந்தபோ
திமைத்த சோதி யடக்கிப்பின் னீதலால்
எமக்கு நாதர் பிறப்பில ரென்றதாம். ௮௩௦

(இ - ள்) தமக்கு...என்பதும் - மேல் அத்திருப்பாட்டில் இரண்டாம் பாதத்தில் தமக்குத் தந்தையாரொடு தாயிலர் என்பதன் கருத்தும்; இங்கு யாவையும் அமைத்து - தமதொளியல்லா வொளிப்பொருள்களெல்லாவற்றையும் சங்கரித்த பின் தமக்குள்ளே ஒடுக்கி; பின் ஈதலால் - பின்னரும் புனருர்பவத்தில் மீளவும் அவற்றை உளவாக்குதலால்; எமக்கு...என்றதாம் - எமது இறைவர் பிறப்பில்லாதவர் என்று கூறிய படியாம். ௮௩௦

[" தம்மையே, சிந்தியா வெழுவார் வினைதீர்ப்பரால் "]

2729. "தம்மை யேசிந்தி யா"வெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மை யேநினை வார்த மிருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவ ரென்றதாம். ௮௩௧

(இ - ள்) தம்மையே......தன்மைதான் - "தம்மையே சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்" என்று கூறும் பதிகப்பாட்டின் பகுதியினது தன்மையாவது; மெய்ம்மையாகி...தாமென - உண்மையாகி விளங்கும் ஒளி தாமே என்று கண்டு; இம்மையே... போக்குவர் என்றதாம் - நினைவார்களது இருவினைகள் தொடர்வதற்குக் காரணமாகிய பொய்ம்மையை விளைத்துநிற்கும் மலவிருளை இம்மையே நீக்குவார் என்றதாகும். ௮௩௧

[" எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ "]

2730. "எந்தை யாரவ ரெவ்வகை யார்கோ"லென்
றிந்த வாய்மைமற் றெப்பொருட் கூற்றினும்
முந்தை யோரையெக் கூற்றின் மொழிவதென்
றந்தண் பூந்தராய் வேந்த ரருளினார். ௮௩௨

(இ - ள்) எந்தையாரவர்...வாய்மை - "எந்தையாரவ ரெவ்வகையார்கொலோ" என்ற பதிகப்பாட்டின் இறுதியடியிற் கூறிய உண்மையாவது; மற்று எப்பொருள்... மொழிவது என்று - வேறு எந்தப் பொருளைப்பற்றிய சொற்பகுதிகளிலுள்ளும் அநாதி

மூத்த சித்துருவாகிய சிவபெருமானையே எவ்வகை மொழிகளாலும் சொல்லப் படாது என்று ; அந்தண்...அருளினார் - அழகிய குளிர்ந்த பூந்தாரைத் தலைவராகிய பிள்ளையார் அருளிச்செய்தனர். அங-உ

2727 முதல் 2730 வரை இந்நான்கு திருப்பாட்டுக்களானும் "வெந்த சாம்பல்" என்ற மூன்றாவது திருப்பாட்டின் உரையினை விரித்தருளினார்.

2727. (வி - ரை) " வெந்த சாம்பல் விரை எனப் பூசியே " என்பது பதிகப் பகுதி. இதனாற் சிவபெருமான், மாசங்காரத்தினிறுதியில் நீறாய்க் கிடந்த உலகத்தைத் தமது திருமேனியிற் றாங்கிநின்ற தன்மை பேசப்பட்டது. வெந்த சாம்பல் - வெந்த தனால் பெற்ற நீறு, ஆறு சென்ற வியர் என்புழிப்போல ; வெந்த என்பது காரணப் பொருளில் வந்தது.

விரை - கலவைச் சாந்து ; " சுண்ணவெண் சந்தனச் சாந்து " (தேவா) " சாந்தமும் திருநீறு " (திருவிசை). சிவதருமம் பல ; அவற்றுள்ளே சிறந்தது பூசனையாம் ; அப்பூசனையினுட் செய்யப்படும் உபசாரங்களுட் சிறந்தன ஐந்து அங்கங் கள். அவையாவன : அபிடேகம், விரை, விளக்கு, அருச்சனை, நிவேதனம் என்பன ; அவற்றுள் விரையாவது இலேபனமும் சுகந்தமுமென்று இருவகைப்படும் ; அவற்றுள் இலேபனமாவது பனிநீரும் பச்சைக்கர்ப்பூரமுங் குங்குமப்பூவுங் கோரோசனையும் புழுகுங் கத்தூரியுங் கலந்த மலாக்காச் சந்தனத்தைத் திருமேனி முழுவதுஞ் செறி வாகச் சாத்துதலாம் ; சுகந்தமாவது முல்லை, இருவாட்சி, பிச்சி (சாதி), மல்லிகை, பனிநீர், மருக்கொழுந்து, வெட்டிவேர் என்னும் எழினையுந் தொடுத்துத் திருவுருத் தெரியாவண்ணம் அலங்கரித்தலாம் எனவரும் ஆகமவிதிகள் ஈண்டுக் கருதத்தக்கன.

" சிவதருமம் பல ; வவற்றுட் சிறந்ததுபூ சனை;யதனுள்
அவமில்பல வுபசாரத் தைந்துசிறந் தனவவற்றைத்
தவமலியப் பதினாறு மண்டலந்தண் டாதியற்றிற்
கவலையறப் பயனிம்மைப் பிறப்பிடையே கைகூடும் " (28)

" ஆங்கவைதா மபிடேக மரியவிரை விளக்குமனுத்
தாங்குமருச் சனைநிவே தனமாகும்...... " (29)

" ......விரையிரண்டாந் தளர்த விலேபனமுந்
தயங்குசுகந் தமுமென்ன " (33)

" காசில்பனி நீர்பச்சைக் கருப்பூரங் குங்குமப்பூ
மாசறுரோ சனைபுழுகு மான்மதகா வியுங்கலந்த
வாசிகந்த மலாக்காச்சந் தனமிலே பனமதனைத்
தேசவிருந் திருமேனி முழுதுஞ்செறி தரக்கொட்டல்" (34)

எனவரும் பேரூர்ப்புராணம் (மருதவரைப் படலம்) காண்க.

விரை எனப் பூசியே - பூசியே என்பது உபசாரம். மாசங்காரத்துள் இறைவரை ஒழித்தொழிந்த எல்லாமும் நீறாக ; அந்நீறு தங்குதற்கு வேறு இடமின்மையின் ஆண்டு அழியாது நிற்கும் இறைவர் திருமேனிமேற் கிடத்தலை பூசுதலென் றுபசரித்துக் கூறப்படும்.

தமது அந்தம் இல் ஒளி-தமக்கு அழிவில்லாமையால் தமது சிவவொளி அந்தமில் ஒளி எனப்பட்டது. தாம் எல்லாவற்றுக்கும் அந்தத்தைச் செய்யத் தமக்கு அந்தஞ் செய்ய வேறொருவருமில்லாதவர். " அந்தமாதி " (போதம் - 1).

**அல்லா ஒளி எலாம் வந்து வெந்து அற** - ஈண்டு அல்லா ஒளி என்றது சிவனையல்லாத எல்லாப் பொருள்களின் ஒளி. ஒளி - ஒளியுடைப் பொருள் - சக்தி - என்ற பொருளில் வந்தது. வந்து - சிருட்டியின்கண்ணே பட்டுத் தோன்றி. **வெந்து அற** - சங்கரிக்கப்பட்டு ஒழிய.

**மற்று அப்பொடி** - மற்ற அந்தச் சாம்பர்; **மற்று** - தாமல்லாத ஏனையவை.

**அணி சந்தம்** - அணியும் சாந்து; **கொண்ட** - ஏற்றுக்கொண்ட.

**வண்ணம்** - தன்மை; திருமேனி வண்ணம் என்றலுமாம்.

**தமது அந்தமில் ஒளி அல்லா ஒளி எல்லாம் - வெந்தற** - என்றதனால் இங்குக் கூறியது நிவிர்த்திகலை முதலிய பஞ்சகலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக் கண்ணதாகிய மாசங்காரத்தை; **அந்தமில் ஒளி** - சிவசக்தி; **அல்லா ஒளியெல்லாம்** - அவ்வச் சங்காரத்துட்பட்டு ஒடுங்கும் தத்துவ புவனங்களின் அதிதெய்வங்களும் அவற்றின் சத்திகளும்; மாசங்காரத்தில் ஐவகைக் கலைகளுள் இறுதிக்கண்ணதாகிய சாந்தியதீத கலையிலடங்கிய தத்துவ புவனங்களும் தெய்வங்களும் எல்லாம் சிவனது அந்தமில் ஒளியினுள் ஒடுங்குவனவாதலின் **எல்லாம்** என்றதனால் ஈண்டுக் கூறியது சுத்தமாயா புவனாந்தஞ் சங்கரிக்கும் சங்கார காரணனாகிய பரமசிவனை; அயன்மாலொடுங்கூடக் குணதத்துவத்தின் வைகிப் பிரகிருதி புவனாந்தஞ் சங்கரிக்கும் குணிருத்திரனை யன்றென உணர்க;......இவ்வேறுபா டுணர்த்தற்கன்றே பொதுப்படச் சங்கார காரணனையென் றொழியாது **சங்காரணனாயுள்ள முதலையே** என விதந்தோதியதும் என்க என்ற சிவஞானபோத முதற்சூத்திர மாபாடிய உரை கருதுக.

**வந்து வெந்தற** - தோற்றப்பட்ட அம்முறையே சங்காரக்கிரமத்தில் ஒடுங்கி.

**பொடியணிதல்** - பொடி சந்தமாக் கொள்ளுதல் புனருற்பவம் குறித்தது; மறு பயிர்க்குரிய விதைமுதலைக் கோட்டை செய்து சேமித்தல்போல மீளச் சிருட்டித்தற் பொருட்டுத் தாங்குதல் என்க.

மேல்வரும் பாட்டில் "அமைத்திங் கியாவையும் ஆங்கவை வீந்தபோ, திமைத்த சோதி யடக்கிப்பின் னீதலால்" (2728) என்று இக்கருத்தை விரித்தல் காண்க. "ஒடுங்கி மலத்துளதாம்" என்ற சிவஞானபோத முதற் சூத்திரமுங் காண்க; "வீந்த சுடலை விபூதி தரித்திருவர், கூர்ந்த தலைமாலை கொண்டவரார்" என்ற இரட்டையர் திருவேகம்ப ரம்மானை இதனைப் போற்றுதல் காண்க; "அவர்தமை விழியாற் றொல்லை நாளினீ றாக்கியும் புனைந்திடுந் தூயோன்" எனவரும் (ததீசியுத்தரப் படலம்-13) கந்த புராணமும், "எலும்புங் கபாலமு மேந்தில னாகில், எலும்புங் கபாலமு மிற்றுமண் ணாமே" (2 - தந் - 371) என்ற திருமந்திரமும் காண்க. 829

2728. (வி - ரை) **தமக்குத் தந்தையார் தாயிலர்** - "தந்தையா ரொடுதாயிலர்" என்ற பதிகப்பாட்டுப் பகுதி. **என்பதும்** - இது முன்சொன்ன கருத்தைத் தொடர்ந்து கொண்டு விரித்தலால் உம்மை இறந்தது தழுவியது.

**இங்கு அமைத்து** - என்க. இங்கு என்ற சுட்டு தம்மிடத் தொடங்கியநிலையி னின்றும் வருவிக்கும் சிருட்டிநிலை குறித்தது. "இங்கு மங்கு மென்பதும்" (திருவா).

**யாவையும்** - ஐந்து கலைகளினுட்பட்ட எல்லாப் புவனங்களும் புவனாதிபதிகளும். "ஒளியெலாம்" என முன்பாட்டிற் கூறியதைத் தொடர்ந்துகொண்டார்.

**ஆங்கு** - சிருட்டிமுறையில் தோற்றிய அவ்வாறே; **வீந்தபோது** - சங்கரிக்கப் பட்டபோது.

**இமைத்த சோதி** - வெளிப்பட்டு ஒடுங்கித் தொழிலற்றிருக்கும் சிவசக்தி; சங்காரஞ் செய்த தமது நெற்றிநாட்டத் தொரு சிறுபொறி என்ற குறிப்பும் தருவது.

**அடக்கிப் பின் ஈதலால்** - ஒடுங்கச்செய்து பின்னரும் புனருற்பவம் செய்வதால். "ஒடுங்கி மலத்துளதாம்" (சிவஞானபோதம் - 1 சூ); "ஒடுங்குதற் கேதுவாய் நின்ற கடவுளினின்றும், சகசமலம் நீங்காமையால், அது நீங்குதற்பொருட்டு மீளத் தோன்றுவதாம்" என ஆண்டு உலகின்மேல்வைத்துக் கூறியது உலகினைக் கொண்டு பதிப்பொருளுண்மையினை அறிவிக்கும் முறையால் என்க; இங்கு அவ்வாறு ஒடுக்கி யும் மீளச் சிருட்டித்தும் இபற்றுபவர் மாசங்காரத்தைச் செய்யும் முதல்வராகிய சிவ பெருமான் எனப் பதியுண்மையும் இலக்கணமும் காட்டியவாறு. "நீடுமெய்ப் பொரு ளினுண்மை நிலைபெறுந் தன்மை யெல்லாம், ஏடற வெழுதி" (2694) என்று சமணர் ஒட்டினுராதலின் இவ்வாறு மெய்ப்பொருள் கூறியதாம். "ஒடுங்கிய சங்காரத் தின் அல்லது உற்பத்தியில்லை" என்று சிவஞானபோதத்துள் விரித்தலும் காண்க.

**அடக்குதல்** - பிறந்து இளைத்தலால் இளைப்பாற்றும் பொருட்டுத் தம்முள் ஒடுக் குதல்.

**பின் ஈதலால்** - "அந்தம் ஆதி" என்ற முதற்சூத்திரக் கருத்து. "சங்காரமே முதல்" என்க.

**எமக்கு நாதர்** - ஆன்மாக்களாகிய எங்களுக்குத் தலைவர்.

**நாதர் பிறப்பிலர்** - முன் அந்தம் - இறப்பு - இல்லாமை கூறினர்; ஈண்டுப் **பிறப்பு** - ஆதி - யில்லாமை கூறுகின்றார். "சராசரமாகிய எப்பொருளும் தன்னிடத் திற் றோன்றி யொடுங்கத் தானொன்றிற் றோன்றி யொடுங்காது நிற்றலிற் பிறப்பிறப் பிலர் என்றார்". **தந்தை தாய்** - என்பன தோன்றுமிடம் என்ற மாத்திரை குறித்து நின்றன. 830

2729. (வி - ரை) **தம்மையே சிந்தியா எனும் தன்மை** - "தம்மையே சிந் தியா எழுவார் வினை தீர்ப்பரால்" என்ற பதிகப் பாட்டுப் பகுதியினால் போந்த பதியின் இலக்கணமாவது என்க.

**தம்மையே** - ஏகாரம் பிரிநிலை, "இரண்டுற மனம் வையேல்" (பிள்ளை - தேவா); "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்" (அரசு - தேவா) முதலியவை காண்க.

**சிந்தியா எழுவார்** - **சிந்தியா** - சிந்தித்து; சிந்தித்து எழுவார் என்க. "தொழு தெழுவாள்" (குறள்) என்புழிப்போலக் கொள்க; **எழுவார்** - பிறவிக் குழியினின்றும் மேல் எழுவார்; ஒடுங்கிக் கிடந்த கேவல நிலையினின்றும் உணர்த்துமுறைமைச் சகத் தில் வருதலே ஈண்டு எழுதல் எனப்பட்டது.

**மெய்ம்மையாகி விளங்கொளிதாம் என இம்மையே நினைவார்** - **சிந்தியா எழுவார்** என்ற பதிகத் தொடருக்குச் சிந்திக்கும் ஆறு இதுவென ஆசிரியர் காட்டிய வாறு. இறைவரை அழிவில்லாத மெய்ம்மையாகி விளங்கும் பேரொளிப் பிழம்பாக இடையறாது அழுந்தியறிதல் சாதனம் என்க. "அரன் கழல் செலுமே" (8 - சூ) என்ற சிவஞானபோதச் சூத்திரக் கருத்துக்கள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கன. **சிந்தியா எழுவார்** என்ற தொடர் சிந்தை நாடி எனச் சிவஞானபோதத்தினுள் விளக்கப்பட்ட தென்க.

**மெய்ம்மையாகி விளங்கு ஒளிதாம்** - மெய்ம்மை - அழிவில்லாது நித்தமாதல்;

**விளங்குதல்** - பரஞ்சோதியாயும், சுயஞ்சோதியாயும், அலகில் சோதியாயும் விளங்குதல். "சோதியே சுடரே சூழொளி விளக்கே" (திருவா); தமக்கு மேற் பட்ட சோதி யில்லாதபடி எல்லா ஒளிகளுக்கும் அப்பாற்பட்டு விளங்குதலின் பரஞ்

சோதி எனவும், பிறிதொன்றனால் விளக்கமுறுதலன்றித் தானே விளக்கமுறுதலின் சுயஞ்சோதி யெனவும், அளவுபடாதிருத்தலின் அலகில் சோதி எனவும்படும்.

அவ்வாறு அகண்டமாய் நிற்றலால் சோதியே என்றும் இறைவரை நோக்கக் கண்டமாகவும் உலகத்து ஏனைய ஒளிகளை நோக்க அகண்டமாகவும் இருக்கும் சூரிய சந்திரர்களை ஒளித்து இயக்குதலின் சுடரே எனவும், கண்டமாகிய ஏனை ஒளிகளுக்குள்ளுமாய் நிற்றலின் சூழ் ஒளி விளக்கே எனவும் அங்ஙனம் கூறப்பட்டது. "ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தனிதரு மொளியாகி" (பேரூர்ப் புராணம் - திருத்தப் படலம்) ; "ஒளியி லொளியி லொளியன்" (நெஞ்சு விடு தூது).

**இருவினைப் பொய்ம்மை வல்லிருள்** - நல்வினை தீவினையாகிய வலிய இருள் என்றலுமாம் ; இருவினையாகிய பொய்ம்மையும் வலிய ஆணவமாகிய இருளும் என்றும் உரைக்கின்றது ; "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" (குறள்) என்ற கருத்துக் காண்க ; இறைவன் பொருள்சேர் புகழ் புரிதலே ஈண்டு "மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென, இம்மையே நினைவார்" எனப்பட்டது ; பொய்ம்மையாவது நிலையாகவுள்ளதுபோலக் காணப்பட்டுச் சடுதியில் மறைந்துபோதல். அது காரியப்பிரபஞ்சத்தின் தன்மை. "பொய்ம்மாயப் பெருங் கடல்" என்பது இதுவே.

**போக்குதல்** - தியான உறைப்பினாலே இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வரச் செய்து பக்குவப்படுத்தி மலத்துன்பத்தினின்றும் நீக்குதல் ; வலிகெடச் செய்தல். "அவையே தானே யாயிருவினையிற், போக்கு வரவு புரிய ஆணையின், நீக்க மின்றி நிற்குமன்றே" (2 - சூத்) என்றதனால் விளக்கப்பட்ட பாசவுண்மையும் இயல்பும் சாதனமும் ஈண்டுக் கூறப்பட்டமை காண்க.

**இருள்** - இருள் மலம் எனப்படும் ஆணவம் ; "ஞானத்தின் கண்ணை மறைத்த கடியதொழி லாணவம்" (போற்றிப் பஃறொடை) என்றது காண்க. **வல் இருள்** - வலிமையாவது ஏனைப் பொருள்களையும் மறைத்து, அவ்வாறு மறைக்கும் தானொரு பொரு ளுண்டென்பதனையும் அறியவொட்டாது தன்னையும் மறைத்துச் சகசமாய் உடன் நிற்றல். "ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும், இருபொருளுங் காட்டா திது" (திருவருட் பயன்).

பொய்ம்மை - பொருளல்லவற்றைப் பொருளெனக் கொள்ளும் மருள்.

**இருவினை - இருள்** - கன்மம், ஆணவம் என்ற இரண்டையுமே கூறினார். மும் மலங்களுள் **மாயை**யாவது - "விடிவா மளவும் விளக்கனைய மாயை, வடிவாதி கன் மத்து வந்து" (திருவருட் பயன்) ; "கட்புலனாற் காணார்தங் கைக்கொடுத்த கோலே போற், பொற்புடைய **மாயைப்** புணர்ப்பின்கண்-முற்பாற், றனுகரண மும்புவன முந் தந்து" (மூற்பால் - முதலுற்பவம் - மாபாடியம் - பக். ககரு) என்பனவாதியாக வருவனவற்றால் மயக்கத்தை நீக்க இறைவன் தரும் உபகாரமாதலும், மலம் என்றுபசரித்துப் பேசப்படுமென்பதும் அறிக. "வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தா னொழிந்தாற், றினைப்போ தளவுநில் லாது" என்றபடி இருவினைப் பொய்ம்மை வல்லிருள் போக்கவே அதன்பொருட்டுத் தரப்பட்ட மாயைப் புணர்ப்பும் உடனொழியுமாதலின் அதனை வேறு எடுத்துக் கூறாராயினர்.

**தம்மையே** என்றதனால் ஒன்றேபதி எனப்பட்ட தனிப்பொருளாகிய பதியுண்மையும் இலக்கணமும், **எழுவார்** - என்றதனால் அனேகமாகிய பசுக்களி னிருப்பும் இலக் -

கணமும், வினை - வல்இருள் - என்றதனால் பாசவுண்மையும் இலக்கணமும் பேசப் பட்டமை காண்க.

மெய்ம்மையாகி விளங்கொளி தாமெனச் சிந்தியா எழுவார் - என்றதனாற் சாதனமும், பொய்ம்மை வல்லிருள் போக்குவர் என்றதனால் பாசநீக்கமாகிய பயனும் குறிக்கப்பட்டமையும் கண்டுகொள்க. இங்ஙனம் சிவஞானபோதத்துட் கூறப்படும் இயல்பெல்லாம் உபதேசிக்கப்பட்டமையும் காண்க. 831

2730. (வி - ரை) எந்தையாரவர்...வாய்மை - "எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ" என்ற தேவாரப் பகுதியிற் கூறிய மெய்ப்பொருளாவது என்று விரித்துக் காட்டியபடி.

மற்று எப்பொருட் கூற்றினும் - இறைவரை யொழித்தொழிந்த வேறு எல்லாப் பொருளும் அவற்றைக் குறிக்கும் சொற்களினும். "உரையின் வரையும் பொருளின் அளவுமென், திருவகைப் பட்ட எல்லை" (11-ம் திருமுறை-கோயினான்மணிமாலை); மற்று - வேறு; இறைவரின் வேறாகிய.

எந்தையாரவர் எவ்வகையார் கொலோ - "ஒன்றலா வொன்றால்" (போதம் - 1 - சூ. 3 - அதி) என்ற வெண்பாவின் கீழ் மாபாடியத்தினுள், "இலக்கணத்தால் வேறுபாடில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தான் ஒன்றலா வொன்று என வரையறுத் தோதினார். ஒன்றலா என்பது உருவும் அருவுமாகிய இரு கூற்றுப் (சேதனப்) பிரபஞ்சத்துள் ஒன்றல்லாத என்றவாறு. ஒன்றென்பது இலக்கணத்தான் வேறுபாடில்லது என்னும் பொருட்டு. 'எந்தை யாரவ ரெவ்வகை யார் கொலோ' என்றது மது" என்று மாதவச் சிவஞான முனிவர் உரைவகுத்தது ஈண்டுக் கருதத் தக்கது. ஆண்டு உரு அரு என்றது தூல சூக்கும உடல் உடைய என்னும் பொருளில் வந்தது.

முந்தையோரை - எல்லாவற்றுக்கு முன்னாகியவரை; எந்தை என்ற மொழிப் பொருள் முன்னவர் - எல்லாவற்றையும் தம்முள் அடக்கிப் பின் ஈபவர் என விரித்த படி. "எந்தைதா னின்ன னென்று மின்னதா மின்னதாகி, வந்திடா னென்று சொல்ல சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே" (சித்தியார் - 1 - 44) என்றவிடத்து, அருவம் உருவம் அருவுருவ மென்னும் மூக்கூற்றுள் இன்னனுவனென்றுதான் அம் மூக்கூற்றும் படும் விருத்தி பரிணமம் விவர்த்தனமென்பவற்றுள் ஒன்றிற்படுவன் படாவென்றுதான் கூறுதற்கோ ராசங்கையு மில்லை; ஆசங்கை யின்மையில் அதற்கு மறுமொழியாகிய பரிகாரமுமில்லை என்றும், அநாதிமுத்த சித்துருவாகிய எந்தைக்குத் தோற்றக்கேடுக ளின்மையானும், அவையின்மையின் அளவைகட்கு வரம்புபடாமையானும், அவன் மூக்கூற்று ளொருகூற்றினும் வைத்து மொழியப்படா னென்பார் "எந்தைதான்...... இன்னனென்று சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே" என்றும், கட்டுவீடுக ளிலனாக லின் எவ்வாறுமா மென்பார், 'பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லா மின்னதா மின்ன தாகி வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றே' என்றும், கூறினார். "எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ" என்றருளிச் செய்த பாசுரமுமிது, என்றும்" உரைவகுத்தமையும் காண்க.

எக்கூற்றின் மொழிவது - வின் எதிர்மறைப்பொருளில் வந்தது; "எங்ஙனங் கூறுகேன்" என்புழிப்போலக் கொள்க.

இனி, எக்கூற்றின் - எவ்வகைக் கூற்றினும் - சொல்லினும் - என்க. முற்றும்மை தொக்கது; கூற்று - சொல்; எப்பொருட் கூற்றினும்-சித்து-அசித்து ஆகிய எப்பொரு ளைக் குறிக்கும் சொல்லானும்; எப்பொருளைக் குறித்துக் கூறினும் அது எந்தை

யாரை மொழிவதாம் என்றுரைப்பாருமுண்டு. அஃதாமாறு : இந்திரன் மால் பிரமன் முதலிய தெய்வங்களைக் கூறினும் "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாக னார்தாம் வருவர்" என்றபடி உண்ணின்று இயக்கும் தன்மை யால் என்க. இனி இவ்வாறு எல்லாவற்றுள்ளும் நிறைந்து இயங்கும் முதன்மையா னன்றி அங்காங்கி பாவத்தால் எல்லாம் தனக்குள் கூறுகளா யடங்கிநிற்கும் தன்மை யாலுமாம் என்க. இத்தன்மையில் கூற்றின் என்பது - கூறு - பகுதி ; பகுதியாகிய தன்மையால் என்று கொள்க. கூறுகளை மொழியும்போது அவற்றைத் தன் கூறாக உடையவனே மொழியப்படுகின்றான் என்பதாம்.

வெந்த சாம்பல் என்ற மூன்றாம் பாசுரப் பொருள் விரித்த இந்நான்கு திருப் பாட்டுக்களின் தொகைப்பொருளாவது : மாசங்கார காரணனாகவும் சங்காரத்தில் தான் அழியாது நின்று எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிப் பின் மீள வுதிப்பிக்கு முன்னவனாகவும், தன்னை நினைப்பார்தம் வினைப்பொய்ம்மையும் இருளும் போக்குபவ னாகவும் உள்ளவன் எமது முதல்வன் ; அவனே எல்லாவற்றுள்ளும் நிறைந்து இயக்கும் தலைவன் ; சராசரங்கள் யாவும் அவனது ஒரு கூற்றினுள் அடங்கும் என்பதாம்.

பூந்தராய் வேந்தர் அருளினார் - என்பது மூன்றாவது பாசுரத்தின் பொருள் விரித்தமை நிறைவு எனக் காட்டியபடி. 832

[ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா"]

2731. ஆதி "யாட்பா லவர்க்கரு ளுந்திறம்"
நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால்
ஓது மெல்லை யுலப்பில வாதலின்
யாது மாராய்ச்சி யில்லையா மென்றதாம். ௮௩௩

(இ - ள்) ஆதி...நவிலுங்கால் - ஆளாகும் பான்மையுடைய அடியவர்களுக்கு முதல்வர் அருளுகின்ற திறங்களையும், நாதருடைய மாண்பினையும் கேட்கலாயின் அதற்கு விடை சொல்லும்போது ; ஓதும் எல்லை...ஆதலின் - சொல்லும் நிலைகள் அளவுபடாது விரிவனவாம் ; ஆதலின், யாதும்...என்றதாம் - எவ்வகையாலும் ஆராய்ச்சி செய்யும் தன்மை இல்லை என்று அருளியபடியாம் ; ௮௩௩

["கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்"]

2732. அன்ன வாதலி "னாதியார் தாளடைந்
தின்ன கேட்கவே யேற்றகோட் பாலவும்
முன்னை வல்வினை யும்முடி வெய்துமத்
தன்மை யார்க்" கென்ற னர்சண்பை காவலர் ௮௩௪

(இ - ள்) அன்ன...ஆதலின் - உண்மைநிலை முன்பாட்டிற் கூறியவாறாதலின் ; ஆதியார் தாள் அடைந்து - முதல்வருடைய திருத்தாள்களை அடைந்து ; இன்ன கேட்கவே - இவ்வுண்மைகளைக் கேட்கலாயின் ; அத்தன்மையார்க்கு - அத்தன்மை பெற்ற அடியார்க்கு ; ஏற்றகோட் பாலவும்...முடிவெய்தும் - ஏற்ற மலமும் வாதனை யும் ஆகிய பீடைகளும் பழைய வலிய வினைகளும் முடிவு பெறும் ; என்றனர் சண்பை காவலர் - என்று சண்பை காவலராகிய பிள்ளையார் அருளிச்செய்தனர். ௮௩௪

இந்த இரண்டு பாட்டுக்களானும் "ஆட்பாலவர்க்கு" என்ற நான்காவது திருப்பாசுரத்திற்கு உரை விரித்தருளினர் ஆசிரியர்.

2731. (வி - ரை) ஆதி - முதல்வன்; ஆதி...இல்லையாம்-என்றது "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதி மாண்பும், கேட்பான் புகிலள வில்லை; கிளக்க வேண்டா", என்ற பாசுரப் பகுதியின் கருத்தும் உரையும் விரித்தவாறு.

ஆட்பாலவர் - ஆளாகும் பான்மையுட் பட்டவர். பால் - பான்மை; பண்பு; "உய்யுநெறி, யெய்தவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல் உய்யுநெறி சிறிதே யுண்டாக்கி" (போற்றிப் பஃறொடை) என்றும், "என்னைத் தன்னடியானென் றுணர்தலுந், தன்னை நானும் பிரானென் றறிந்ததே" (தேவா) என்றும் வருவனவாதி திருவாக்குக்களா லுணரப்பட்டு நின்றபடி ஆளாந் தன்மைபெறும் பான்மை- அருள்-பக்குவம் - பெற்றவர்கள்.

அருளும் திறம் - நாதன் மாட்சிமை - திறமும்-மாட்சிமையும் என எண்ணும்மை விரிக்க. "வண்ணமும் மாண்பும்" (தேவா); அருளும் திறம் - "அருளும் வண்ணம்" (பதிகம்); ஆதி - முதல்வர்; ஆதி மாண்பு - ஆதியினது மாட்சிமை; "நாதன் மாட்சிமை" (தேவா); அருளும் வண்ணம் - "என் றநீ யன் றநான்" என்றும், "அருளுடைய பரமென்றே வன்றுதானே யானுளன்" என்றும் வருவனபோல, பசுவும் பதியும் உள்ள நாளே ஆதியாக, அருளும் தொடங்கியுள்ள பண்பு.

அருளும் திறம் - தன்மை; வண்ணம். அருளும் வண்ணமே அவனது மாட்சிமை- மாண்பு - என்பது.

கேட்க - நவிலுங்கால் - "கேட்பான் புகில்" அதற்கு விடை சொல்லும்போது. முதல்வ னருட்சார்பின்றி ஒருவர் கேட்கவும் ஒருவர் தம்மியல்பால் விடை கூறவும் புகுந்தால்.

ஓதும் எல்லை உலப்பில - சொல்கின்ற அளவு சொல்லளவின் அடங்கி முடிவு பெறாது நீள்வன; உலத்தல் - முடிவு பெறுதல்.

யாதும் ஆராய்ச்சி யில்லையாம் - எதும் அத்தன்மையை ஆராய்ச்சி செய்தற் கிடையில்லை; ஆராய்ச்சி செய்தல் வேண்டா.

இவ்வுண்மைத் தன்மை "மன்றபாண் டியன் கேட்பக் கிளக்கு மெய்ஞ்ஞா னத்தின், ஆட்பா லவர்க்கென் பதையறியே" என்று எடுத்துப்பேசப்பட்ட பெருமையுடையது. ஆன்மபோத உணர்ச்சிகொண்டு ஆராய்ச்சிசெய்யும் நவீன உலகமாக்கள் இதனை அறிந்து கடைப்பிடிப்பது நலந்தரும்.

இனி உயிர்கள் ஒருமலத்தார், இருமலத்தார், மும்மலத்தார் என மூவகைப் படுவர்; இவர் முறையே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்படுவர். விஞ்ஞானகலர்க்குத் தன்மையில் உண்ணின்றுணர்த்துவர். பிரளயாகலர்க்கு முன்னிலையில் வந்து மான் மழு நாற்றோள் நீலகண்டம் முதலிய உருவங் காட்டி அருள் புரிவர். இவையிரண்டுந் தமது வடிவேயன்றிப் பிறிதொரு வடிவம் ஆதாரமாக நின்று செய்யாமையான் நிராதாரமெனப்படும்; விஞ்ஞானகலர்க்கு "மெய்ஞ்ஞானம் தானே விளையும்" (உண்ணின் றறுத்தருளி) எனவும், பிரளயாகலர்க்கு முன்கூறிய உறுப்புக்களுடன் கூடிய முத்தொழில் நடத்தும் தனதியற்கை வடிவே குரு வடிவாகக் காட்டி முன்னின்று உபதேசமுகத்தான் உணர்த்துவர். இதுபற்றியே ஆளுடைய பிள்ளையாருக்குப் பிரளயாகலர்க்குப்போல உணர்த்தியருளினர் என்பர்; சகலர்க்கு முன் கூறிய தமது இயற்கை வடிவை யொழித்துப் பிறிதொரு மானுட வடிவ மாதாரமாக நின்று அவர் வடிவம்போலும் குரு வடிவாகிய மானுடப் போர்வையின் மறைந்து நின்று

உபதேச முகத்தான் உணர்த்தி யாட்கொண்டருளுவர். ஆதலின் இது சாதாரமெனப் படும். இனிச் சகலருள்ளும் இவ்வாறு ஆட்கொள்ளத் தாங்கும் குருவடிவம் அவ்வவர் தன்மைக்கேற்பப் பலதிறப்படும் என்பதை இப்புராணத்தினுள்ளும் ஞானசாத்திரத்துள் ளும் வைத்துக் கண்டுகொள்க. "மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகர்க், கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்-மெய்ஞ்ஞானம், பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு, முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்" (போதம் - 8 - 2) 'முதலியவை காண்க. இப்பாட்டு இக்கருத்துக்களை உட்கொண்டு விளங்குகிற்றலும் காண்க. எல்லா உயிர்கட்கும் ஒன்றுபோலவே அருளாமை காரணமாகப் பிணங்கும் மாக்கள் இவ் வுண்மை உணர்வாராக. 833

2732. (வி - ரை) இத்திருப்பாட்டுக் "கோட்பா லனவும் விளையுங் குறுகாமை யெந்தை, தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்" என்ற பதிகப்பகுதியை விளக்கிக் கருத்துரைத்தது.

**அன்ன ஆதலின்** - அன்ன - அகரவீற்றுப் பலவறிசொல். உண்மை நிலைக ளாகிய வண்ணமும் மாட்சிமையுமாகிய அவைகள் அத்தன்மையை உடையன. அகரம் முன் சொன்ன அந்த என முன்னறி சுட்டு. வண்ணமும் மாட்சிமையும் என்றிவை முன்பாட்டிலிருந்து வருவித்துக்கொள்க.

**அதியார் தாள் அடைந்து இன்ன கேட்கவே** - தாள் அடைந்து கேட்டலாவது திருவடி ஞானத்தால் உணரலுறுதல்; அதனியல்பாவது :—"ஐயா! வழியடியோம்; வாழ்ந்தோங் காண் ;......மடந்தை மணவாளா! - நீ ஆட்கொண் டருளும் விளையாட் டின் உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்; எய்யாமற் காப்பாயெமை" (திருவா. திருவெம்பாவை) என்றவாறு இறைவரது திருவருளை வழுத்தி நின்று "முதல்வரே! அடியேன் அறிவில்லாதேன்; தேவரீரது அருளினால் அடியேனை ஆட்கொண்டருளும் வகையினையும் அடைந்துய்யும் நெறியினையும் உணர வருளிச் செய்யும்" என்று கேட்கவே என்க; அடியார்களைப் பாடுக என்று திருவாரூர்ப் பெருமான் ஆளுடைய நம்பிகளை ஆணையிட்டருளியபோது, "இன்னவா றின்னபண் பென் றேத்துகே னதற்கி யானார்?; பன்னுபா மாலைபாடும் பரிசெனக் கருள்செய் யென்ன", அதற்கு, இறைவர் "அல்லநீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால், தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேனென், றெல்லையில்வண் புகழாரை யெடுத் திசைப்பா மொழி" யென்றார் (344 - 345) என்றும்; அவ்வாறே திருத் தொண்டர் புராணத்தைப் பாடியருளும்படி அநபாயச் சோழர் கேட்க அதற் குடன் பட்டுச் சென்ற ஆசிரியர் சேக்கிழார் பெருமான், தில்லையம்பலவாணர் திருமுன்பு பணிந்து கைத்தல முச்சிவைத் துளமுருகி நைந்துநின்று "அடிகளே! உனதடியார்சீ ரடியனே னுரைத்திட வடியெடுத் திடர்கெடத் தருவாயெனத் திருவருளை யெண்ணி யிறைஞ்சிக்" கேட்கவே, "திருவருளி னசரீரிவாக் குலகெலா மெனவடி யெடுத் துரைசெய்த பேரொலி யிலகுசீ ரடியார் செவிப்புலித் தெங்குமாகி நிறைந்ததால்" (திருத்தொண்டர் புராண வரலாறு - 20-21) என்றும் வரும் வரலாறுகள் இங்குச் சிந்திக்கத் தக்கன; அவ்வாறு கேட்கவே "ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் (அரு ளிய) ஆதிமாண்பும்" நம்பிகளும் ஆசிரியர் பெருமானும் உணரப்பெற்றருளினர் என்ற உண்மைகளும் காண்க; இவற்றுக்கு அகச்சான்றாக "ஆரூர னாரூரி லம்மானுக் காளே", "அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பார்" என்றும், "வெருளின் மெய்ம்மொழி வானிழல்கூறிய பொருள்" என்றும் வரும் திருவாக்குக்களும் இக் கருத்தை ஆசரிக்கை மரபில் வலியுறுத்தி விளக்குதல் காண்க.

இன்ன - ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்புமாகிய இவை; அகர வீற்றுப் பலவறிசொல். இகரம் - அணிமைச்சுட்டு.

அன்ன - இன்ன - தாளடையாது தன்முனைப்பின் ஆராய்ச்சியால் வினவினர்க்கும் விடையிறுப்பார்க்கும் சொல் அளவுபடாது சேய்மைப்படுதல் குறிக்க அன்ன என்று சேய்மைச்சுட்டாற் கூறிய ஆசிரியர், அவ்வாறன்றித் தாளடைந்து கேட்கவே கோட்பாலனவும் வினையுங் குறுகாது முடிவெய்துதலின் இவை உணர்தல் அணியவாதல் குறிக்க அணிமைச்சுட்டாற் கூறிய தெய்வக் கவிநலமும் காண்க.

கேட்கவே - ஏகாரம் பிரிநிலை ; முன்னர்க் கேட்க என்று (2731) வாளா கூறிய ஆசிரியர் ஈண்டுக் கேட்கவே என்றருளிய கருத்துமது. பதிகத்தினும் "கேட்பான் புகில்...கிளக்க வேண்டா" என்றும், "கேட்க தக்கார்" என்றும் அருளியதன் பொருள் இவ்வாறு ஆசிரியர் காட்டியருளக் கண்டுகொள்க.

ஏற்ற கோட்பாலவும் முன்னை வல்வினையும் முடிவெய்தும் - ஏற்ற கோட்பால - ஏற்ற - சகசமாய்ப் பொருந்திய ; கோட்பால - பால - அகரவீற்றுப் பலவறிசொல். கோள் - பற்றிக்கொள்ளுதல். அநாதியே செம்பிற் களிம்புபோலச் சகசமாய் உயிர்களைப் பற்றிநிற்கும் மூல ஆணவமலமும் அதன் எச்சமாய்ப் பின்னிற்கும் வாசனைமலமும் என்க. முன்னை வல்வினை - பண்டைப் பழவினை; மூலகன்மம் ; "இருவினைப் பொய்ம்மை வல்லிருள் போக்குவர்" (2729) என்றவிடத் துரைத்தவை பார்க்க. முன்னர்க் கூறியது சாதனவகையும், ஈண்டுக் கூறியது மூலமல வாதனையும் மூலகன்மமும் ஆகிய இவை "முடிவெய்தி"ப் பற்றற வொழியும் பயன்வகையுமாதலின் கூறியது கூறலன்மையுணர்க.

ஆதியார் தாளடைந்து இன்ன கேட்க - என்றது திருவடி ஞானங் கைகாட்ட அதனுள் அடங்கிநின் றுணர்வதாகிய நிட்டைகூடல் என்னும் நான்காவது ஞானநிலை என்க.

ஏற்ற கோட்பால - முன்னை வல்வினை - இவற்றுக்கு, முன் கூறியவாறன்றி, (தொன்றுதொட்டனவாய்த் தம்மைவந் தடையும்) விரும்பத்தக்க நல்வினையும், பழமையான தீவினையும் என்றுரைத்தனர் முன்னுரைகாரர்கள் ; அவை பொருந்தாமையறிக. கோட்பால என்பதற்குக் குற்றப்பகுதிகள் என்பது இராமநாதச் செட்டியார் குறிப்புரை ; கோட்பாலவும் - கிரகங்களின்பாற் பட்டு வினையும் தோஷங்களும் என்றும், ஆண்டவன் தாளடைந்து கோளாலும் வினையாலும் வினையும் கெடுதல்கள் குறுகி இடர்ப்படுத்தாதவாறு முறையிடவேண்டுவது உயிர்களின் கடமை என்றபடி என்றுரைப்பாருமுண்டு ; இவை ஈண்டைக் கேலாமை யறிந்துகொள்க.

அத்தன்மையார்க்கு - கேட்கவே அவ்வாறு தாளடைந்து கேட்கும் தன்மையார்க்கு.

இந்த இரண்டு பாட்டுகளின் தொகைப் பொருளாவது இறைவர் தம்மை அடைந்தவர்க்கருளும் திறங்கள் எல்லையில்லன ; ஆதலின் அவை ஆராய்ச்சி செய்தற்குரியனவல்ல ; அற்றாகவே அவர் திருவடிகளில் அடைவு கொண்டு கேட்க. அவ்வாறு கேட்பார்க்கு கோட்பாலனவும் முன்னை வல்வினையும் முடிவெய்தும் என்பதாம்.

சண்பை - சீகாழியின் ஒன்பதாவது பெயர். 834

["ஏதுக்க ளாலு மெடுத்தமொழி யாலுமிக்குச்
சோதிக்க வேண்டா"]

2733. மன்னு "மேதுக்க ளா" லெனும் வாய்மைதான்
தன்ன தொப்புவே றின்மையிற் சங்கரன்
இன்ன தன்மையை யேது வெடுத்துக்காட்
டன்ன வாற்று லளப்பில னென்றதாம். ௮௩௫

(இ - ள்) மன்னும் "ஏதுக்களால்" எனும் வாய்மைதான் - நிலைபெற்ற "ஏதுக்களாலும் எடுத்தமொழி யாலுமிக்குச் சோதிக்க வேண்டா" என்று அருளிய உண்மை யாவது; தன்னது ஒப்புவேறு இன்மையின் - தனக்கு உதாரணமாகக் காட்டக்கூடிய பொருள் வேறொன்று மில்லாமையால்; சங்கரன் இன்ன தன்மையை - சங்கரன் தனது முன்கூறிய வண்ணமு மாண்பும் உடைய தன்மையினை; ஏது எடுத்துக்காட்டு ... அளப்பிலன் என்றதாம் - ஏதுக்களினாலும் நிறுத்தும் உதாரணங்களாலும் அவை போன்ற பிற அளவைகளாலும் அளக்கப்படாதவன் என்றருளியபடியாம். ௮௩௫

["சுடர்விட்டுள னெங்கள் சோதி"]

2734 தோன்று காட்சி "சுடர்விட் டுளே" னென்ப
தான்ற வங்கிப் புறத்தொளி யாயன்பில்
ஊன்ற வுள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்;
என்று காண்பார்க் கிதுபொரு ளென்றதாம். ௮௩௬

(இ - ள்) தோன்று...என்பது - "தோன்று காட்சி சுடர்விட்டுளன்" என்பதன் பொருளாவது; ஆன்ற வங்கிப் புறத்தொளியாய் - அமைந்த அக்கினியிற் புறவொளி யாய்க் காணப்பட்டு; அன்பில்...நின்றனன் - அன்பின் உறைப்பினாலே அதனுள் அழுந்திக் காண உள்ளே எழுகின்ற சோதியாய் நின்றனன்; என்று...என்றதாம் - அவன் ஒளிவழியே பொருந்திநின்று காண்பவர்களுக்கு இதுவே பொருள் என்று கூறி யருளியபடியாம். ௮௩௬

["மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்"]

வேறு

2735. "மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்று" மென்ப
தாதிச் சுடர்ச்சோ தியையன்பி னகத்துள் ளாக்கப்
போதித்த நோக்குற் றொழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின்னெறி பேர்மி னென்றும். ௮௩௭

(இ - ள்) மாதுக்க நீங்கல்...என்பது - "மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்" என்ற பதிகப் பகுதி; ஆதிச் சுடர்ச் சோதியை - மூலமாகிய சுடர்ச் சோதியினை (சிவபரஞ்சுடரினை); அன்பின்...வாழ்ந்து - அன்பினாலே ஆன்மா விற் கண்டு அஞ்செழுத்தால் அகப்பூசை செய்து ஞானாசிரியரால் போதிக்கப்பட்ட திருவருள் வழித்தாகிய அகநோக்கத்திற் கண்டு கூடிய சிவயோகத்தால் இடையறாமற் கூடிச் சிவஞான வாழ்க்கையில் வாழ்ந்து; பேதித்த...பேர்மின் என்றும் - அநாதியே தொடர்ந்து அறிவை மறைத்து வேறுபடுத்திய ஆணவத்தாலாகிய பிறவியில் வரும் நெறியினின்று நீங்குவீர்கள் என்றபடியாம். ௮௩௭

[“சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே”]

வேறு

2736. ஈண்டு “சாதுக்க” ளென்றெடுத் தோதிற்று
வேண்டும் வேட்கைய வெல்லாம் விமலர்தாள்
பூண்ட வன்பினிற் போற்றுவீர்! “சார்மி”னென்
றூண்ட சண்பை யரச ரருளினார். அருஎ

(இ - ள்) ஈண்டு...ஓதிற்று - இங்குச் “சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே” என்று ஓதியருளியதனால்; வேண்டும்...போற்றுவீர்...விரும்புகின்ற வேட்கைகளாகிய எல்லாம் இயல்பாகவே பாசங்களினீங்கிய இறைவரது திருவடிகளையே மேற்கொண்ட அன்பினாலே போற்றுகின்றவர்களே; சார்மின் - வந்து சாருங்கள் என்று சண்பைத் தலைவராகிய பிள்ளையார் அருளிச்செய்தனர். அருஎ

“மன்னும்” என்பது முதல் இந்நான்கு திருப் பாட்டுக்களானும் “ஏதுக்களாலும்” என்ற ஐந்தாம் திருப்பாட்டின் விரிவுரை நான்கு பகுதிகளாக வைத்து விரித்தருளிய வாறு.

2733. (வி - ரை) ஏதுக்களால் - எனும் - “ஏதுக்களாலு மெடுத்தமொழியாலுமிக்குச் சோதிக்க வேண்டா” என்ற பகுதி; வாய்மை - அதனாற் குறிக்கப்படும் உண்மை. வாய்மை - என்றதாம் - என்று கூட்டுக.

தன்னது ஒப்பு வேறின்மையில் - தன்னது - தனக்கு. அது - ஆறனுருபு நான்கனுருபின் பொருளில் வந்த உருபுமயக்கம்; ஒப்பு இன்மையின் - இன் - ஏதுப்பொருளில் வந்தது. “தனக்குவமை இல்லாதான்” (குறள்); “ஒருவமனில்லி” (தேவா); “பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி, னருமைக்கு மொப்பின்மை யான்” (திருவருட்பயன்) என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

இன்மையின் - அளப்பிலன் - என்று கூட்டுக.

சங்கரன் இன்ன தன்மையை - அளப்பிலன் என்க. சங்கரன் - இன்பஞ் செய்பவன். “இன்பஞ் செய்தலிற் சங்கர னெம்பிரான், இன்ப மாக்கலிற் சம்பு” (காஞ்சிப் புரா); “ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் - மாண்பும்” உயிர்களுக்கு இன்பஞ் செய்தற் பொருட்டேயாம் என்று குறிக்க இப்பெயராற் கூறினார்; இக் கருத்தை மேல்வரும் பாட்டிற் றொடர்ந்து கூறி விரித்தல் காண்க. இன்ன தன்மை - வண்ணமும் மாண்பும்; பண்பு ஒன்றாகலின் ஒருமையாற் கூறினார். முன்னரும் “இன்ன கேட்க” என்றது காண்க.

தன்மையை - தன்மையைப்பற்றி.

ஏது - எடுத்துக்காட்டு - அன்ன ஆற்றல் - எடுத்துக்காட்டு - கருதலளவையால் அறிதற்குரிய ஐந்து அங்கங்களுள் இவை இன்றியமையாதன; இவை கூறப்படவே ஏனையவும் அடங்கும். எடுத்துக்காட்டு - உதாரணம்; பதிகத்தினுள் “எடுத்த மொழி” என்பதுமிது; உதாரணம் கூறுதற்கு ஒப்பாம் பொருள் வேறின்மையால் திருட்டாந்தம் என்ற அங்கம் குறைவுபடும்; படவே அவ்வளவையால் அளப்பு இலன் என்றபடி.

அன்ன ஆற்றல் - கருதலளவையின்பாற்பட்ட வகைகளெல்லாமும் கொள்க. சிவஞானசித்தியார் - அளவை - என்ற பகுதியில் இவை விரிக்கப்பட்டன. தருக்க நூலினுள்ளும் காண்க; உரையளவையான் அறிதல்பற்றிப் பதிகத்தின் ஏழாவது திருப்பாட்டி

னுள்ளும் அதன் விரிவுரையாகிய 2738-ம் பாட்டினும் கூறுதல் காண்க. காட்சியள வையா லளப்பின்மை பற்றி இரண்டாவது பாசுரத்தினும் அதன் விரியாகிய 2724 - 2726 பாட்டுக்களினும் கூறியமை காண்க.

அளப்பிலன் - அளப்பு - அளவுபடும் தன்மை. இது "மிக்குச் சோதிக்க வேண்டா" என்ற பதிகப் பகுதியிற் கூறியருளிய ஆணையாகிய முடிபுக்குக் காரணங் காட்டிய வகையாற் பொருள் விரித்தவாறு. 835

2734. (வி - ரை) தோன்று காட்சி - காட்சியிற் றோன்றும் என்க. "அரிய காட்சியர்" (2724) என்றும், "மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென" (2729) என்றும் கூறியவாற்றாற் காட்சியில் பேரொளியாய்த் தோன்றுதல் பெறப்பட்டமையால் ஈண்டுச் "சுடர்விட்டுளன் எங்கள்சோதி" என்ற பதிகப்பகுதியில் அச்சோதியின் தன்மையும் அது காட்சியிற் றோன்றமாறும் கூறப்பட்டன; ஆதலின் கூறியது கூற லன்மை கண்டுகொள்க.

**சுடர் விட்டு உளன்** - விடுதல் - தன்உள் அடங்கிவிடாது வெளியில் விரிந்து தோன்றுதல்.

**என்பது** - என்பதனுட்பட்ட பொருளாவது.

**ஆன்ற அங்கிப் புறத்தோளியாய் - அன்பில் ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய்** - புறத்தொளியாயும் உள்எழும் சோதியாயும் என உம்மை விரிக்க; **அங்கிப் புறத் தொளியாய்** - அங்கியின் கண்ணேபற்றி அதனை ஒளிதரச் செய்யும் ஒளிப்பொருளாய்; **அங்கி** - அக்கினி; நெருப்பு; ஐம்பூதங்களுள் ஒன்றாகவைத்து எண்ணப்படுவது. அங்கி என்றதனுள் சூரியனையும் சந்திரனையும் ஏனைப் புறவொளிப் பொருள்கள் எல்லா வற்றையும் அடக்கிக்கொள்க. என்னை? புறஒளி யெல்லாம் தீயின் கூறுவனவாதலின். அங்கியின் ஒளித்தன்மை பெற்ற அங்கிப் புறத்தொளிகள் எல்லாம் கொள்ளப்படு மென்க; புறவிருளும் அகவிருளும் என இருள் உலகில் இரண்டாதற்கேற்ப அவற் றைப் போக்கும் ஒளிகளும் இரண்டாவன; "இவ்வுலகத்து முன்னுட் டங்கிரு ளிரண் டின்" (பாயிரம்); "ஒருபொருளுங் காட்டா திருளுருவங், காட்டும், இருபொருளுங் காட்டா திது" என்பன காண்க. ஆனால் இவ்வொளிகள் தொகையால் இரண்டாயி னும் வகையால் ஒன்றே என்பார் "அங்கிப் புறத்தோளியாய் - உள்ளெழுஞ் சோதி யாய்" என்றார்; அங்கிப் புறத்தொளியாய் நின்றவன் இறைவனே என்பது "நீருகி நீறமிழ நெருப்பு மாகி"; "இருநிலனய்த் தீயாகி நீருமாகி" என்பனவாதி திருவாக்குக்களால் அறியப்படும்; ஆனால் அவ்வாறு புறத்தொளியாய் நிற்குநிலையில் கண்டிதமாய், ஏகதேச விளக்கமுடையதாய், மிகுதல் குறைத லுடையதாய், ஒன்றனைப் பற்றி விளங்குவதாய்க் கண்ணுகிய புறஇந்திரியத்தாற் காணப்படுவதாய் உள்ளதாம்; அவ்வொளியின் வெளித் தோற்றத்தினுள் அதனை ஒளிதரச் செய்யும் முதல்வன் மறைந்து அடங்கி நிற்பன். மற்றை உள்ளொளியோ எனில் கண்ணாற் காணப்படாது எண்ணெய்-விறகு முதலிய பற்றுக்கோடு வேண்டாது அன்பினில் மனத்துள் ஊன் றிக் காணக் காண்பது; புறவொளிபோல வேறுஒன்றினைப் பற்றாது தானே ஒளி தருவது; ஒன்றினுள் அடங்கிவிடாது தானே மேலே எழுவது; குறைவுபடாதது; அங்கிலையிற் புறத்துக் காணுது இஃது உள் எழுவது என்றிவ்வாறு ஒற்றுமையும் வேற்றுமையும் உடன்காட்டுவார் அங்கிப் புறத்தோளியாய் என்றும், அன்பினில் ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய் என்றும் அடைமொழிகளால் விளக்கிக் கூறினர்.

நின்றனன் - முன் கூறியவாறு வெளிப்படும் நிலையின் வேறுபாடுகளே யன்றிப் பொருள்நிலைமையில் ஒன்றும் மாறுபாடின்று என்பதாம்.

**ஆன்ற அங்கி** - ஒன்றினைப் பற்றிப் பொருந்திநின்றே வெளிப்படும் தீ ; **ஆன்ற** - பொருந்திய.

**ஏன்று காண்பார்க்கு** - இவ்வாறு பகுத்து உணர்ந்து அறியப்பெறுவார்களுக்கு ; **ஏன்று காண்பார்க் கிதுபொருள்** என்றமையால் அவ்வாறு காணாத ஏனையோர்க்கு இப்பொருள் காண இயலாதென்பதும் பெறப்படும். **ஏன்று காண்பார்** - ஏலுதல் - பொருந்துதல் ; திருவருள் வயப்படுதல் என்க.

**இது பொருள்** - இது பொருளாம் ; **பொருள்** - பெயர்ப் பயனிலை.

**அன்பில் ஊன்ற - எழும்** - அன்பு நிலைக்களமாக அழுந்தியறிய வெளிப்படும்.

“உறவு கோனட் டுணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே” (தேவா) என்ற நிலை.

**முன் கருதலளவையான்** அளப்பிலன் ஆயினும் இவ்வாறு காண்பார்க்குக் காட்சி யளவைக்குள் நின்று தோன்றுவன் என்றவாறு ; “மறையினா லயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றுங் குறைவிலா வளவி னாலுங் கூறொணா தாகி நின்ற, இறைவனார் கமல பாதம்” (சித்தியார் - பாயிரம் - 5) என்ற அருணந்தி சிவாசாரியார், “அருளினா லாக மத்தே யறியலா மளவி னாலுந் தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே, மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்” என்றருளிய கருத்தும் இது ; “முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்” (திருமந்திரம்) ; “கழல் மனத்துக், கொண்ட கருத்தி னக நோக்கும் குறிப்பே யன்றிப் புறநோக்கும், கண்ட வுணர்வு துறந்தார் போல்” (தண்டியடிகள் புராணம் - 1) முதலிய திருவாக்குக்களின் கருத்தும், “அலகில் சோதியன்” என்று முதற் பாட்டில் விளக்கமாய்க் காட்டியருளிய கருத்தும் காண்க. **உள் எழும் சோதி** - அகத்துட் டோன்றும் அளவில்லாது ஓங்கும் சிவ (ஞான) ஒளி ; “எங்கள் சோதி” என்பது பதிகம். 836

2735. (வி - ரை) “மாதுக்க நீங்க லுறுவீர் மனம் பற்றும்” என்பது ; “மாதுக்க நீங்க லுறுவீர் மனம் பற்றி வாழ்மின்” என்ற பதிகப் பகுதியின் பொருளாவது.

**ஆதிச் சுடர்ச் சோதியை** - ஆதியாகிய “சுடர்விட்டுளன்” “எங்கள் சோதி” என்று முன்பாட்டில் விரித்துக் காட்டிய அந்த சோதிப்பொருளை.

**அகத்துள்ளாக்கி** - மனத்துள் விளங்கியெழச் செய்து ; **ஆக்குதல்** - “அன்பில் ஊன்றுதலால் விளங்க எழுவித்தல் ; மூளுவித்தல் ; கோல்கொண்டு கடைந்து மூட்டுதல்போல ; “அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கி ஞானப், புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்” (பிள். தேவா) என்றருளியபடி ஆன்மாவிற் கண்டு அஞ்செழுத்தாற் பூசித்தலைக் குறித்தது ; இஃது அந்தரியாக பூசை எனப்படும். “அந்தரி யாகந்தன்னை முத்திசாதனமா யறைந் திடுவ ரதுதானு மான்மசுத்தி யாகும்” (சித்தி - 9) என்றதும் காண்க. “விறகிற் றீயினன் ...முன்னிற்குமே” (அரசு தேவா) என்ற திருப்பாட்டும் சிந்திக்க.

**போதித்த நோக்கு உற்று** - ஞானசாரியர் அனுபூதியில் வரும்படி காட்டியருளிய ஞானநாட்டக் காட்சியைப் பொருந்தி ; **போதித்தல்** - **போதம்** - அனுபவ ஞானம்; **போதித்தல்** - அனுபவத்தில் வரச் செய்வித்தல் ; “நிச்சயப் பொருள் இதுவென்று உணர்த்துதல்” (மாபாடியம்-சிறப்புப் பாயிரம்) என்பர் சிவஞான முனிவர். **நோக்கு** - அகக்கண்ணினருக்குக் காட்சிப் புலப்படும் நிலை. **உறுதல்** - வரப் பொருந்துதல்.

**ஒழியாமற் பொருந்துதல்** - அக்காட்சி இடையறாது கண்டுகொண்டு அதனோடு பொருந்தி நிற்றல்; சிவயோகத்தாற் கூடி நிற்றல்; "மற்றொன் றறிந்திலரால்" (1254); "வேறுணரார்" (1255).

**வாழ்தல்** - அந்நிலையின் பயனை விடாது அனுபவித்துக் கூடிநிற்றல்.

**பேதித்த பந்தப் பிறப்பின் நெறி** - மாதுக்கம் என்றதனை விளக்கியவாறு; **பேதித்தல்** - உயிர் சார்ந்து நிற்கவேண்டிய சார்புணர்ந்து சாரவொட்டாது தடுத்து நிற்றல். **பந்தம்** - மூலமலம்; **பந்தப் பிறப்பின் நெறி** - மலத்தினால் வரும் பிறவி வழி; நெறி என்றார் பிறவியில் இடையறாது செலுத்துதலின்.

**பேர்மின்** - அந்நெறியினின்று விலகிச் சிவநெறி சேர்தல். "**மனம் பற்றி வாழ்மின்**" என்ற பதிகக்கருத் துரைத்தவாறு; **வாழ்மின்** என்றது சிவச் சார்பு பெற்று வாழ்மின் என்றதாம்; அது பந்தப் பிறப்பின் நெறி பெயர்தலால் வருதலால் பிறப்பின் நெறி பெயர்தலே **வாழ்**வென்றார். **என்னை?** பந்தப் பிறப்பின் நெறி பெயரும் உயிர், சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யுடைமையானும், பந்தத்தைப் பெயர்ந்த வழிச் சிவனையன்றி வேறு சார்பு இன்மையானும், சிவனையே சாருமாதலின் பந்தநெறி பெயர்தலே வாழ்வாம் என்க; "இவ்வான்மாத் தன்னை யிந்திரியத்தின் வேறாவான் காணவே முதல்வனது சீபாதத்தையணையும் - "ஊசல் கயிறற்றால்தாய் தரையேயாந் துணையால்" என்ற உண்மை காண்க.

**போதித்த நோக்கு** - ஞானகுரு அறிவிற் பொருந்தக் கொளுவிய உள்நோக்கம்; **உற்று** - அதனுள் அழுந்தி; **போதித்த** என்றதற்கு ஞானகுரு என்ற எழுவாய் அவாய்நிலையான் வந்தது. "தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்த" என்றது இக்கருத்தை விளக்கியது. ஈண்டுச் சகலான்மாக்களுக்குப் பிள்ளையார் ஞானஉபதேசம் செய்தருள்கின்றா ராதலானும், சகலர்க்குக் குருவேடத்தினுள் மறைந்தே முதல்வன் அருளுவானாதலானும், இங்கு எழுவாய் மறைந்து நின்றது.

**போதித்த நோக்கு உற்று ஒழியாமற் பொருந்தி வாழ்ந்து** - "ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" என்ற சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரம் இக்கருத்தையே விளக்குதல் காண்க.

**போதித்த நோக்குறுதலும்** (1), **ஒழியாமற் பொருந்துதலும்** (2), **வாழ்தலும்** (3) என்ற இம்மூன்றும் முன் கூறியபடி சிவஞானபோதம் ஒன்பதாஞ் சூத்திரத்தினுள் (1) அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க எனவும், (2) அசத்தாயுள்ள வன்னபேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞானசொரூபம் எனவும், (3) இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க எனவும் முறையே மூன்றதிகரணங்களால் விரித்துப் போதிக்கப்பட்டமை காண்க. "அண்டனை யான்மாவி லாய்ந்துணரப் - பண்டணைந்த, வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி லொண்கருட, சானத்திற் றீர் விடம் போற்றான்" (9 - 2) என்றவிடத்து அச் சிவஞானத்தானே, ஆசாரியன் "சிவோயம்" எனத் தன்னுள்ளே பாவித்துச் "சிவத்துவமசி" என்றறிவுறுக்கும் மகா வாக்கியப் பொருளை நாடோறும் பயின்று, சிவோகம் எனப் பாவிப்பானாயின், அந்தப் பாவனைக்குள் விளங்கும் முதல்வனால் அநாதியே கூடிய பொதுவியல்பையும், அதற் கேதுவாகிய மல மாயா கன்மங்களையும் தான் விட்டு நீங்குமாறு, ஒள்ளிய கருட தியானத்தில் விளங்குங் கருடனால் அப்பாவகன்ம விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாமென்க" (மாபாடியம்) எனவரும் உரையும் காண்க; அச்சூத்திரப் பிண்டப் பொழிப்புரைக்கும் வழிப் "(1) பசுஞானத்தானும் பாசஞானத்தானும் அறியப்படாத முதல்வனை அம்முதல்வனது ஞானக்கண்ணானே தன் அறிவின்கண்ணே ஆராய்ந்தறிக

(2); அப் பதிஞானத்தைப் பெறுமாறு யாங்ஙனமெனின் நிலமுதல் நாதமீறுகிய பாசக் கூட்டம் நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேரினியல் பிற்றாய்க் கழிவதென் றறிந்து நீங்கவே, அப் பதிஞானம் பிறவித் துயராகிய வெப்பத் தாக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். (3) அங்ஙனம் விளங்கிய ஞானத் தால் ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள் பயக்குந் திரு வஞ்செழுத்து, அவ்விதிப்படி அறிந்து கணிக்கப்படும்" என்றுரைத்ததும் இங்கு வைத்துக் காண்க.

ஒழியாமற் பொருந்திவாழ்தல் - "அஞ்செழுத்தா லுள்ள மானுடைமை கண் டரனை, யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில் - அஞ்செழுத்தாற், குண்டலியிற் செய் தோமங் கோதண்டஞ் சானிக்கில், அண்டனுஞ் சேடனு மங்கு" (9 - 3) என்று இதன் பொருள் விரிக்கப்பட்டதும் கருதுக. ஈண்டு, "ஆரியனு மாசான்வந் தருளாற் றோன்ற வடிஞான மான்மாவிற் றோன்றுந் தோன்றத், தூரியனுஞ் சிவன் றோன்றும்' (சித்தி - 8 - 28) ; "சங்கரனே, டொக்கவுறைந் திவரவனே யவனிவரை விடாதே யுடந்தையாய்ச் சிவன்றோற்ற மொன்றுமே காண்பர்" (ஷை - 8-29) ; "சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே" (ஷை (8-38) என்பனவாதியாக வரும் எட்டாஞ் சூத்திரத்துள் கேட்டல் சிந்தித்தல் முதலிய ஞான சாதனைகளையும், அவற்றைத் தொடர்ந்து ஒன்பதாஞ் சூத்திரத்துள் சாதிக்குமாறுணர்த்தும் வகைகளையும் ஈண்டுக் கருதுக. "நினைந்திருக்க...நேர்பட வந்துள்ளே, பெறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே, புகுந்திடுவ னெங்குமிலாப் போதத்தைப் புரிந்தே" (ஷை - 9-6) ; "சோக மெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி" (ஷை - 9-7) என்பனவாதி உண்மை நூலின் றிருவாக்குக்கள் ஈண்டு உணர்ந்து சிந்திக்கத் தக்கன.

"மனம் பற்றும்" என்ற பகுதியின் பொருள் சோகம்பாவனையின் தன்மையும் அது பிறவிநீக்கு முத்திசாதனமாமாறுங் கூறியதாமென்க. 837

2736. (வி - ரை) "சாதுக்கள்" என்றெடுத்து ஓதிற்று - "சாதுக்கள் மிக்கீரிறையே வந்து சார்மின்களே" என்றோதிய பதிகப் பகுதியின் பொருளாவது என்க.

வேண்டும்......போற்றுவீர் - சாதுக்களின் தன்மையும் சொற்பொருளும் கூறியது; தம்மை முழுதும் இறைவர்பாலிற் சார்த்தித் தமக்கென வொருசெயலு மில் லாதவர்.

வேண்டும் வேட்கைய எல்லாம் - பெறவேண்டிய விருப்பங்கள் சென்று உள்ள பொருள்கள் எவையும்.

பூண்ட அன்பினில் விமலர்தாள் போற்றுவீர் - என்க. பொருந்திய அன்பினுடன் இறைவர் திருவடிகளைப் போற்றுதலேயாம் என்று கொண்டு வாழ்வீர்காள். "வேண் டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ, வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய், வேண்டி நீயா தருள்செய்தாய் யானு மதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே', (திருவா); "இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே" (திருவாசகம்); "கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்......ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார், கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (143) என் பனவாதி திருவாக்குக்களில் இக்கருத்து விளக்கப்பெறுதல் காண்க; இனி, இவ்வா றன்றி "இதுவோ வெமையாளு மாறீவ தொன்றெமக் கில்லையேல் அதுவே வுனதின்

னருள்" (பிள். தேவா - திருவாவடுதுறை); "பேச்சில ரொன்றைத் தரகிலராகி விவரலா தில்லையோ பிரானுர்" (நம்பி. தேவா - திருப்பாச்சில்) என்றவாறு வேண்டு மவற்றை யெல்லாம் இறைவர்தாள் போற்றியே பெறுவர் என்றுரைப்பினு மமையும்.

சார்மின் - சாதுக்களாகிய மிக்கீர்! [பெரியோர்களே!] விரைந்து சாருங்கள் இறையே - விரைவில்.

இந்நான்கு பாட்டுக்களின் தொகைப்பொருளாவது, முன் "ஆட்பாலவர்க்கு" என்ற பாட்டில் ஆட்பாலவர்க்கு இறைவர் அருளும் திறங்களும் அம்முதல்வனது மாட்சிமையும் தற்போதத்துக்கொண்டு ஒருவர் கேட்க மற்றொருவர் சொல்ல அளவு படாது. மலங்கள் சாராது இறைவர்தாளின் அடங்கிநின்று இவற்றைக் கேட்க என்றார்; இப்பாட்டினால் அவ்வாறு இறைவர்தாளின் அடங்கிக் கேட்டு உணர்வதெவ்வாறெனை விளங்க அருளியவாறு. முதல்வனை ஏது - உதாரணங்களால் சோதிக்க வேண்டா. அவன் புறத்தொளியாய் நின்று புறப்பொருள்களை விளக்கியும், அன்பில் ஊன்றியவழி அகத்துஉள்ளே எழும் சோதியாய் நின்று விளக்கியும், எஞ்ஞான்றும் உதவுகின்றான்; அந்த அகத்துச் சோதியைக் குரு போதித்தபடி ஞானக்கண்ணாலே கண்டு இடையறாது பொருந்தி அவனே தானாக ஏகனாகிப் பணிசெய்து வாழ்ந்தால் பிறவிநெறி விலகி, எல்லாம் அவன் சார்பேயாகும்; அப்போது "அவனே தானே யாகிய அந்நெறி, யேக னாகி யிறைபணி நிற்க, மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" (போதம் - 10) என்று ஞானநூலுள் உரைத்த நிலைபெற்றுப் பிறவிநெறி நீங்கிச் சிவநெறி வாழ்வு தலைப்பட்டு நிகழும் என்பதாம்.

இவ்வாறு அவர்தாளி னடங்கி அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞான கன்மங்கள் பிரவேசியா; அப்போது அம்முதல்வனே இவனுள் நின்று எல்லாம் கண்டும் காட்டியும் செலுத்துவானாதலின் இவன் அவனது சீபாதங்களை யணைந்து நிலைபெறும் என்ற சிவஞானபோத (11 - சூத்) உண்மையும் ஈண்டுப் போதருதல் காண்க. எனவே போதம் 8-9 சூத்திரங்களில் விரித்த சாதனமும், 10 - 11ல் விரித்த பயனும் இத் திருப்பாட்டால் உபதேசிக்கப்பட்ட திறங் கண்டு கொள்க. 838

["ஆடும் மெனவும், மருங்கூற்ற முதைத்து, வேதம்
பாடும் மெனவும், புகழல்லது பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும்மெனக் கேட்டி ராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே."]

வேறு

2737. "ஆடும்" மெனவாந் திருப்பாட்டி னமைத்த மூன்றும்
நீடும் புகழோ? பிறர்துன்ப நீக்குதற்கோ? வென்று
தேடும் முணர்வீ ருலகுக்கிவை செய்த தீசர்
கூடுங் கருணைத்திற மென்றனர் கோள்கை மேலோர். அகூகூ

கூற்றை உதைத்தது — வேதம்

(இ - ள்) ஆடும்...மூன்றும் - "ஆடும் எனவும், அருங்கூற்ற முதைத்து வேதம் பாடும் எனவும்" என்று பதிகப் பகுதி குறித்த பொருள்களாகிய ஆடும் என்றதும், அருங் கூற்றம் உதைத்து என்றதும், வேதம் பாடும் என்றதும் ஆகிய மூன்றும்; நீடும் புகழோ...உணர்வீர் - புகழுக்காகவோ? அன்றி உயிர்களுடைய துன்பம் நீக்குதற்கோ என்று ஆராயும் உணர்வுடையீர்களே!; உலகுக்கு...மேலோர் - இவைகளை ஈசர்

செய்தது உலகின்மேல் வைத்த பெருங் கருணையின் திறம் என்று கொள்கை யான்மேம் பாடுசெய்வாராகிய பிள்ளையார் அருளிச் செய்தனர். அங-கு

(வி - ரை) "ஆடும்" எனவாம் திருப்பாட்டின் அமைத்த மூன்றும் - ஆடும் எனவாம் - ஆடும் என்று தொடங்கும்; முதற் குறிப்பு. அமைத்த மூன்றும் - ஆடும் எனவும், கூற்றம் உதைத்து எனவும், வேதம் பாடும் எனவும் கூறியருளிய மூன்று பொருள்களும்; "உதைத்து வேதம் பாடும்" என்பது உதைத்துப் பாடும் என ஒருபொருள்பற்றி உரைக்கநின்ற வினையெச்ச முடிபாகவும் காணப்படுதலின், அஃது அவ்வாறு பொருள் கொள்ளப்படாது உதைத்து எனவும், பாடும் எனவும் இரண்டாகப் பிரித்துப் பொருள்கொள்ளுதல் வேண்டுமென்று காட்டுவார் மூன்றும் எனச் செவ்வெண் டொகை விரித்து ஓதினர்.

புகழோ? பிறர் துன்ப நீக்குதற்கோ? என்று தேடும் உணர்வீர் - "புகழல்லது பாவம் நீங்கக் கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீராகில்" என்ற பதிகப் பகுதியின் பொருள் விரித்தபடி; புகழ் - புகழோ?; அறுக்கும் - அறுக்கும் வகையோ? என்று இரண்டிடத்தும் ஐயவினா ஓகாரம் தொக்கது; புகழ் - தன்பொருட்டாற் செய்வது; பாவம் நீங்கக் கேடும் பிறப்பும் அறுக்கும் வகையோ? என்றது பிற உயிர்களின்பொருட்டுச் செய்வது; கேடு - இறப்பு; கேடும் பிறப்பும் - பிறவித் துன்பம். தேடும் - ஆராயும்; உணர்வீர் - பிறவிக்கஞ்சி வீடுபேறு காதலித்து ஆராயும் உணர்ச்சியுடையோர்களே!; விளிவேற்றுமை என்ற பெயர்.

இவை ஈசர் உலகுக்குச் செய்தது - என்க. உலகுக்கு - நான்கனுருபு கொடைப் பொருளில் வந்தது.

செய்தது - செய்த காரணம்; கூடும் கருணைத் திறம் - கூடும் - முன் இயைபாகிய வேறு காரணமின்றித் தன்னியல்பிற் பொருந்திய; பேரருளுடைமை. திறம் - தன்மை; பெருமை என்றலுமாம். வினைத்திறம் பற்றிக் கூடும் என்றலுமாம்.

கூடுங் கருணைத் திறம் - இக்கருத்தினைச் "சொன்னவித் தொழில்களென்ன காரணந் தோற்ற வென்னின், முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாமுயிர்க்கு, மன்னிய புத்தி முத்தி வழங்கவு மருள்ளான் முன்னே, துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதும் சொல்ல லாகும்" (1 - 36) என்று சித்தியாரிலும், "ஏற்ற விவை யரனருளின் திருவிளையாட் டாக வியம்புவர்க, ளணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே, யூற்றமிக வருள்புரித லேதுவாக வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தன் மற்றைத், தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந் துய்ப்பித்த றிரோதாயி கிறுத்த லாகும், போற்றவரு மருளருளே யன்றி மற்றுப் புகன்றவையும் மருளொழியப் புகலொ ணுதே" (1 - 18) என்று சிவப்பிரகாசத்தினும் இக்கருத்தை விளக்கியவாறு காண்க.

மூன்றும் - கூடும் கருணைத்திறம் ஆமாறு என்னை? எனிற் கூறுதும்: (1) ஆடும் எனவும் - ஆடுதல் ஐந்தொழிற் கூத்து. ஐந்தொழில் செய்தல் முதல்வனுக்கு இலக்கணம். "ஐந்தொழிலாவன தோற்றம் நிலை இறுதி மறைப்பு அருள் என்பன. இவ்வைந்தொழிலும் தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என்று மூவகைப்படும். அவற்றுள் தூலமாகிய தோற்றமும் இறுதியும் பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் என்பது வெளிப்படை. நிலை - தோன்றிய பிரபஞ்சம் ஒடுக்கம் வருங்காறும் நிலைபெறுதல். மறைப்பு - அருள் என்பன "பந்தமும் வீடும்" என்று உணர்க. தோன்றிய பொருள் சங்கரிக்கப்படும் வரை தானே நிலைபெறும்; ஆதலின் நிலைத்தொழில் முதல்வன் காரியமென்றதென்னை? எனின், காலத்து ஒருங்கு தோன்றிய பொருள் இரண்டனுள்

ஒன்று நெடுங்காலம் நிற்றலும் ஒன்று சிறிதுகால நிற்றலுமாகிய நிலை வேறுபாடுள்ளமையின் இந்நிலை வேறுபாடு இதற்கேதுவாகிய வினைவேறுபாட்டானாயிற்று..... அவ்விருவேறு வினையும் முதல்வனாணையானன்றி வாராமையான் நிலைத்தொழிலும் முதல்வனாற் செய்யப்படும் காரியமாதல் அறிக. இன்னும், தண்ணீர்க்குடம் நிலைபெறுதல் தாங்கிச் செல்வோனது முயற்சியின்றி அமையாதவாறுபோலத் தோன்றிய பிரபஞ்சம் ஒடுங்குங்காறும் நிலைபெறச் செய்வதும் ஆகிய முதல்வனது ஆணையாகிய சங்கற்பமேயாம்.

மறைப்பாவது, குடங்கையில் ஏந்திய தீயின் சூட்டினை நிகழவொட்டாது தனக்கு மாறாகிய மந்திரமுச்சரிக்குங்காறுந் தடுத்து நிற்குங் குளிகைபோல, முதல்வனைச் சிறப்பியல்பான் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் அவனது பெருங்கருணை உயிர்கள் மாட்டு ஒருங்கே நிகழாதவண்ணம் தடுத்து நிற்கும் அவ்வம் மலசத்தியின் வழிநின்று அவற்றை நடாத்துவதாகிய அவனது சங்கற்பமேயாம். "பந்தமுமாய் வீடுமாயினருக்கு" என்புழிப் பந்தம் என்றதும் அது.

இனிச் சூக்கும ஐந்தொழிலாவன, சங்கரித்த பின்னர் மேற்செய்யக்கடவனவாகிய தூல ஐந்தொழிற்கு யோக்கியமாம்படி கேவலத்தின்கண் நிகழ்த்துவனவாம். அதிசூக்குமமாகிய தோற்ற முதலியன ஐந்தும் அவ்வவ் விடயநுகர்ச்சிதோறும் கணந்தோறு நிகழ்தல் கண்டுகொள்க" (மாபாடியம் - 2 - சூ - 1 - அ).

"ஊன நடன மொருபா லொருபாலா ஞானநடந் தானடுவே நாடு" (திருவருட்பயன்) என்றருளிய திருநடனமிரண்டனுள் இங்குக் கூறியது ஒன்று. "மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத், தானந்த மாநடத்தே தங்கியிடு - மானந்தம், மொண்டருந்தி நின்றாடல் காணுமருண் மூர்த்தியாக், கொண்டதிரு வம்பலத்தான் கூத்து" (உண்மை விளக்கம்-37); "எங்குந் திருநட்டம்"; "சிற்பரஞ் சோதிச் சிவானந்தக் கூத்தனைச், சொற்பதமா மந்தச் சுந்தரக் கூத்தனைப், பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை, யற்புதக் கூத்தனை யாரறி வாரே" (திருமூலர் திருமந்திரம் - 9 தந் - திருக்கூத்துத் தரிசனம்); "அவர்முன் றம்மைக் கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி" (489); "நின்றுயங்கி யாடலே நினைப்பதே நியமமே" (பிள். தேவா - ஆலவாய் - கௌசிகம் - 6) என்பனவாதி திருவாக்குக்களான் அறியப்படுகின்றபடி ஞானிகளுக்கு அருண்ஞானக் கண்ணாலே கண்டு திளைக்கும்படி கொடுத்து நிற்கும் ஞானநடனமாகிய அருட்கூத்து மற்றொரு வகையாம்.

"காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" எனவும், "ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டி, னுய்வார்க ளுய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" எனவும் வரும் திருவாசகத் திருவாக்குக்கள் இப்பாசுரக் கருத்தை விளக்கி நிற்றலும் காண்க.

இனி (2) அருங்கூற்றம் உதைத்து என்ற செயலும் உயிர்களின்மேல் வைத்த அருளால் ஆயது. மார்க்கண்டர்க்காகக் கூற்றுவனை உதைத்து உருட்டிப் பின் உயிரும் கொடுத்த சரிதம் எல்லாப் புராணங்களாலும் விளக்கமா யறியப்படுவதாம். "மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப், பார்க்கிலன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே" (தாயுமானார்); கால பாராயணக் குறுந்தொகையுள் அரசுகள் இயமன்றூதுவரைத் "தமர் நிற்கிலுஞ், சுருக்கெனா தங்குப் போமின்கண் மற்றுநீர், சுருக்கெனிற்சுட ரான்கழல் சூடுமே" என ஆணையிட்டமையும் காண்க.

இனி (3) வேதம் பாடும் எனவும் - வேதாகமங்களை இறைவர் புனருற்பவமாகிய சிருட்டியில் அருளிச்செய்து உலகுயிர்கள் அறிந்து அவ்வழியொழுகி உய்யும்பொருட்டுப்

பாடுகின்றார் என்பது ஆன்றோர் நூற்றுணிபு. "வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (அரசு. தேவா); "வேத முகந்திசை தோண்மிகு பன்மொழி கீதம்" (பொன் - அந் - 19); "ஓவா வோசை முழுதுநின் வாய்மொழி" (திருவொற்றியூர் ஒருபாவொருபஃது - 2); "ஒப்பிலா மணிவாய் வேதம், பல்விடை யெழுத்து நாவிற் பரமவா கமத்தின் பேதம், நல்விதழ் மனுவின் விஞ்சை" (கந்தபு - சூரன் வதை - 426).

உலகுக் கிவைசெய்த நீசர் கூடுங் கருணைத்திறம் - உலகம் கண்டு சிந்தித்து உணர்ந்து உய்யும்பொருட்டு ஐந்தொழிற் கூத்து ஆடுதலானும், மார்க்கண்டர்க்காகக் கூற்றனை உதைத்தது அவர்பொருட்டேயன்றி உலகோர் அதன் உண்மை உணர்ந்து தம்மை வந்தடைந்து சாவாமையும் பிறவாமையும் பெற்றுய்தற் பொருட்டாதலானும், வேதம் பாடுதல் உலகோர் விதிவிலக்குகளை அறிந்தொழுகவும் சிவநெறி நின்று உய்யவும் ஆதலானும் இவை உலகுக்குச் செய்தது கருணைத் திறம் என்றார்.

பெருங்கருணைத் திறமாவது - "முதல்வனுவான் முற்றுணர் வுடைமையின் உலகத்துயிர்கள் படுந் துன்பமுழுவதும் உணர்ந்தோனும்; பேராற்றலுடைமையான், உயிர்களை யெல்லாம் ஒருங்கே வீடுபேறடைவிக்க வல்லனும்; சிவன் சங்கரன் முதலிய பெயர்களானு மறியப்படுவதாய், விருப்பு - வெறுப்பின்றி, எல்லாவுயிர்கண்மாட்டும் ஒப்பநிகழ்வதாய்த், தொடர்புபற்றாது, பிறர்துன்பங் கண்டுழி அதனை அக்கணமே நீக்குதற்கு விளையும் மனவெழுச்சியாகிய பெருங்கருணையுடைமையான், அவற்றை ஒருங்கே வீடுபேறடைவித்தற்கண் ஒருப்பாடு மிக்குடையனும் உள்ளான் என முதல்வன திலக்கணம் பேசப்படும். அங்ஙனமாகவும் உயிர்கள் யாவும் ஒருங்கே வீடுபேறடையாமற் றடுத்து நிற்பன உயிர்க் குற்றமாகிய மலசத்திகள் ஆதலின் உயிர்கள் முதல்வனைச் சிறப்பியல்பான் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் முதல்வன் தனது சங்கற்பத்தான் அவ்வம் மலசத்தியின் வழிநின்று அவற்றை நடாத்துதலும் மறைப்பு எனப்படும் அவனது கருணைத்திறமாதல் காண்க. 839

திருப்பாசுரத் திருப்பதிகம் முன்னைந்து திருப்பாட்டுக்களான் முப்பொருளுண்மையும், இலக்கணமும், சாதனமும், பயனுமாக வரும் வேத சிவாகமங்களின் முடிபுகளை எடுத்துக் காட்டியருளியபடி, பின்னைந்து திருப்பாட்டுக்களான் அவ்வுண்மைகளை மார்புராணங்களின் உதாரணங்களால் எடுத்துக்காட்டியருளுகின்றார்; இவை பொதுவியல்பு - சிறப்பியல்புகளாக ஒருவாற்றான் வகுத்துரைக்க நின்றன என்ற நிலையினை, முன்னைந்து பாட்டுக்களுக்கு உரைவிரித்த நிலையும் யாப்பும் ஒருவகையானும், பின்னைந்து பாட்டுக்களுக்கு உரைநிலையிட்டமை வேறுவகையும் சந்தமுமாகிய வகையானும் ஆசிரியர் காட்டியருளிய தெய்வக் கவிநலம் காண்க. முற்பகுதிபோ லன்றிப் பின்னைந்து திருப்பாசுரப் பாட்டுக்களுக்கு ஓரோர் திருப்பாட்டால் கருத்துரைத்துச் செல்லும் நிலையும் கண்டுகொள்க. முதனூலாகிய திருப்பாசுரத்தைப் பிள்ளையார் இருவகை விருத்த யாப்பினால் யாத்தருளிய நிலையும், ஆசிரியரும் அவ்வாறே அவ்விருவகை விருத்தங்களாற் பொருள் விரித்த நிலையும் இக்குறிப்புத் தருவன.

["கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே."]

2738. கருதுங் "கடிசேர்ந்த" வெனுந்திருப் பாட்டி லீசர்
சண்டீசர் — ஆகமம் மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோறன் முத்தி
தருதன்மைய தாதல் சண்டீசர்தஞ் செய்கை தக்கோர்
பெரிதுஞ் சொலக் கேட்டன மென்றனர் பிள்ளை யார்தாம்.

(இ - ள்) கருதும்...பாட்டில் - கருதுகின்ற "கடிசேர்ந்த" என்று தொடங்கும் திருப்பாசுரத்தின் ஏழாந் திருப்பாட்டில்; ஈசர்...தன்மையதாதல் - சிவபெருமான் விரும்பி ஏற்று வீற்றிருந்தருளும் பெரும்பூசையினைச் சிதைவு செய்தவர்களைக் கொல்லுதல், தீச்செயலாவதன்றி முத்திதரும் தன்மையுடைய நல்ல செயலாதலை; சண்டீசர் தம்...சொலக்கேட்டனம் - சண்டீசர் தமது சரிதத்தினால் தக்கவர்களாகிய பெரியோர் சொல்லக் கேட்டோம்; என்றனர் பிள்ளையார் தாம் - என்று பிள்ளையார் தாம் அருளிச் செய்தனர்.

(வி - ரை) கருதும் "கடிசேர்ந்த" எனுந் திருப்பாட்டில் - "கடிசேர்ந்த" என்று தொடங்கும் திருப்பாசுரம் ஏழாவது திருப்பாட்டின் கருத்தினை இப்பாட்டால் உரைக்கின்றவாறு.

ஈசர்...முத்திதரு தன்மையதாதல் - முதல்வரது பூசையினைத் தடுத்து இடையூறு விளைத்தாரைக் கொல்லுதல் மாபாதகங்களைந்தனுள் முதன்மைபெற்ற கொலைப் பாவமாகாது; பாவப் பயனாகிய நரகமும் கொடாது; ஆனால் அது பசுபுண்ணியங்களினும் மேலாகிய சிவபுண்ணியமேயாகி, அதன் பயனாகிய முத்திதரும் தன்மையுடையதாகும் நிலை; ஆதல் - ஆதலை - ஆகும் நிலையினை என்று இரண்டனுருபு விரிக்க; ஆதல்-கேட்டனம் என்று கூட்டுக; கோறல் - கொல்லுதல்; கோல் என்ற பகுதி முதனீண்டு, தல் - தொழிற்பெயர் விகுதிபெற்ற பெயர்.

சண்டீசர்தம் செய்கை - செய்கை - செய்கையினால்; செய்கை காரணமாகக் காட்ட.

தக்கோர் பெரிதும் சொல - தக்கோர் - உண்மை அறிந்து சொல்லும் தகுதியுடையோர். தகுதியாவது திருவருள் அறிவிக்க அறிந்து கூறும் பக்குவமுடைமை; அறிவார் - என்பது பதிகம். பெரிதும் சொல்லுதலாவது விளக்கமாக எடுத்துக்காட்டுதல். சண்டீசர் சரிதம் பதிகப் பாட்டினில் எடுத்துக்காட்டியது காண்க. பதி புண்ணியங்களுக்கும் பசுபுண்ணியங்களுக்கும் வேறுபாடு காட்டப்பட்டது. இனிப் பதிபுண்ணியங்களும் சிவநல்வினை - தீவினை இருவகைப்படும். இவற்றி னியல்பெல்லாம் மாபாடியத்துள் (8 - 1) இருவினை ஒப்பு என்பதனைக் கூறுமிடத்து விரிக்கப்பட்டன. ஆண்டுக் கண்டுகொள்க.

தக்கோர் சொலக் கேட்டனம்-பிள்ளையார் காலத்துக்கு முன்பு வாழ்ந்த அறிவார் சொல்லியதனைத் திருமூலர் - மணிவாசகப் பெருமானார் - நக்கீரர் முதலியோர் திருவாக்குக்களால் அறிக; பிள்ளையாருடன் ஒருகாலத்து வாழ்ந்த அரசுகள் தேவாரமும் காண்க; இனி அவற்றை ஒட்டிப் பின்வந்த நம்பிகள் தேவாரத்தினும் திருவிசைப்பாத் திருப்பல்லாண்டினும், பதினொராந் திருமுறையினும் அவ்வாறே போற்றப்படுதல் காண்க. ஞானசாத்திரங்களாகிய திருக்களிற்றுப்படியார் (19) சிவஞானசித்தியார் (2 - சூ) முதலியவற்றுள்ளும் இவ்வுண்மை போற்றப்படுதல் காண்க. திருமுறைகளுள் கண்டவை சண்டீச நாயனார் புராணத்திறுதியில் தொகுக்கப்பட்டன. ஆண்டுக் கண்டுகொள்க.

**கோறல் முத்தி தரும் தன்மையது ஆதல்** - கொலைப்பாதகச் செயல் எவ்வாற்றால் முத்திதரும் எனில் அன்பு காரணமாமென்க. இதன் இயல்பு சண்டீசர் புராணத்தினுள் 1264-ன் கீழ் “ அன்பு தந்த வடியார் செய்தனவே தவமாம் ” என்றவிடத்து உரைக் கப்பட்டது ; ஆண்டுக் கண்டுகொள்க. “ பாதகமே சோறு பற்றினவா ” (திருவா) ; “ பாதகத்துக்குப் பரிசு வைத்தான் ” (பல்லா) ; “ பாதக மென்றும் பழியென்றும் பாராதே, தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ் - சேதிப்பக், கண்டீசர் தாமாம் பரி சளித்தார் கண்டாயே, தண்டீசர் தாஞ்செயலாற் றான் ” (களிறு - 19).

“ மண்ணைக் கல்லிற் பிராணிபடும், வருத்த வேண்டா ” என்று தந்நலங் கருதி இதோபதேசம் செய்த அமணர்க்குப் “பிராணுக் கானபணி, யாசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்கென்று” தண்டியடிகணாயனார் விடையிறுத்த வரலாறும் இவ்வுண் மையை விளக்குதல் காண்க.

இதனால் முன்கூறிய (1899) பயன்கள் மூன்றனுள் இரண்டாவதாகக் கூறப் பட்ட “மிகுசைவத் துறைவிளங்கு”தல் பெறப்பட்டமை காண்க. 840

[“வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் னொலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே”]

2739. “வேத முதல்வ” னெனுமெய்த் திருப்பாட் டினினேர்
ஆதி யுலகோ ரிடர்நீங்கிட வேத்த “வாடும்”
பாத முதலாம் பதினெண் புராணங்க ளென்றே
ஓதென் றுரைசெய்தனர் யாவு மோதா துணர்ந்தார். ௮௪௧

பதினெண் புராணங்கள் புராணம்

(இ - ள்) “வே. . முதல்வன்”...திருப்பாட்டினில் - “வேத முதல்வன்” என்று தொடங்கும் உண்மை. திருப்பாட்டிலே ; நேர் - நேர்பட வரும் பொருளாவது : ஆதி...பாதம் முதலாம் - ப. . பிரமாணமான வேதத்தால் குறிக்கப்படும் முதற்கடவுள் உலகுயிர்கள் தத்தம் பிறவித்துன்பம் நீங்கவும், அறிந்து ஏத்தவும் திருக்கூத்தாடுகின்ற திருவடிகளையுடைய சிவபெருமானேயாம் ; அவரே முதற்கடவுளாவர் ; பதினெண் புராணங்கள் - (அவ்வுண்மையைத் தெளிய விளக்குவன) பதினெண்புராணங்களாம்; என்றே ஓது-என்று துணிந்தே அவற்றைஓதுவாயாக ; என்றனர் யாவும் ஓதாதுணர்ந் தார்-என்று கூறியருளினர் எல்லா ஞானங்களையும் ஓதாது உணர்ந்தவராகிய பிள்ளையார்.

(வி - ரை) **வேத முதல்வன்......நேர்** - வேத முதல்வன் என்று தொடங்கும் திருப்பாசுரத்தின் பொருளைக் கூறியபடி. **ஆதி** - முதல்வன் ; **உலகோர் இடர் நீங்க ஏத்த ஆடும் பாதம்** - முன் “ ஆடும் எனவும் ” என்ற திருப்பாசுரத்தில் “உலகுக்கிவை செயதது ஈசர் கூடும் கருணைத்திறம் ” (2737) என காட்டப்பட்டமையின் அதனையே முடிந்த பொருளாக எடுத்து அநுவதித்துக்கொண்டு ஈண்டு உலகோர் இடர்நீங்கிடவும் ஏத்தவும் ஆடும் என்றருளினார். **ஆடும்** - என்பது (2737) முன்பாட்டின் குறிப்பு.

**உலகோர்** - “ உலகுக்கு” (2737) ; **இடர் நீங்கிட ஏத்த**-துன்ப நீங்கவும் ஏத்தவும் என எண்ணும்மை விரிக்க. முன்பாட்டிற் கூறியவற்றுள் (2737 - பாசுரம் - 6) “ அருங்கூற்ற முதைத்த ”லால் துன்பநீங்குதலும், “ வேதம் பாடுத ”லால் ஏத்துத லும் பெறப்பட்டன என்பது குறிப்பு.

**பாதம்** - "ஆடும்" என்பதற்கேற்பப் பாதம் என்றார். பாதம் என்பதுபசாரம்; அருளே திருவடி என்க. **பாதம்** - பாதத்தையுடைய முதல்வன். **ஆடும்** என்பது **அருள் கூடும் கருணைத் திறம்** - என முன் (2737 - பாசுரம்-6) கூறி முடித்தமையும் காண்க.

**ஆதி, உலகோர் இடர் நீங்கிட ஏத்த ஆடும் பாத முதலாம்** என்ற முடிபு வேதங்களுக்கும் மாபுராணங்களுக்கும் ஒக்குமென்பார் நேர் - என்றார். வேதம் பொதுநூலாதலின் எல்லாக் கடவுளரையும் முகமனால் எடுத்தியம்பினும் அவரையெல்லாம் இயக்கும் முழுமுதல்வனாகிய சிவபெருமானைத் திருவுருத்திரத்தினுள் இருதயத்தில் தலைமையாக வைத்துப் போற்றும். அதுபோலவே வேதங்களை உபப்பிருங்கணம் செய்யும் புராணங்கள் பதினெட்டும் தலைமைபற்றிப் பத்துப் புராணங்களுள் சிவனது முதன்மையினைப் போற்றி, ஏனை எட்டனுள் சிவனால் இயக்கப்பட்டுத் தந்தொழில் நடாத்தும் விட்டுணு - பிரமன் - அக்கினி-சூரியன் இவர்களை முகமனால் தலைவர்களாக எடுத்துக் கூறும். திருப்பாசுரமும் "வேத முதல்வன் முதலாக விளங்கி - உலகத்தவர் ஏத்தல் செய்ய" என்றும், "பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த, சூதன் ஒலிமாலை" என்றும் இக்கருத்தைக் கொண்டதென்று காட்டுமுகத்தால் ஆசிரியர் **வேத முதலாப்...பாட்டினில் நேர்** - என்றுகாட்டியருளினார். **புராணங்களின் நேர்** - (கூறும்) என்க.

**உலகோர்இடர் நீங்கிட ஏத்த** - நீங்கிடவும் ஏத்தவும். **இடர் நீங்கிட** - இடர் நீங்கும் பொருட்டு என்றலுமாம். "ஏதப்படாமை உலகத்தவரேத்தல் செய்ய" என்ற திருப்பாசுரப் பகுதியை விளங்கவைத்தவாறு.

**என்றே ஓது** - ஏகாரம் தேற்றம். **ஓது** - அவற்றை வெறும் கதைகள் என்று எண்ணிப் புறக்கணிக்காமல் ஓதுவாயாக என்று ஆணை தந்தருளினர் என்க.

**புராணங்கள் நேர் என்றே ஓது** - சொல்க என்றலுமாம். "**கலிக்கோவை**" - (பதிகம்) புகழ்மாலை. பதிகம் கலி விருத்தம் - கலி நிலைத்துறையாதலும் குறிப்பு.

**ஓதென்றுரைசெய்தனர் - ஓதாதுணர்ந்தார்** - முரண் அணி. பிள்ளையார் இறைவர்பால் முன்னைத் தவத்தால் ஞானம் பெற்றனராதலின் இப்பிறப்பில் ஓதாதுணர்ந்தார் என்றவாறு; **உணர்ந்தார்** - என்ற குறிப்புமிது. **யாவும் உணர்ந்தார்** என்க. **தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்** (1967); "அகில, தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந், தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினார்" (1966); இவ்வாறன்றிப் **புராணங்கள் யாவும் நேர்** என்று கூட்டியுரைப்பினும் அமையும்

**பதினெண் புராணங்கள்** - மச்சம் - கூர்மம் - வராகம் - வாமனம் - சிவமகாபுராணம் - இலிங்கம் - பவிடியம் - காந்தம் - மார்க்கண்டேயம் - பிரமாண்டம் என்ற பத்தும் சிவபிரானை நேரே எடுத்துக் கூறுவன; விஷ்ணு புராணம் - பாகவதம் - கருடம் - நாரதீயம் என்ற நான்கும் விட்டுணுவைப்பற்றியும், பிரமம் · பதுமம் என்ற இரண்டும் பிரமனைப்பற்றியும், ஆக்கினேயம் அக்கினியைப்பற்றியும், பிரமகைவர்த்தம் சூரியனைப்பற்றியும் கூறுவன. இவை, அரசனாணையின் வழிநின்று மந்திரத் தலைவர் முதலியோர் செய்வனவற்றை அவ்வவர் செய்தனவாகக் கூறுதல்போல, அவர்களை இயக்கும் சிவச்செயலை முகமனால் அவ்வவர்மேற் கூறுவனவாகக் கொள்க.

**என்றே ஓதென்றுரைசெய்தனர்** - "சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே" என்பது பதிகப் பகுதி. "பண்டைத் தவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும் தொண்டர்"களாகிய சாமுசித்தர்களன்றி "மார்க்கர் கண்டது லோகதி வீடு காதலிப்பவர்"களாகிய ஏனையோர் யாவர்க்கும் வேதங்களின் பொருளுணரப்

புராணங்களை யோதுதல் இன்றியமையாததென்றதாம். ஓது - ஓதிக்காதலிப்பவர் (சித்தி - பாயி) என ஞானநூலும் விதித்தல் காண்க.

ஒருவன் நான்கு வேதங்களையும் நன்குணர்ந்தானேனும் புராணத்தை நன்குணரானேல், அவ்வேதங்கள் தமது அர்த்தங்களைப் பேதிப்பான் என்றஞ்சும் என்பர். அன்றியும் வேதம் 4 - அங்கம் 6 - மீமாம்சை 1 - நியாயம் 1 - புராணங்கள் 1 - தன்மநூல் 1 என்ற பதினான்குடன், ஆயுள் வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், சிற்பம் என்ற உபவேதம் நான்கும் கூட்டிப் பதினெட்டு வித்தைகளையும் உலகோர் படிமுறையால் ஓதியுய்யும் பொருட்டுச் சிவபெருமான் அருளிச் செய்து பிரமனைப் படைத்து அவற்றை அவனுக்கு உபதேசித்தருளினர் என்று வரலாறு கேட்கப்படுகின்றது. " அட்டாதச வித்தைகளுக்கும் கர்த்தா சூலபாணி " என்பது காண்க.

திருப்பாசுரத்தினுள் " பூதமுதல்வன் முதலே முதலாக "; " உலகத்தவர் எதப் படாமை " என்றும், இப்பாட்டினுல் உலகோர் இடர் நீங்கிட என்றும் கூறிய வாற்றால் முன் (1899ல்) கூறிய பயன் மூன்றனுள் இறுதிக்கண் நின்ற பயன் பெறுதற்குரியராகிய " பூத பாம்பரை பொலிய " என்ற பயன் பெறப்பட்டமை கண்டு கொள்க.

• ஈண்டு வேதம் என்றது வேதாந்தத்தை எனவும், வேதாந்தம் சிவத்தின் இயல்பை நுண்மை வழியில் அறிவுறுத்தும், அதனைப் பருமை நெறியில் அறிவுறுத்துவன புராணங்கள் எனவும், புராணக் கதைகளை உள்ளவாறே கொள்ளாது வேதாந்த முறைப்படி கொள்ளல் வேண்டும் எனவும் விசேட ஆராய்ச்சி உரை கொள்வாருமுண்டு.

இனி, இதன்மேலும், பலர் பலப்பலவாறு புராணங்களைப் பொய் என்றும் புனைந்துரைகள் என்றும் இகழ்ந்து கூறித் தாமும் இடர்ப்பட்டு அபசாரப்படுவதுடன் உலகோரையும் இடர்ப்படுத்தி யொழிவர். தன்மைநிலையானும், உவமை உருவகம் அருத்தவாதம் முதலிய நிலைகளானும் நூல்களைப் பொருள்கொள்ளும் வகைகளை அனுபவம் வல்ல தேசிகர்பாற் கேட்டுப் பயின்று ஞானநூல்களை ஆளுதல் முறை. புராண சரித வரலாறுகளை உண்மை ஞானநூல்களினும் எடுத்தாண்ட முறைகளும் கவனிக்கற் பாலன. 841

["பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்தபுக ழும்புக ழுற்ற தன்றே"]

2740. பாவுற்ற "பாராழி வட்டத்" திருப்பாட்டி னுண்மை
காவற் றொழிலானே னுங் கண்ண னுங் காவல் பெற்ற
தியாவர்க்கு மேலாய வீசனரு ளாழி பெற்று
மேவுற்ற சீருற்ற தென்றனர் வேத வாயர். அசஉ

(இ - ள்) பாவுற்ற...உண்மை - திருப்பாசுரத்திற் பொருந்திய " பாராழி வட்டம் " என்று தொடங்கும் திருப்பாட்டின் உண்மையாவது ; காவல்...பெற்றது - உலகங் காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள விட்டுணுவும் அக் காவல்தொழில் கிடைக்கப்பெற்ற வரலாறுவது ; யாவர்க்கும்...சீருற்றது - எல்லார்க்கும் முதல்வராகிய சிவபெருமா னருளும் சக்கரமும் பெற்றுப் பொருந்திய சிறப்பைப் பெற்றபடி

யாம் ; என்றனர் வேதவாயர் - என்று அருளினார் வேதங்களை வெளிப்படுக்கும் திருவாக்கினை யுடைய பிள்ளையார்.

(வி - ரை) பாவுற்ற...உண்மை - இத்திருப்பாட்டினால் "பாராழி வட்டம்" என்று தொடங்கும் திருப்பாசுரம் ஒன்பதாம் திருப்பாட்டின் கருத்தினை எடுத்து உரைத்தபடி. பாவுற்ற - பா - திருப்பாசுரம். அதன் சிறப்புப்பற்றி இவ்வாறு கூறினார். "பாவெனப் படுவதுன் பாட்டு" என்றது காண்க ; பா உற்ற பாட்டின் நல்விலக்கணம் முற்றும் பொருந்திய என்றலுமாம். பரம்பிய - எங்கும் பரந்த சிறப்புடைய என்ற குறிப்புமாம்.

காவற் றொழிலான்......பெற்றது - தொழிலான் எனும் - படைப்புக் காப்பு அழிப்பு என்ற முத்தொழில்களுள் காத்தல் என்ற தொழிலைச் செய்பவன் என்று சொல்லப்படும். உலகம் அவ்வாறு முகமனால் கூறினும் உண்மையில் அவன் செய்கிறதில்லை என்பார் எனும் என்றார்.

கண்ணனும் காவல் பெற்றது - உண்ணின்றியக்குதலால் அவன் ஆணைவழியே நின்றும் அவன் தந்த சக்கரத்தின் துணைகொண்டும் செய்கின்றான் என்ற தன்மையால் அவ்வா றுபசரிக்கப்படும் தன்மையும் வாய்த்தது என்பது கண்ணனும் என்ற இழிவு சிறப்பும்மையின் குறிப்பு.

காவல் பெற்றது - காக்கும் தொழிலின் தன்மை அடையப்பெற்றது.

யாவர்க்கு மேலாய ஈசன் - முதல்வன் "யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்" (திருவாசகம்) ; சீருற்றது அவன் அருளப்பெற்ற சீர் உற்றதன் தன்மை என்க. "மூவிலை யொருதாட் சூல மேந்துதல், மூவரும் யானென மொழிந்த வாறே" (திருவொற் - ஒருபா - 6) ; "மூவர்கின் சந்நிதி முத்தொழில் செய்ய வாளா மேவண்ணல்" (திருவிளை. புரா) முதலியவையும் காண்க.

ஈசன் - ஈசத்துவமாகிய முதன்மைக்குண முடையவன் ; ஏனையோர் எல்லாரையும் தன் ஆணைவழி நிற்கச் செய்பவன்.

அருள் ஆழி - அருளும் ஆழியும். அருளாவது அவனது காத்தற்றொழில் இனிது செல்லும்படி சங்கற்பித்தல் ; "அருள் செய்தல் பேணி" என்பது பதிகம். ஆழி - சக்கரம். பாராழி வட்டம் - என்றவிடத்து, வட்டஆழி சூழும் பார் என ஆழி-ஆணைச் சக்கரம் என்ற குறிப்பும் தந்துநிற்பது காண்க.

பெற்றது - பெற்ற வரலாறு ; பெயர்.

சீருற்றது - சீருற்றதனால் காவல் பெற்றதாம் எனக் காரணப் பொருள்பட நின்றது.

கண்ணன் - கிருட்டினன் என்ற ஓரவதாரத்தின் வந்த பெயர் விட்டுணு என்ற பொதுப்பொருளில் வந்தது. "நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்" (தனது உறைவிடமாகிய நீரினையுடைய கடலினை விட்டு ஏறிவந்து தன் நெஞ்சினை இறைவனுக்கு இடமாக வைத்துக்கொண்டு தியானித்த திருமால்) என்றது பதிகம். "நாகப் பள்ளி கொள்வா னுள்ளத்தான்" (அப்பர் - ஆரூர்) ; (திருமாலினால்) தியானிக்கப் படுபவன் ; "தியேயன்". தியாதா - தியானிக்கின்றவன் ; (மால்) ; "நாராயண: பரோத் தியாதா" என்பது வேதம்.

கண்ணன் (திருமால்) ஆழிபெற்ற வரலாறு மாபுராணங்களாற் பேசப்படும். திருப்பாசுரத்தில் விரிவாக அருளப்பட்டதனால் ஆசிரியர் அதனைச் சுட்டிக் கூறியமட்டில் அமைந்தனர்.

இந்திரன் ஒருகாலத்து அகந்தையொடும் திருக்கயிலாயத்துக்குச் சென்றான். சிவபெருமான் ஒரு பூதகணநாயக னுருவங்கொண்டு அவன் எதிரே வந்தனர். அவரை யறியாமையால் அகந்தையினால் அவர்மேல் தனது வச்சிராயுதத்தை எறிந்தனன். அது துகளாயிற்று. சிவபெருமான் உருத்திர வடிவங்கொண்டு சினந்தவர்போற் காட்டினர். அவரது திருமேனியில் வியர்வை தோன்றிற்று. இந்திரன் கண்டு பயந்து வணங்கினான். இறைவன் சினநீங்கி அவனுக்கு அருளி, விடுத்தனர். இறைவர் அப்போது தாங்கிய சினத்தினைக் கடலில் எறிந்தனர். அது ஒரு அசுரஉருக்கொண்டு வருணனால் வளர்க்கப் பட்டுச் சலந்தரன் என்ற பெயர்கொண்டு வளர்ந்தது ; அச் சலந்தராசுரன் சிவன்பாற் றோன்றியவனாதலால் விட்டுணு பிரமன் முதலிய வேறெத்தேவரையும் மதியாது தானே அனேகம் அசுரர்கள் சூழ உலகிற் சுயாட்சி புரிந்து வந்தனன். விட்டுணு அவனிடம் அனேக ஆண்டுகள் போர்புரிந்து தோல்வியுற்றனர். இந்திரனும் ஏனைத் தேவர்களும் பயந்து திருக்கயிலையிற் புகலடைந்தனர். அங்குச் சிவபிரானுடன் போர்செய்யும்பொருட்டுச் சலந்தரன் சேனைகள் சூழ அகந்தையுடன் கயிலைக்கு வந்தான். சிவபிரான் ஒரு கிழ முனிவராக அவன்முன்னே வந்து அவனை எங்குச் செல்கின்றாயென்று கேட்டனர். அவன் நான் சிவனுடன் போர் செய்யச் செல்கின்றேன் என்றான். அவர், உனக்கு அவ்வலிமை யிருக்குமாகில் இந்தச் சக்கரத்தை எடுத்துத் தலையில் வைத்துக்கொள் என்று கூறித் தமது கால்விரலால் நிலத்தில் ஒரு சக்கரத்தைக் கீறினார். அவன் அதை மிக்க சிரமத்துடன் பேர்த்தெடுத்துத் தலையில் வைக்க அது அவனை இரு பிளவாக அறுத்துக் கொன்றது. அந்தச் சக்கரத்தைப் பெறும்பொருட்டு அனேக காலம் திருமால் திருவீழிமிழலையில் தினம் ஆயிரம் தாமரைமலர் கொண்டு இறைவரை அருச்சித்துத் தவங்கிடந்தார். ஒருநாள் இறைவரது அருளினால் அவற்றுள் ஒருபூக் குறைய அவர் தமது கண்ணைத் தோண்டிச் சாத்தினார் ; இறைவர் வெளிப்பட்டு அவருக்குச் சுதரிசனம் என்ற அச் சக்கரத்தை அருளினார். அதன் துணையினால் திருமால் தமது ஆணைச் சக்கரம் உலகில் செலுத்திக் காவற்றொழில் புரிந்து வருகின்றார். இது திருமால் ஆழி பெற்ற சரிதம். விரிவு காந்தம் முதலிய மாபுராணங்களுட் கண்டுகொள்க.

"தன்றவம் பெரிய சலந்தர னுடலந் தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சிய விமானத் திறையவன்"
(பிள். தேவா - புறநீர்மை - மிழலை - 9)

"நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
வேற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் ணிறைய விட்ட
வாற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே" (நேரிசை - 8)

"சமரமிகு சலந்தரன்போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்" (தாண்டகம் - 2)

"செருமேவு சலந்தரனைப் பிளந்தசுட ராழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி" (நம்பி - கலயநல்-2)

"சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ :
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விடவாழி யருளினன்காண் சாழலோ" (18 - திருவா - சாழல்)

என்பனவாதி திருவாக்குக்களால் இச்சரிதம் வேத சம்மதமாகிய விளக்கமுடையதென்பது பெறப்படும்.

இச்சரிதமும், மேல்வரும் பாட்டிற் கூறும் விடமுண்ட சரிதமும்-இவைபோல்வனவும் "வேதமுதல்வன்" என்ற திருப்பாட்டிற் கூறியருளியபடி பதினெண் புராணங்களும், "வேத முதல்வன் முதலாக" என்ற சிவபெருமானது முழுமுதற் றன்மையினை எடுத்துக்காட்டி வேதங்களுக்கு உபப்பிரம்மணங்களாதலை நிலைநாட்டுகின்றன. இங்கு **வேதவாயர்** - என்ற குறிப்புமிது. 842

[*"மாலா யவனும் மறைவல்ல நான்மு கனும்*
*பாலாய தேவர் பகரில்லமு தூட்டிப் பேணிக்*
*காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த*
*ஆலால முண்டங் கமரர்க்கருள் செய்த தாமே'*]

2741. "மாலா யவ"னென்ன வருந்திருப் பாட்டின் மாலும்
*தோலா மறைநான் முகனுந் தொடர்வா மமரர்*
*ஏலா வகைசுட்ட* நஞ்சுண் டிறவாமை காத்த
மேலாங் கருணைத்திறம் வெங்குரு வேந்தர் *வைத்தார்.* *அ௪௩*

(இ - ள்) *மாலாயவன்...திருப்பாட்டில்* - "மாலாயவனும்" *என்று தொடங்கும் திருப்பாசுரப் பாட்டின்கண் ; மாலும்...நஞ்சு - திருமாலும் வெற்றி பொருந்திய வேதங்களில் வல்ல பிரமனும் அவர்களைத் தொடர்வாகும் தேவர்களும் பொருந்தமாட்டாதபடி சுட்ட விடத்தினை ; உண்டு...கருணைத் திறம் - தாம் உண்டு அவர்கள் சாவாதபடி காத்த மேலாகிய பெருங்கருணையின் வெற்றிப்பாட்டினை ; வெங்குரு வேந்தர் வைத்தார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அறிய வைத்தருளினார்.*

**(வி - ரை) பாட்டில் - கருணைத் திறம் - வைத்தார் -** *என்று கூட்டுக.* **திறம்-வைத்தல்** - *திறத்தினை அறியக் காட்டுதல்.*

**மேலாங் கருணைத்திறம் - திறம்** - *திறத்தினை - மேம்பாட்டினை ;* **மேலாம் -** *பெரிதாகிய ; பிறர் எவர்க்கும் அரிதாகிய ; தலைமையாகிய.* **பேரருளுடைமை -** *இறைவரது எண்குணங்களுள் ஒன்று ; இது முதன்மை குறிக்கும்.*

**தோலா மறை - தோலா** - *தோல்வியில்லாத ; வேறெந்த நூலாலும் மறுக்க முடியாத ; "மறைவல்ல நான்முகனும்" என்பது பதிகம்.*

**தொடர்வாம் அமரர் -** *தொடர்ந்த தேவர் ;* **தொடர்தல்** - (*அவர்களுள்*) *அடங்கி அவராற் பயன் பெறுதல்.*

**அமரரும்**-*என்று எண்ணும்மை விரிக்க. இவர்கள் வருணன்-சூரியன் முதலியோர்.*

**மாலும் - மறை நான்முகனும் - அமரரும் ஏலா வகை சுட்ட - நஞ்சு உண்டு - காத்த** *என்றதனால் வேதங்களுள்ளும், அவற்றை உபப்பிரம்மணம் செய்யும் மாபுராணங்களுள்ளும் சிவனையேயன்றி மால் - பிரமன் முதலாகிய தேவர்களும் உடன் போற்றப்படினும், மால் முதலிய ஏனைத் தேவர்க்கெல்லாம் முதல்வன் சிவனேயாம் என்பது அவற்றின் கருத்து என விடமுண்ட சரிதம் அவற்றுளெல்லாம் பேசப்பட்டதனால் விளங்கும் என்று காண்க. இக் குறிப்புப் பெறத்* **தோயாமறை** *என்றார். "மறைவல்ல" - (பதி).*

**ஏலாவகை - ஏலுதல்** - *பொருந்துதல் ; பொறுத்தல் ; தாங்கிக்கொள்ளுதல்.*

**சுட்ட -** *கருக்கிய ; தீய வைத்த.* **நஞ்சுண்டு - உண்டதனால்.**

இரவாமை - அன்று அந்த நஞ்சினால் சாவாதபடி. மற்றபடி அவர்கள் காலாந்தரத்தில் இறத்தற்குரியவர்களேயாம்.

சிவபெருமான் விடமுண்ட வரலாறு: ஒருகாலத்தில் அமிர்தமுண்டு நீண்ட ஆயுள் பெறும்பொருட்டுத் தேவர்களும் அசுரர்களும் திருமாலைத் தலைவராகக்கொண்டு, மந்தர மலையை மத்தாக நாட்டி, வாசுகியைக் கயிறாகக் கொண்டு, திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது வருத்த மிகுதியால் வாசுகி விடத்தினைக் கக்கிற்று; அந்த நஞ்சு உறுத்துக் கொடியதாயெழுந்து பொங்கி அவர்களை மேனிகருகத் தீய்த்தது; அவர் ஓலமிட்டு ஓடிச் சிவபெருமானிடம் வேண்ட அவர் அவ்விடத்தினைச் சிறிதாக ஆக்கிக் கொணரும்படி ஆலாலசுந்தரரை ஏவினர். அவர் அவ்வாறே அதனைச் சிறிதளவிலாகத் திரட்டிக் கொணர அதனைச் சிவபெருமான் உண்டருளினர். தேவர்கள் வேண்டுதலின்படி அம்மையார் திருக்கரத்தினால் அதனை இறைவரது கழுத்தளவில் தடுத்து நிறுத்தியருளினார். இறைவரது எரிபோன்ற சிவந்த திருமேனியில் கண்டத்தில் அந்த நஞ்சு சிறிது கருமைகொண்டு விளங்கிப், பிறைசூடுதல்-கங்கை தாங்குதல்-போலச் சிவனது பெருங் கருணையின் வெற்றிப்பாட்டினையும் முழுமுதற் றன்மையினையும் மேம்பாடாக விளக்கிக் கொண்டு நிற்கிறது. இவ்வரலாறு மாபுராணங்களெல்லாவற்றினும் பேசப்பட்டுள்ளது. "பொங்கி நின்றெழுந் தகட னஞ்சினைப்,பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்" (குறுந்) ; இவ்வாறு இறைவர் விடமுண்ட பின்னர்த் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் எழுந்த அமுதமுண்டு நீண்டகாலம் ஆயுள் பெற்று வாழ்ந்து காலாந்தரத்தில் தத்தம் காலவெல்லை கூடியபோது இறந்தும், மீளப் பிறந்தும் வருகின்றனர். ஆனால் எமது முதல்வராகிய சிவபிரான் ஏனையோரைச் சாகச்செய்யும் நஞ்சினை உண்டும் தாம் இறந்துபடாமல் நித்தியராக விளங்குகின்றார். இதனாலும் "வேத முதல்வன் முதலாகி"ய தன்மை விளக்கப்பட்டமை காண்க.

வேங்குரு - சீகாழியின் நான்காவது பெயர் ; அசுரர் வழிபட்டமையால் இப் பெயர் போந்ததென்பர். இறைவரது முழுமுதற் றன்மையைப் பிள்ளையார் இங்குப் புராணங்கள் மூலமாக எடுத்து உபதேசித்த குறிப்புப்பெற வேங்குரு வேந்தர் என்ற இவ்வாற்றாற் குறித்தார். 843

["அற்றன்றி யந்தண் மதுரைத்தொகை யாக்கி னானும்
தெற்றென்று தெய்வந் தெளியார்கரைக் கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே!—11]

2742.. ஆன"வற் றன்றியந்தண்" ணெனுந்திருப் பாட்டிற் கூடன்
மாநகர்ச் சங்கம் வைத்தவன் தேறத் தேறு
ஈனர்க ளெல்லைக் கிட்டவே டெதிர்ந்து செல்லில்
ஞானமீ சன்பாலன் பென்றனர் ஞான முண்டார். ௮௪௪

(இ - ள்) ஆன அற்றன்றி...பாட்டில் - பதிகம் நிறைவாயின " அற்றன்றி யந் தண் " என்று தொடங்கும் திருப்பாட்டின்கண் ; கூடல்...தேற - நான்மாடக்கூடல் என்னும் மதுரையில் முச்சங்கங்களை நிறுவிய பாண்டியன் தேறவும் ; தேறு...ஏடு - தெளிவு பெறாத கீழ்களாகிய சமணர்கள் வாதத்திற் கூறிய எல்லையில் முடிவு காணும்படி இட்ட ஏடு ; எதிர்ந்து...அன்பு - நீரில் எதிர்த்து மேற்செல்லுமாதல் அதனால் உறுதிபெறப்படும் உண்மைப் பொருளாவது ஈசனிடத்து அன்பேதான் ;

என்றனர் ஞானம் உண்டார் - என்று சிவஞானவமுதுண்டருளிய பிள்ளையார் கூறி யருளினார்.

(வி - ரை) ஆன - பதிகப்பகுதி நிறைவாயின. மேல்வரும் பாசுரம் திருக்கடைக் காப்பு ஆதலின் இதுவே பதிகநிறைவு என்க. "பாசுரஞ் சொன்ன பத்தும்" (12) என்பது காண்க. "பாடியவப் பதிகப்பாட் டான பத்தும் பாடனிரம் பியபின்னும், ...நீடுதிருக் கடைக்காப்பி லரிது வேண்டி நின்றெடுக்க" (2480) என்றமையால் இந் நியமம் கண்டுகொள்க; கருதும் - என்றும் (2738); பாவுற்ற - என்றும் (2740) அவ்வப் பாட்டுக்களுக்கு ஏற்ற அடைமொழிகள் தந்தோதியமையும் காண்க.

"அற்றன்றி அந்தண்" எனும் - "அற்றன்றி யந்தண்" என்று தொடங்கும் பதினொராவது திருப்பாட்டு.

கூடல் மாநகர்ச் சங்கம் வைத்தவன் - பாண்டியன். சங்கம் - தமிழ் மூச் சங்கங்கள். சங்கம் - "அந்தண் மதுரைத் தொகை" என்பது பதிகம். இது பாண்டியர்களுக்குப் பொதுவாய்க் கூறும் அடைமொழி. இப் பாண்டியர் சங்கம் வைத்தவர் என்பதன்று; முன்னோருள் ஒருவர் செய்த சிறப்புச்செய்கை அம்மரபில் பின்வரும் எல்லோருக்கும் ஏற்றியுரைக்கும் நிலை காண்க. பாண்டியர்கள் தமிழ் மூச்சங்கங்கள் நிறுவிய வரலாறு இறையனாரகப்பொருளுரையாலும் திருவிளையாடற் புராணத்தாலும் அறிக.

வைத்தவன் தேற(வும்) தேற ஈனர் எல்லைக் கிட்ட ஏடு - என்க. ஞானம் ஈசன் பால் அன்பே என்று இப்பாட்டின் உண்மையினை அரசன் தேறக் கூறியருளினார்; தேற ஈனர் - சமணர்கள்; சுரத்திலும் தீயிலுமாக ஒருமுறைக் கிருமுறையும் சிவ பெருமானது உண்மை தெளிவிக்கப்படினும் தெளியாது பின்னும் நீரில் ஏடு எதிர்ந்து செல்லும் வாதம் வேண்டி ஒட்டினார்களாதலின் இவ்வாறு கூறினார்.

எல்லைக் கிட்ட - வாதத்தின் முடிவாக ஒட்டியது. இவ்வொரு "தனிவாதில் அழிந்தோமாகில்" இனியும் வேறு வேண்டோம்; எங்களை "வெங்கழு வேற்று வானிவ் வேந்தனே" என்று வாதத்துக்கு எல்லை வகுத்தமை குறித்தது (2696); எல் லைக்கு - எல்லையாக; இட்டது - வகுத்தது; ஏடு - வாதத்தில் உண்மை காண இடும் ஏடு; இதனைக் "கரைக்கோலை" என்பது பதிகம். கரைக்கு - எல்லைக்கு.

எதிர்ந்து செல்லில் - மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நீரின் வேகத்துட்பட் டுக் கீழ்நோக்கிச் சென்றுவிடாது எதிர்ந்து மேலே சென்றால்.

ஞானம் ஈசன்பால் அன்பு - செல்லில் அதனால் காண நாட்டப்பெறும் உண்மை யாவது சிவனிடத்துச் செல்லும் அன்பே உறுதிப்பொருளாவது; "தெண்ணீர்ப் பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கில், பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே" என்ற பதிகக்கருத்து இது என்று காட்டியபடி. இப்பதிகப்பகுதி இச்சரித வரலாற்றுக்கு வலிய அகச்சான்றாய் விளங்குதல் காண்க. பெருமான் பெருமானு மன்றே - பெருமானே பெருமான் - தலைவர் - முதல்வர்; ஏனையோர் அல்லர்; ஆதலின் அவன்பா லன்புசெய்தல் கடன் என்ற பதிகக்குறிப்பை எடுத்துக் காட்டியவாறு கண்டுகொள்க.

பாட்டில் - அன்பு - என்றனர் - என்று கூட்டுக.

ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானமுண்டார் - ஞானமுண்டவராதலின் சிவஞானமே பொருள்; (ஏனைய எல்லாம் அஞ்ஞானம்) என முடித்து அருளினார் என்று காரணக் குறிப்புப்பட ஞானமுண்டார் என இவ்வாற்றாற் கூறினார்.

என்ற அத் திருப்பாட்டில் - மாநகரத்துச் சங்கம் - வைத்தவன் தேற்ற - ஏடு நீரெதிர்ந்து - அன்பே என்றனர் - என இப்பாட்டின் அங்கங்கும் பாடபேதம்

கொண்டு இப்பாட்டினை முன்பின் பாட்டுக்களாகிய ஐஞ்சீர்க் கலிநிலைத்துறையாயன்றி வேறு - அறுசீர்விருத்தம் - ஆக்கி உரைப்பன சில பதிப்புக்கள்; அப்பாடம் சொற் பொருள் யாப்புப் பொருத்தங்களின்மையாலும், பிறவாற்றாலும் சிறவாமை கண்டு கொள்க. 844

["நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்த னல்ல
எல்லார்க ளும்பரவு மீசனை யேத்து பாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரஞ் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே"—12]

2743\. வெறியார் பொழிற்சண்பையர் வேந்தர்மெய்ப் பாசு ரத்தைக்
குறியே றியவெல்லை யறிந்துகும் பிட்டே னல்லேன்
சிறியே னறிவுக்கவர் தந்திருப் பாதந் தந்த
நெறியே சிறிதியா னறிநீர்மைகும் பிட்டே னன்பால். அசடு

(இ - ள்) வெறியார்...பாசுரத்தை - மணம் கமழ்கின்ற சோலைசூழ்ந்த சீகாழி மன்னவராகிய பிள்ளையார் அருளிய மெய்ப்பொருள் விரித்த திருப்பாசுரத்தை; குறி ஏறிய...அல்லேன் - அதன் அருட்குறிப்புச் செல்லும் அளவு அறிந்து போற்றினே னல்லேன்; (ஆயின் இதுகாறும் போற்றி உரைத்தவாறு என்னை? எனில்) சிறி யேன்...அறிநீர்மை - சிறியவனாகிய எனது சிற்றறிவுக்கு அவர் தமது திருவடிகள் உணர்த்தியருளிய வழியே நின்று சிறிய அளவில் நான் அறிந்த தன்மை பற்றுக்கோடா கக் கொண்டு: அன்பால் கும்பிட்டேன் - (அறிவு காரணமாக அன்றி) அதன்பால் வைத்த அன்புகாரணமாகக் கும்பிட் டேத்தினேன்.

(வி - ரை) திருப்பாசுரப் பதிகத்தின் திருக்கடைக்காப்புப், பதிகத்தினை முடித்துக் காட்டிப் பயனும் அருள்வதுபோல அதனைச் சுட்டி எழுந்த இத்திருப்பாட்டும் ஆசிரியர் அத்திருப்பதிகத்திற்கு வகுத்த பேருரைக்குத் திருக்கடைக்காப்பாக நின்று அதனை முடித்துக்காட்டி அதன் தாற்பரியமும் பயனும் அருளியவாறு கண்டுகொள்க.

வெறி - மணம். வெறியார் பொழில் - பொழிலின் மலர்கள்தாம் இருந்த பொழி லின் இடத்தின்கண் ணிருந்தபடியே மணம் எல்லாத் திக்குக்களினும் பரவச்செய்தல் போலப் பிள்ளையார் பதிகமும் சிவமணத்தை எங்கும் பரப்புவன என்பது குறிப்பு. வெறி யேர் - என்பது பாடமாயின் வெறியும் அழகும் உடைய என்க.

குறி ஏறிய எல்லை - பிள்ளையாரது திருவுள்ளத்துட் கொண்ட குறிப்புச் சென்று பரவிநிற்கும் அளவாகிய எல்லாம். குறி - குறிப்பு; குறிக்கோள்; "உண்மைநின்ற பெருகுநிலைக் குறியாளர்" (தாண் - செங்காட்டங்குடி).

சிறியேன்...நெறியே - சிறியேன்-நெறி - யானும் சிறுமையுடையேன், எனது அறிவும் சிறிது; ஆதலின் பிள்ளையாரின் அருளுள்ளக் குறிப்புச் செல்லும் அளவு என் அறிவுசென் றெட்டாது. நெறி - அளவு.

அவர்தந் திருப்பாதம் தந்த நெறியே - சிறிது யான் - அறிநீர்மை - என் சிறிய அறிவுதானும் தானே விளங்கிக்கொள்ளமாட்டாது அவரது திருவடிப் பற் றுகிய ஞானத்தால் என் அறிவுக்கேற்றபடி அறிந்த அளவு. திருவடி, முழுதும் உணர்த் துமாற்றலும் கருணையும் உடையதாயினும் என் அறிவாகிய கொள்கலம் சிறிதாத லின் அது கொள்ளும் சிறிய அளவுக்கேற்றபடி என்பார் சிறிது யான் அறிநீர்மை என்றார்.

தும்பிட்டேன் - திருப்பாசுரத்தின் கருத்தும் பொருளும் எடுத்துரைத்து அதனை வழிபட்டதாம் என்க.

அன்பால் - ஆற்றலேனும் அறிவேனும் ஞானமேனும் காரணமின்றி அன்பே காரணமாக என்க. எல்லார் - பல்லார் - (பதிகம்) புறச் சமயிகளையும் உள்ளிட்டது பதிகப்பெயர்.

மெய்ப் பாசுரம் - உண்மைப் பொருணிலைகாட்டும் பதிகம்.

குறிப்பு:—இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை. 845

வேறு

2744. திருவுடைப் பிள்ளை யார்தந் திருக்கையா லிட்ட வேடு
மருவுறும் பிறவி யாற்றின் மாதவர் மனஞ்சென் றாற்போல்
பொருபுனல் வைகை யாற்றி லெதிர்ந்துநீர் கிழித்துப் போகும்
இருநிலத் தோர்கட் கெல்லா மிதுபொரு ளென்று காட்டி. அசச

(இ - ள்) திருவுடை...ஏடு - சைவ மெய்த்திருவையுடைய பிள்ளையார் தமது திருக்கையினால் இட்ட அவ்வேடு; மருவுறும்...போல் - பொருந்திவரும் பிறவியாகிய ஆற்றிலே மாதவர்களுடைய மனமானது எதிர்ந்து செல்லுமாறுபோல; பொருபுனல் வைகை ஆற்றில் - மிக்கு ஓடும் நீரினையுடைய வைகையாற்றிலே; இருநிலத்தோர்கட் கெல்லாம்...காட்டி - பெரிய நிலவுலகின் வாழ்வார்கட் கெல்லாம் இதுவே உண்மைப் பொருள் உடையது என்று எடுத்துக்காட்டி; எதிர்ந்துநீர் கிழித்துப் போகும் - கீழ் நோக்கிச் செல்லும் நீரின் ஓட்டத்தினை எதிர்ந்து நீரினடுவுள் அதனைக் கிழித்துக் கொண்டு மேனோக்கிப் போவதாயிற்று.

(வி - ரை) திருவுடை - திரு - சைவ மெய்த்திரு; அருள்திரு; முத்தித்திரு. ஈண்டுத் திருப்பாசுரம் பாடி ஞானோபதேசம் செய்தவகையால் பரசமய நிராகரிப்பும் சைவத்தின் ஆக்கமும் செய்து சிவஞானத்தை அருளியமை குறிப்பு.

திருக்கையால் இட்ட ஏடு - "நிலவும் திருஏடு திருக்கையால் நீட்டி இட்டார்" (2719) என்று முன்கூறியபடி இட்ட; இடையில் திருப்பாசுர விரிவுரை கூறியருளியமையால் சரிதத் தொடர்ச்சி காட்ட முன் கூறியதனையே மீண்டும் "திருக்கையால் இட்ட ஏடு" என்றருளினார்.

மருவுறும் பிறவி ஆறு - உயிர்களுக்குப் பிறவி ஒன்றன்பின் ஒன்றாக இடையறாது தொடர்பாய் வருதலின் பிறவி ஆறு என்று உருவகித்துக் கூறினார்; "பிறவாக அநாதி" என்று நூல்களுட் கூறும் மரபும் இது. மருவுதல் - இடையறாது தொடர்ந்து வினைக்கீடாக வந்து பொருந்துதல்.

பிறவி ஆற்றில் மாதவர் மனம் சென்றாற்போல் - மாதவர் - சரியையாதி சிவநெறி நிற்போர். சிவநெறி நிற்றல் தவமெனப்படும்; ஏனையவெல்லாம் இவற்றிற்கனுகூலமாய் நிற்கும் அளவே தவமென் றுபசரிக்கப்படும்; அல்லாதன அல்லவாய் அவமெனப்படும். சிவநெறியே பிறவிவழிச் செல்லாது உயிர்களை மேலேறச் செய்யவல்லதாதல் குறிப்பு. வினையும் பயனும்பற்றி எழுந்த உவமம்.

மாதவர் மனம் பிறவி ஆற்றில் எதிர்த்துச் செல்லுதலாவது மாதவர்களது மனம் ஏனையோர் மனம்போலப் புலன்வழிச் சென்று பிறவி ஏறவிடாது, புலன்களைத் தம் வயல்வழி நிற்கச்செய்து பிறவியைக் கடக்கவல்லனவாதல். "தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையார்" (1207); இவ்வுவமம் மிகச் சிறந்தபொருளை விளக்குவது. இவ்வாறு உவமை காணுதல் ஆசிரியரது தெய்வக் கவிநலங்களுள் ஒன்று.

" நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில், அலைப்பட்ட வார்வமுதற் குற்றம்போலாயினர்" (634) என்றும், "நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர், புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளினள வுளவே" (734) என்றும் முன்கூறிய உவமைகளையும் ஆண்டுரைத்தனவற்றையும் காண்க. ஈண்டுக் கூறும் பொருட் கருத்தினை அவ்வுவமைகள் விளக்குவனவாம் என்பதும் கண்டுகொள்க.

இதுவே பொருள் என்க. பிரிநிலை ஏகாரம் தொக்கது. "நீடுமெய்ப் பொருளின் உண்மை நிலைபெறும் தன்மை எல்லாம்" எழுதுக என்று (2694) அமணர் கேட்டனராதலின் அந்த மெய்ப்பொருள், முப்பொருள் நிச்சயமாம் சிவஞானமாகிய அழியாத மெய்ப்பொருள் என்றலுமாம்.

பொருள் என்று காட்டிப் போதும்-என்று கூட்டுக. சமணர் ஒட்டிய வகையால் எதிர்ந்து ஏகுதலினால் காட்டிற்று. பிள்ளையார் ஈண்டு உபதேசமுகத்தால் திருப்பாசுரம் இதுபொருள் என்று கூறியருளியபடி அப்பாசுரம் வரைந்த ஏடும் மெய்ப்பொருள் காட்டிற்று என்ற நயமும் காண்க.

திருவுடைப் பிள்ளையார் தம் திருக்கையால் இட்ட ஏடு-பொருள்காட்டிப் போதும் பிள்ளையார் திருவுடையாராதலின் அவர் மெய்ப்பொருள் காட்டுதல் தகும்; "பெம்மானிவனன்றே" என்று சிவஞானம் ஊட்டப்பெற்ற அன்றே பொருள் காட்டினாராதலின் அஃதவர்க் கியல்பாம்; அவர் தம் திருக்கையால் இட்ட ஏடும் காட்டிச் செல்லும்; அவர் திருக்கையால் இடப்பெறுதலின் என்ற குறிப்பும் நயமும் காண்க. பொருள் - "எம்பிரான் சிவனே எல்லாப் பொருள்களும் என்று" (2745) இதனைத் தொடர்ந்து வரும்பாட்டில் விரித்துத் திருப்பாசுரப் பதிகக் கருத்துக் கூறுதல் காண்க.

இருநிலத்தோர்கட் கெல்லாம் காட்டி - எல்லா நிலத்தோர்கட்கும் என்றலுமாம் விண்மண் முதலிய எல்லாப் புவனத்தோர்க்கும்; முற்றும்மை தொக்கது. எல்லாம் என்றதனால் அன்று கண்டாரேயன்றி இனி எதிர்காலத்து வருபவர்க்கு எல்லாம் என்றதுமாம்; எல்லாம் இதுபொருள் என்று கூட்டி உரைப்பினும் ஆம். மேல்வரும் பாட்டுப் பார்க்க.

எதிர்த்து நீர்—என்பதும் பாடம். 846

2745. "எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளு"மென் றெழுது மேட்டிற்
றம்பிரா னருளால் வேந்தன் றன்னைமுன் னோங்கப் பாட
அம்புய மலராண் மார்ப னனபாய னென்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூ னிமிர்ந்த தன்றே.

(இ - ள்) எம்பிரான்...ஏட்டில் - எமது பெருமானாகிய சிவனே முழுமுதற் பொருள் ஆவான் என்று எழுதும் அந்த ஏட்டிலே; தம்பிரான்...பாட - தமது பெருமானது அருளாலே "வேந்தனு மோங்குக" என்று அரசனை ஓங்கும்படி பாடியருளியமையாலே; அம்புயமலராள்...என்ன - இலக்குமியை மார்பில் உடைய அனபாயன் என்னும் பெயருடைய சிறப்புப் பொருந்திய சோழ அரசனது செங்கோலினைப்போல்; தென்னன் கூன் நிமிர்ந்தது - பாண்டியனது கூனும் அப்பொழுதே நிமிர்ந்தது.

(வி - ரை) எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்று - இது சிவபெருமானது முழுமுதற் றன்மை குறித்தது; சட சித்தாகிய எல்லாப் பொருள்களுள்ளும் நிறைந்த சர்வவியாபி என்னும் எங்குநிறைவாம் தன்மை குறித்ததென்றலுமாம். "எப்

பொருளு மாக்குவா னீசனே" (1968) என்னும் திருப்பாட்டின் கருத்தும் ஈண்டு வைத்துக் காணத்தக்கது. எல்லாம்-மெய்ப்பொருளின் முடிந்தமுடிபு என்க. "ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல வடியார்மேல், ஊனத் திரளைநீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்" (பிள். தேவா - திருவண்ணாமலை); இது திருப்பாசுரக் கருத்தாகிய முதல்வனது "அருள்", "மேலாங் கருணைத் திறம்" (2737) என அப் பதிகத்தின் இருதயத்தில் வைத்துக்காட்டிய நிலைகுறித்தது.

ஏட்டில் - பாட - ஏடு - என்றது இங்கு ஏட்டில் எழுதிய பதிகத்தில் என்ற பொருளில் வந்தது. ஏடு - அதனில் எழுதிய பதிகத்துக்காகிய ஆகுபெயர்.

**வேந்தன்றன்னை முன் ஓங்கப் பாட** - "வேந்தனும் ஓங்குக" என்றது பதிகம். **தன்னை முன் - பாட** - பதிகத்துள் வேந்தனும் என்றது பொதுப்பெயராய்ப் பின்வரும் மன்னர்கள் எல்லாரையும் குறிக்குமாயினும் அவ்வாறு குறிக்கும் மன்னர்களுள் முதலில் வருபவர் இவ்வரசனாதலின் அதன் பயன் பெற்றனன் என்பதாம். **முன்** - என்ற குறிப்புமது. இனி வேந்தனும் என்ற சிறப்பும்மையால் இதுவரை சமண் சார்ந்து "முன்செய்த தீவினைப் பயத்தினாலே, அந்நெறிச் சார்வு தன்னை அறமென நினைந்து நின்று"ராயினும் (2498) இப்போது பிள்ளையார் "தீண்டித் திருநீறு பூசப்பெற்று முன்னைவல் வினையு நீங்கி முதல்வனை அறியுந் தன்மை துன்னினான் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே" (2717) என்ற நிலைபெற்று ஞானோபதேசமும் பெறுந் தகுதி பெற்றமையால் "ஆல வாயிலான், பால தாயினார் ஞால மாள்வரே" (தேவா) என்று தொடக்கத்திற் போந்த அருட்குறிப்பின்படி அந்நிலை பெற்ற இவ்வேந்தனும் குறிக்கப்படுதல் காண்க. **முன்** - முதற்பாசுரத்தில் என்றலுமாம்.

**ஓங்க** - ஓங்குக என்ற பதிகம் அரசனது உயிரைப்பற்றிய நன்மைகளும் சிறப்பும் குறிக்குமாயினும் சொல்லாற்றலால் உடலைப்பற்றிய நிமிர்ச்சியாகிய ஓங்குதலும் குறித்து அப்பயன் விளைத்தது; இது பிள்ளையாரது அருள்மெய்த் திருவாக்கின் சிறப்பு. "குரும்பை ஆண்பனை யீன்குலை யோத்தூர்" (தேவா) என்று "ஈனுக" என்று கட்டளையிடாமலே சிறப்பாக இயல்பு கூறியமாத்திரையான் அவ்வாக்குக்கேற்ப ஆண் பனைகள் பெண்பனைகளாக உடலமைப்பின் மாறுவதும், அவை காலாந்தரத்திற் சிவத்தைக்கூடி உயிர்ச்சிறப்பான் முத்தி பெறுவதும் ஆகிய வரலாறு இங்குக் கருதத்தக்கது. "வாய்மை குலவுதலால்"; "பெண்ணையாகி" (2878); "காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்" (2881) என்பன காண்க. அன்ன பிறவும் கண்டுகொள்க.

**அம்புய மலராள் மார்பன்** - அம்புய மலராள் - இலக்குமி. அரசர்களைத் திருமாலின் கூறாகச் சொல்வதும், இலக்குமிதிருமாலின் மார்பில் வாழ்கின்றாள் என்பதும்மரபு.

**அனபாயன்...செம்பியன்** - ஆசிரியர்பால் வேண்டி இப்புராணம் பாடுவித்த அரசர்பெருமான். இவருக்குக் குலோத்துங்கர், அபயன், திருநீற்றுச் சோழர் முதலிய பல பெயர்களுண்டு; ஆயினும் அனபாயர் என்ற பெயரையே ஆசிரியர் மிகவும் வழங்குகின்றாராதலின் அதுவே பெருவழக்கில் நிகழ்ந்திருந்தது என்பது கருதப்படும்.

**செம்பியன் செங்கோலென்னக் - கூன் - நிமிர்ந்தது** - செங்கோல் நிமிர்ந்துள்ள தன்மைபோலக் கூனும் நேராக நிமிர்ந்ததன்மை பெற்றது. செங்கோல் நிமிர்தலாவது (கோட்டம்) கோணுதலின்றி நேர்செல்லுதல்; மெய்பற்றி வந்த உவமம். **செங்கோல்**- அரசாட்சியைக் குறிக்கும்.

**செங்கோல் என்ன - நிமிர்ந்தது** - என்ற உவமைக் குறிப்பினால், பிள்ளையார், வேந்தனு மோங்குக என்று அவ்வரசரை வாழ்த்தியருளியதுபோல் ஆசிரியரும், அரசனது ஆட்சியின் செம்மையை வாழ்த்திய குறிப்பும், தகுதியும், அமைதியும் கண்டு

மகிழ்க. இப்புராணத்தினுள் அனபாயரை ஆசிரியர் கூறியருளிய பதினொரு இடங்களுள் இது சிறந்த இடமாம்.*

**கூன் நிமிர்ந்தது** - ஈண்டுக் கூறியவாற்றால் அதுவரையும் பாண்டியரது உடலிற் கூன் இருந்ததென்றும், அதனால் அவர்க்குக் கூன்பாண்டியர் என்று பெயர் வழங்கியதென்றும், ஈண்டு இவ்வாறு அது நிமிர்ந்தபடியால் அவர் நின்றசீர்நெடுமாறர் ஆயினார் என்றும் சரிதம் அறிவித்த திறமும் தகுதியும் காண்க. **அன்றே** - அப்பொழுதே. 847

**2746.** ஏடுநீ ரெதிர்ந்து செல்லும் பொழுதிமை யோர்க ளெல்லாம்
நீடிய வாழ்த்திற் போற்றி நிமிர்ந்தபூ மாரி தூர்த்தார்;
ஆடியல் யானை மன்ன னற்புத மெய்தி நின்றான்;
பாடுசே ரமண ரஞ்சிப் பதைப்புடன் பணிந்து நின்றார். அசஅ

(இ - ள்) ஏடு...தூர்த்தார் - பிள்ளையார் இட்ட ஏடு வையையாற்றின் நீரில் முன் கூறியபடி எதிர்ந்து செல்லும்போது தேவர்களெல்லாம் நீண்ட வாழ்த்து மொழிகளினாலே துதித்து மிக்க பூமழை பொழிந்து நிலத்தை மறைத்தனர்; ஆடியல்...நின்றான் - ஆடும் இயல்பையுடைய யானைப்படையினையுடைய அரசன் அற்புதமடைந்து நின்றான்; பாடு...நின்றார் - பாடு சேர்கின்ற அமணர்கள் பயந்து பதைப்புடன் தலைகுனிந்து நின்றார்கள்.

(வி - ரை) **இமையோர்கள் எல்லாம் - தூர்த்தார்** - சிவனருள் வெளிப்பாடு நிகழும்போது தேவர்கள் போற்றுதலும் கற்பகப் புதுப்பூமாரி பெய்தலும் நிகழும்.

**தூர்த்தல்** - (பூவினால்) நிலத்தை மறைத்தல்; தூவுதல் என்றலுமாம். **நிமிர்ந்த** - மிகுந்த; நிறைந்த.

**ஆடியல் யானை** - யானை ஆடும் இயல்புடையது. **ஆடுதல்** - எப்போதும் அசைந்துகொண்டிருத்தல்; ஆடுதலும் இயலும் (அழகும்) உடைய என்றுரைப்பாருமுண்டு.

**அற்புதம்** - காணுந்தோறும் இன்னதென்றறியவாராது புதிது புதிதாய் விளையுந் தன்மை. "அற்புதம் அறியேனே" என்ற திருவாசகம் அற்புதப் பத்துக் காண்க.

**பாடுசே** - அழிவுசேர அணியாராகிய; **பாடு** - படுதல் - அழிதல்; தோல்வி என்றுரைப்பாருமுண்டு.

**பதைப்பு** - அச்சம். மேல் வருகின்ற அரச நீதியாகிய கொலைத்தண்டனை பெற உள்ள அச்சம். முதலிற் பிள்ளையார் அரசன்பால் வந்து அணிமணிப் பீடத்தமர்ந்தது கண்டபோதே "அமணரெல்லாங் குறிப்பினு ளச்சங் கொண்டார்' (2650) என்றபடி தொடக்கத்திலே அவர் கொண்ட அச்சம் இறுதி காட்டப் பதைப்பாக விளங்கியது.

**பணிந்து** - தலைகவிழ்ந்து.

**நின்றான் - நின்றார்** - இருதிறத்தார்பாலும் இருவேறு நிலைகள் குறித்த சொற்பின்

---

*இதுபற்றி எனது சேக்கிழார் 180 - 184 பக்கங்களிலும், அனபாயர் பெருமை பற்றி அதனுள் 31-ம் பக்கத்திலும் பிறண்டும் அனபாயரைப் பாராட்டிவைத்த இடங்களைப் பற்றி 180 - 183 பக்கங்களிலும் உரைத்தவை பார்க்க, 1213-ம் திருப்பாட்டின் உரைத்தவையும் பார்க்க.

வருகிலே; "ஏறிச் சென்றார்" (2698) என்புழிப்போலக் காண்க.

நிறைந்தபூ—என்பதும் பாடம். 848

2747. ஆற்றின்மேற் செல்லு மேடு தொடர்ந்தெடுப் பதற்கு வேண்டிக்
காற்றென விசையிற் செல்லுங் கடும்பரி யேறிக் கொண்டு
கோற்றொழி றிருத்த வல்ல குலச்சிறை யார்பின் சென்றார்;
ஏற்றுயர் கொடியி னாரைப் பாடினா ரேடு தங்க. அ௪௯

(இ - ள்) ஆற்றின்மேல்...எடுப்பதற்கு - ஆற்றிலே நீரினை எதிர்ந்து மேனோக்கிச் செல்கின்ற அந்த ஏட்டினைத் தொடர்ந்துபோய் எடுப்பதற்காக; காற்றென...பின் சென்றார் - அரசாட்சியினைத் திருந்தச் செய்யவல்ல குலச்சிறையார் காற்றுப்போல விரைந்து செல்லும் வேகமுடைய குதிரையின் மேல் ஏறிக்கொண்டு அவ்வேட்டின் பின் சென்றனர்; ஏற்றுயர்...தங்க - (பிள்ளையார்) இடபக்கொடியினையுடைய இறைவரை அந்த ஏடு மேற்செல்லாமல் ஓரிடத்தில் தங்கிநிற்கும்படி பாடினார்.

(வி - ரை) மேற்செல்லுதல் - ஓடும் நீரினை எதிர்த்து மேலே போதல்.

ஆறு - சிவநெறியாகிய வழி என்று கொண்டு ஆற்றின் - சிவநெறியின்கண்ணதாகலின் என்றலுமாம்.

எடுப்பதற்கு வேண்டி - கையில் பற்றி எடுத்துக்கொண்டு வர விரும்பி.

காற்றென - விசையிற் செல்லும் - காற்றுப்போல; வினைபற்றிய உவமம்; வாயுவேகம் என்பர். காற்றினுங் கடுக - என்பதும் பாடம்.

கடும்பரி - கடிய வேகமுடைய குதிரை; பரி - அரச அங்கமாதல் போல அமைச்சர்க்குரிய குதிரை; "வருபரி யிழிந்து" (2624).

கோற்றொழில் - கோல் - அரசனது செங்கோல்; அதன் தொழில் - அரசாட்சி.

கோற்றொழில் திருத்தவல்ல என்றது கோல் கோணியபோது செய்யும் சிறந்த முதற்கடமை. "வல்ல தமைச்சு" என்பது குறள். "அறிகொன் றறியா னெனினு முறுதி, யுழையிருந்தான் கூறல் கடன்" (குறள்) என்ற கருத்தினை ஈண்டு வைத்துக் காண்க. இக்கடமையின் மேம்பாட்டினை ஆசிரியர் தமது அரசனுக்கு உறுதிகூறித் திருத்திய அமைச்சுத் திறத்தினும்வைத்துக் காண்க.

பின் சென்றார் - ஏட்டினைப் பின்பற்றிச் சென்றனர்.

பாடினார் - பிள்ளையார் என்ற எழுவாய் அவாய்நிலையான் வந்தது. தங்கப் பாடினார் - தங்கும்பொருட்டு; தங்குக என்ற ஆணைக்குறிப்புடன் பாடினார். "எதிர்விரவும் பண்பு" (தேவா) என்று ஏடு எதிரேற நினைந்தருளிப் பாடியபடியால் அஃது ஏறுது தங்கும்படி பாடினாலன்றித் தங்காதாதலானும், அமைச்சனார் அதனை எட்டிப் பற்றிக் கொண்டு அரசன் முன்னர்க் காட்டவேண்டிய நிலைமையானும், தங்கும்படி நினைந்து பாடினார்; இஃது "வடுசென் றணைதரும்" என்ற பதிகக்குறிப்பின் வருணனையின் இலேசினாற் பெறப்படும். "குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்" என்புழிப் போலக் காண்க. 849

2748. ஏடகம் பிள்ளை யார்தாம் "வன்னி"யென் றெடுத்துப் பாடக்
கூடிய நீரி லேடு குலச்சிறை யாருங் கூடிக்
காடிட மாக வாடுங் கண்ணுதல் கோயின் மாடு
நீடுநீர் நடுவுட் புக்கு நின்றவே டெடுத்துக் கொண்டார். அ௫௦

திருப்பாசுர விளக்கம் முற்றிற்று

# திருத்தம்

| பக்கம் | வரி | | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 39 | இருவினை கரம் ஒத்து | நீக்குக |
| ,, | 40 | நிற்கப் | இரு வினைகளினும் ஒப்ப உவர்ப்புத் தோன்ற நிற்கப் |
| 27 | 29 | ஆரறிவா...நிகளமும் | நீக்குக |
| ,, | 30 | பெருமையை | பெருமையை; ஆரறிவாரந்த வகலமு நீளமும் |
| 29 | 9 | பெற்ற | விளைந்த |
| | | ஆறுசென்றவியர் | அட்டசோறு |
| 30 | 21 | புனருற்பவம் | யாவும் தன்னுள் ஒடுங்க நிற்றல் |
| 30 | 32 | மறுபயிர்க்குரிய...என்க. | நீக்குக |
| 33 | 38 | வினு | என்ற வினு<br>எதிர்மறைப் பொருளில்—ஒரு கூற்றினும் வைத்துரைத்தல் அமையாது என |
| 37 | 7 | காண்க | காண்க. இன்ன - வணங்கித் தலைநின்று கேட்க எனப் பாசுரத்திற் பணிக்கப்பட்டது - எனக் கொள்வது மரபு. |
| ,, | 13 | கோட்பால | கோள் - செயற்கையாய்க் கொள்ளப்படுவது. மூலமலம் சகசமாதலின் கோளும் கோட்பாலது ஆகாது. |
| 38 | 7 | உதாரணமாக | உவமையாக |
| ,, | 10 | நிறுத்தும் | எடுத்தோதும் மேற்கோள்களாலும் |
| ,, | 29 | மாதுக்க | மாதுக்கம் |
| 39 | 35 | என்பதுமிது | என்பது மேற்கோள் |
| 45 | 19 | கொடைப் | பொருட்டுப் |
| ,, | 20 | வந்தது. | உருபு மயக்கமாக்கி எழுனுருபு விரிக்கினுமமையும். |

# கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

வழக்கறிஞர் - சிவக்கவிமணி

**திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்**

பதித்தவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரியபுராணம்—உரையுடன் 1 பகுதி - திருமலை - தில்லைவாழந்தணர் சருக்கங்கள் (அச்சில்) ... | 10 | 0 |
| ஷை 11 பகுதி - இலைமலிந்த - மும்மையாலுலகாண்ட சருக்கங்கள் ... | 12 | 8 |
| ஷை 111 பகுதி - திருநின்ற சருக்கம் - முதற் பாகம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம் ... | 8 | 8 |
| ஷை 111 பகுதி - திருநின்ற சருக்கம் - இரண்டாம் பாகம் ... | 4 | 12 |
| ஷை 111 பகுதி 1, 2 பாகங்கள் சேர்த்துக் கட்டியது ... | 12 | 8 |
| ஷை 1V பகுதி - வம்பறு வரிவண்டுச் சருக்கம் - முதற் பாகம் - 630 பாட்டுக்கள் (6 சஞ்சிகைகள்) ... | 12 | 8 |
| கண்ணப்ப நாயனார் புராணம்—உரையுடன் ... | 2 | 8 |
| திருக்குறிப்புதொண்ட நாயனார் புராணம்—உரையுடன் ... | 1 | 0 |
| சண்டீச நாயனார் புராணம்—உரையுடன் ... | 0 | 12 |
| காரைக்காலம்மையார் புராணமும் அருணூல்களும்—உரையுடன் ... | 1 | 8 |
| அப்பூதி நாயனார் புராணம்—உரையுடன் ... | 0 | 8 |
| கருவூர் தேவர்—ஆராய்ச்சி நூல் ... | 0 | 8 |
| கண்ணப்ப நாயனார் சரிதம்—தலதேவாரங்களுடன் ... | 0 | 6 |
| திருநாவுக்கரசர் சரிதம்—ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் ... | 0 | 8 |
| திருஞானசம்பந்த நாயனார் புராணம் 9 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. (1—919 பாட்டுக்கள்) சஞ்சிகை 1க்கு விலை ... | 1 | 8 |
| திருப்பாசுர விளக்கம் ... | 0 | 8 |
| சுப்பிரமணியர் திரிசதார்ச்சனை (கிரந்தத்திலும் தமிழிலும்) ... | 0 | 4 |

---

**இவை அச்சில் :**

அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ்

மாணிக்கவாசகர் - அல்லது - நீத்தார் பெருமை

வாகீசர் - அல்லது - மெய்யுணர்தல்

சேக்கிழார்—சென்னைச் சர்வகலாசாலைப் பிரசங்கங்கள்

**கிடைக்குமிடம் :—**

**கோவைத் தமிழ்ச் சங்கம்**

வைசியாள் வீதி, கோயமுத்தூர்